Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 44 | ஞாயிற்றுக்கிழமை 09 ஜனவரி 2022 | மார்கழி 25 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 +16 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111 | விலை: 40/=

## வடமாகாணத்தில் உள்ள -
# மருத்துவமனைகளை கையகப்படுத்த மத்திய அரசு குறுக்குவழியில் முயற்சி!

யாழ்ப்பாணம், ஜனவரி 9

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட மருத்துவமனைகளை மத்திய அரசின் கீழ் கையகப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பிசுபிசுத்திருந்தன. தற்போது அதனைக் குறுக்குவழியில் கைப்பற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக வடக்கு சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 15

முச்சந்தி முரளி



"விவசாயிகளுக்கு படிப்பிக்கிறதை விட்டிட்டு முதல்ல உவர் கோத்தாவுக்குத் தான் ஒழுங்கா படிப்பிக்க வேணும் பாருங்கோ..."

## காட்டுக்குள் கஞ்சா; ஹெலியில் மீட்பு!

அம்பாறை, ஜன. 9

இலங்கை விமானப்படை மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து அம்பாறை குமண காட்டில் சட்டவிரோதமாக பயிரிடப்பட்டி 15



## நாயாற்றுக்கரையில் இராட்சதப் பொருள்

முல்லைத்தீவு, ஜன. 9

செம்மலை, நாயாற்று கடற்கரைக்கு அண்மித்த பகுதியில் இராட்சதப்பொருள் ஒன்று நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது. நேற்று அதிகாலை தொழிலுக்காகச் சென்ற மீனவர்கள், இராட்சத 15

## யாழ்ப்பாணத்தில் –
## வெதுப்பக உற்பத்திகள் நிறுத்தப்படும் அபாயம்



யாழ்ப்பாணம், ஜன. 9

கோதுமைமா விநியோகம் வழமைக்குத் திரும்பாவிட்டால் எதிர்காலத்தில் பாண் தவிர்ந்த ஏனைய வெதுப்பக பொருள்களின் உற்பத்தி 15

## விவசாயிகளுக்கு இராணுவம் வகுப்பெடுக்கும்!

*கோத்தா அறிவிப்பு*

கொழும்பு, ஜன. 9

கரிம உரங்களை எவ்வாறு இடுவது என்பது தொடர்பில் அடுத்த பெரும்போகத்தில்விவசாயிகளைதெளிவு படுத்துவதற்காக இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். 15



## கடற்கரையில் வெளிவரும் உழவியந்திரப் பாகங்கள்

*இறுதிக்கட்டப் போரில் கைவிடப்பட்டவையா எனச் சந்தேகம்*

முல்லைத்தீவு, ஜன. 9

முல்லைத்தீவு, புதுமாத்தளன் கடற்கரைப் பகுதியில் புதையுண்ட உழவு இயந்திரத்தின் பாகங்கள் மீனவர்களால் 15

## காணாமற்போன பெண் சடலமாக நேற்று மீட்பு

முல்லைத்தீவு, ஜன. 9

முள்ளியவளை பொலிஸ் பிரிவில் கடந்த 4ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்த குடும்பப் பெண் சடலமாக நேற்று 15

## வர்த்தகருக்கு வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், ஜன. 9

கல்வியங்காட்டில் புடவை வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார்தெரிவித்தனர். நல்லூர், சட்டநாதர் ஆலயத்துக்கு முன்பாக நேற்று முற்பகல் 11.30 மணிய 15

## ஒரு தொகுதி கொள்கலன்கள் விடுவிப்பு

கொழும்பு, ஜன. 9

கொழும்புத்துறைமுகத்தில் சிக்கியுள்ள அத்தியாவசியப் பொருள்களின் கொள்கலன்களை விடுவிக்க இலங்கை மத்திய வங்கி 5 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியுள்ளது. 15

## தட்டுப்பாடு இருந்தாலும் விநியோகம் நடைபெறும்

வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாண, ஜன. 9

யாழ்ப்பாண குடாநாட்டில் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவினாலும் மக்களுக்கான பொருள்களின் விநியோகம் 15

## பெண் மீது 'அசிட்' வீச்சு!

மாங்குளம் காட்டுப்பகுதியில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜன. 9

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சுகாதார உதவியாளராகப் பணியாற்றும் பெண் ஊழியர் மீது ஒட்டுசுட்டான், மாங்குளம் வீதியில் காட்டுப்பகுதியில் வைத்து இனந்தெரியாத் திராவகம் (அசிட்) வீசப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. இதனால் கண்ணில் பாதிப்படைந்த ஊழியர் 15

## சீன வெளிவிவகார அமைச்சர்–
# வந்தார்!

கொழும்பு, ஜன. 9

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு நேற்றிரவு இலங்கையை வந்தடைந்தார். இரு 15

## இந்தியத் தூதுவருடன் செவ்வாயன்று தமிழ்க் கட்சித் தலைவர்கள் சந்திப்பு

*மோடிக்கான ஆவணமும் கையளிப்பு*

கொழும்பு, ஜன. 9

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பப்படவுள்ள ஆவணம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொழும் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வளங்களைக் காக்க நாடாளுமன்றம் முற்றுகை

## தொழிற்சங்கம் அறிவிப்பு

**கொழும்பு, ஜன.9**

**திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் தொடர்பாகப் புதிதாக கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தம் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயற்பாடாகும். வலுசக்தி அமைச்சரின் செயற்பாடு திருட்டுத்தனமானது. எதிர்வரும் 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தை சுற்றிவளைப்போம். தேசிய வளங்களை பாதுகாக்க நாட்டு மக்களும் எம்முடன் ஒன்றிணைய வேண்டும்.**

இவ்வாறு துறைமுகம், பெற்றோலியம், மின்சாரம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

யுகதனவி மின் நிலையத்தின் 40 சதவீதப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் ஒப்பந்தம் திருட்டுத்தனமான முறையில் கைச்சாத்திடப்பட்டதால் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துகிறோம் என மக்கள் மத்தியில் தேசப்பற்றாளரைப் போன்று கருத்துரைத்த வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அதே திருட்டுத்தனமான செயற்பாட்டை முன்னெடுத்துள்ளார்.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் தொடர்பில் இந்திய நிறுவனத்துடன் கைச்சாத்திட்டுள்ள புதிய ஒப்பந்தம் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயற்பாடாகும். இந்த ஒப்பந்தத்தால் இலங்கைக்கு ஒரு டொலர் கூடக் கிடைக்காது.

500 மில்லியன் டொலர் கடன் அடிப்படையில் கிடைக்கின்றது. அதை வட்டியும், முதலுமாக மீள செலுத்தவேண்டும்.

பல பில்லியன் பெறுமதியான திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் மீண்டும் 50 வருட காலத்துக்கு இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தம் எதிர்வரும் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அன்று நிச்சயம் நாடாளுமன்றத்தை சுற்றிவளைப்போம். இப்போது முதல் தொடர் போராட்டத்தை முன்னெடுப்போம்.

அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி நிலைமையை சர்வதேச நாடுகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றன.

தேசிய வளங்களைப் பணயம் வைத்து அரசாங்கம் அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்கிறது. தேசிய வளங்களை பாதுகாக்க தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம்- என்றார். (எ-இ)

## ஜனாதிபதி தலைமையில் 74ஆவது சுதந்திர தினம்!

கொழும்பு, ஜன.9

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் தலைமையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் உட்பட அனைத்து நாடுகளின் இராஜதந்திரிகளும் இந்தமுறை சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். அவர்களுக்கான அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்தார்.

சுதந்திர தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் கொழும்பு மாவட்டச் செயலக கட்டடத்திலுள்ள உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதிலேயே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார். (எ-இ)

## கணக்காளர் கஜேந்திரன் கிளிநொச்சிக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.9

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்கள கணக்காளர் கே.எஸ்.கஜேந்திரன் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வருடாந்த கணக்காளர் சேவை இடமாற்றத்தின் கீழ் எதிர்வரும் 18ஆம் திகதி தனது கடமைகளை ஏற்கும் வகையில் அவர் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் மற்றும் கல்வி திணைக்களம் என்பவற்றில் அவர் நீண்ட காலமாக கணக்காளராகப் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)



## செட்டிகுளம் மருத்துவமனைக்கு குருதிச் சுத்திகரிப்பு இயந்திரம்

வவுனியா, ஜன.9

வவுனியா- செட்டிகுளம் மருத்துவமனைக்கு குருதிச் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி ஒன்று நேற்றுக் கையளிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் 25 லட்சம் ரூபா பெறுமதியான இந்த இயந்திரத் தொகுதி மருத்துவமனைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைப் பணிப்பாளர் கு.அகிலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், புத்திக பத்திரண, ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் உமா சந்திரபிரகாஸ், வன்னி மாவட்ட அமைப்பாளர்கள், மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட மருத்துவமனை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்

அதேவேளை, வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கும் நேற்றுமுன்தினம் சஜித் பிரேமதாஸவால், குருதிச் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி வழங்கப்பட்டிருந்தது. (எ-110)



## எளிமைமிகு பரிபாலக ஆளுமை கைநூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 9

வடமாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் எழுதிய 'எளிமைமிகு பரிபாலக ஆளுமை' என்ற கைநூல் வெளியீடு நல்லை ஆதீன மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் பரிபாலகர் அமரர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் நற்செயற்பாடுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ள இந்த நூலின் வெளியீட்டுக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தலைமை தாங்கினார்.

யாழ். மாவட்ட இந்து அமைப்புகளின் ஒன்றிய செயலாளர் இ.இரத்தினசிங்கம் வரவேற்புரையையும், நிகழ்வில் நல்லை சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் ஆகியோர் கருத்துரைகளையும், யாழ். மாவட்ட இந்து அமைப்புகளின் ஒன்றிய நிர்வாக சபை உறுப்பினர் ச.லோகசிங்கம் நன்றியுரையையும் ஆற்றினர்.

நூலின் முதல் பிரதியை நல்லூர் ஆலய தொண்டர் கண்ணன், நல்லை ஆதீன முதல்வரிடம் இருந்து பெற்றுக்கொண்டார். இதைனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் கைநூல் இலவசமாக வழங்கப்பட்டது. (ம)

## ஹெரோய்ன் கடத்தல் இரு தம்பதியர் கைது!

வவுனியா, ஜன.9

ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு பெண்கள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த கார் ஒன்று வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் பொலிஸாரால் சோதனையிடப்பட்டது. சோதனையின்போது காரில் இருந்த 63.84 கிலோகிராம் ஹெரோய்ன் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காரில் பயணித்த இரு தம்பதியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களுடன் 4 மற்றும் 9 மாதக் குழந்தைகளும் காரில் பயணித்துள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் சாவகச்சேரி மற்றும் மதவுவைத்தகுளம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-110)

# பிணைமுறி மோசடி தொடர்பான சாட்சியப் பட்டியல் நீதிமன்றத்தில்!

கொழும்பு, ஜன.9

2015 ஆம் ஆண்டு நடந்த முறிகள் மோசடி தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் உள்ளிட்ட பிரதிவாதிகள் 10 பேருக்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள கணினி சாட்சியங்களின் பட்டியலை சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தின் விசேட மூவர் அடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் சமர்ப்பித்துள்ளார். நீதிபதிகள் குழாமின் அனுமதிக்கமைவாக சாட்சிப் பட்டியலின் பிரதிகள், பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 04 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற இந்த முறிகள் மோசடி தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் உள்ளிட்ட பிரதிவாதிகள் 10 பேருக்கு எதிராக சட்ட மா அதிபரால் 23 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






(ct.36993)

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தில் இளங்கலை மாணவருக்கு முதலாவது ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் ஏற்பாட்டில் இளங்கலைப் பட்டதாரி மாணவர்களுக்கான ஆய்வு மாநாடு நாளை நடைபெறவுள்ளது. 'சமத்துவம், நீதி மற்றும் மேம்பாட்டுக்கான மனிதப்பண்பியலும் சமூக விஞ்ஞானங்களும்' எனும் பிரதான தொனிப்பொருளில் இந்த ஆய்வு மாநாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த ஆய்வு மாநாட்டுக்காக ஆய்வுக் கட்டுரைகள் மாணவர்கள் மத்தியிலிருந்து கோரப்பட்டபோது, அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் துறைசார்ந்த மதிப்பீட்டுக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு, தெரிவுசெய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளே இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

கலைப் பீடாதிபதி பேராசிரியர் க.சுதாகர் தலைமையில் நடைபெறவுள்ள மாநாட்டுக்கு பிரதம அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்து கொள்கிறார். மாநாட்டின் சிறப்பம்சமாக நாளை காலை 8.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள அங்குரார்ப்பணநிகழ்வில் பிரதான திறவுரைகளை அமெரிக்காவின் சலிபியூரி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் எஸ்.ஜ.கீதபொன்கலன், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் முன்னாள் பேராசிரியர் சாந்தி செகராஜசிங்கம், பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ம.மகேஸ்வரன், கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். ஜெயசங்கர் ஆகியோர் துறைசார்ந்த கருப்பொருள்களில் நிகழ்த்தவுள்ளனர்.

பிற்பகல் அமர்வானது சட்டமும் ஒழுங்கும், சமயமும் மெய்யியல் விசாரமும், மொழி, இலக்கியம் மற்றும் கலைகள், அரசு, ஆட்சி மற்றும் ஊடகம், சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் மேம்பாடு, வரலாறு, மரபுரிமை மற்றும் பண்பாட்டுப் பல்வகைமை, சமூகம், மக்கள் பங்கேற்பு மற்றும் சமூகப்பணி, சுகவாழ்வு மற்றும் நன்னிலை எனும் தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட எட்டு ஆய்வுத் தடங்களில் ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கவுள்ளனர். இந்த ஆய்வுத் தடங்களை துறைசார் பேராசிரியர்கள் தலைமையேற்று நடத்தவுள்ளனர்.

இளங்கலை மாணவர்களுக்கான இந்த ஆய்வரங்கில் கடந்த வருடம் கலைப் பட்டதாரிகளாக வெளியேறிய 100 மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நிகழ்வுகளை நிகர்நிலையிலும் நேரலையிலும் ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஊடகப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

சட்டமும் உரிமைகளும், சமயக் கொள்கைகளின் சமூகநோக்கு, கல்வியின் மெய்யியல் மற்றும் நடைமுறைப் பரிமாணங்கள், மரபுக் கலைகளும் அவற்றின் பேணுகையும், இலங்கையின் அரசியல் போக்குகளின் அடிப்படைகளும் மாற்றங்களும், மீள்குடியேற்ற, நல்லிணக்கம் மற்றும் சமூக, பொருளாதார மேம்பாடு, இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பொருளாதார இருப்பு, உலகளாவிய இனரீதியான பாரபட்சம், அரசியலில் பெண்கள் பங்கேற்பு, இலங்கையின் பிராந்திய இயற்கை வளப் பாதுகாப்பு, நுண்நிதிக்கடனும் குடும்ப வாழ்வும், இடர்களும் முகாமைத்துவமும், சமூகத்திட்டமிடல், மரபு மற்றும் நவீன கலை இலக்கிய கருத்தாடல்கள், தொழில் வாய்ப்புக்களும் சவால்களும், கொரோனா கால சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டுப் பிரச்சினைகள் என பல்வேறு பொருளில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஆய்வுக் கட்டுரைகள் சர்வதேசம், தேசம், பிராந்தியம், பிரதேசம் எனும் தளங்களில் உள்ள விடயங்களை ஆய்வு நெறிகளுடன் சிந்திக்கவும், விவாதிக்கவும் புலமைசார்ந்த களமாக இந்த மாநாடு அமையவுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் ஜெயனொளிபவன்

**(முன்னாள் அதிபர் - கொக்குவில் CCTMS,
முன்னாள் ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி)**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், உடுவில், கொக்குவில், கொழும்பு கொட்டாஞ் சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஜெயனொளிபவன் 08.01.2022 கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், அரியமலரின் பாசமிகு கணவரும், ரவிராஜ் (U.K), ரஜனி (ஜேர்மனி), பிரதாபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிரூபா, சண்முகேஸ் வரன், நளினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம், குகதாசன், மகாதேவி ஆகியோரின் சகோதரனும், காலஞ் சென்றவர்களான பரமேஸ்வரி, பத்மரஞ்சினி, மகாதேவன் மற்றும் இன்பமலர் (கனடா), செல்வமலர் (கொழும்பு), முருகதாஸ் (U.K), இந்திராஜோதி (U.K) ஆகியோரின் மைத்துனரும், டானியா, கிஷான், மதுஷா, அருகன், ஓவிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை 10.01.2022 மாலை 3.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**அரியமலர் (மனைவி)**
**ரவிராஜ், ரஜனி, பிரதாபன் (பிள்ளைகள்)**

**தொலைபேசி:**
**077 293 6498**

ரயிலில் மீட்கப்பட்ட

# பயணப் பொதியில் போதைப்பொருள்!

**மன்னார், ஜன. 9**

**தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் உரிமை கோரப் படாத நிலையில் மீட்கப்பட்ட பயணப்பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ்போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.**

தலைமன்னார் ரயில் நிலையத்திலிருந்து கொழும்புநோக்கி நேற்றுக் காலை சென்ற ரயில் தோட்டவெளி ரயில் நிலையத்தை அடைந்தபோது அங்கு இராணுவத்தினர் சிலர் ரயிலில் ஏறியுள்ளனர். இதன்போதே கைவிடப்பட்ட நிலையில் மேற்படி பயணப்பொதி அவதானிக்கப்பட்டுள்ளது. அந்தப் பயணப்பொதியை இராணுவத்தினர் சோதனை செய்த போது 360 கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பயணப்பொதி மேலதிக விசாரணை மற்றும் நடவடிக்கைகளுக்காக சௌத்பார் இராணுவத்தால் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ம-56)

# விண்ணப்பம் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால், யாழ்.மாவட்டத்தில் முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் கடந்த 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


இந்தக் கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர் , சுன்னாகம், பண்டத்தரிப்பு, வல்வெட்டித்துறை ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளது.

கணினிப் பிரயோக உதவியாளர், கணினி வன்பொருள் திருத்துனர், மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்). காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), டீசல் இயந்திர திருத்துநர், முச்சக்கரவண்டி திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், கட்டட நிர்மாண உதவியாளர், முதியோர் பராமரிப்பாளர், சிறுவர் பராமரிப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர், வரவேற்பாளர், சமையலாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர் ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில், நேரிலோ அல்லது தபாலிலோ எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப்பணிப்பாளர், மாவட்ட அலுவலகம், 4ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு அறிவித்துள்ளனர்.

(ஒ-ரி1)

# மரண அறிவித்தல்



## அமரர் திரு. கிருபானந்தன் நிஷாந்தன்

யாழ்ப்பாணம் நல்லூர் அரச வீதியைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பு 37. சோமசுந்தரம் லேன் இனை வசிப்பிடமாகவும் கொண்ட கிருபானந்தன் நிஷாந்தன் நேற்றுமுன்தினம் (07.01.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தமிழ்மணி சுபகணேச சுந்தரம் மற்றும் சண்முகவடிவு, காலஞ் சென்ற பொன்னையா, கனகம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற திரு. கிருபானந்தன் மற்றும் ஸ்ரீகௌரி தம்பதியினரின் அன்பு மகனும், சைமன்குணநாயகம் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், றொசானி (MLT) இனது அன்புக் கணவரும், அக்ஷான், ஆத்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரூபிகா (USA), கோபிகா (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமிலஸ் (சம்பத் வங்கி), ஹோமஸ் (இத்தாலி), சயந்தன், (Canada) விமோனிஷ் (USA) ஆகியோரின் அன்பு மைத்துனரும், யாத்வி, ஆரோன், ஏகா, கான்ஸ்ரீனா, கஜீசன், க்ளௌடியோ ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வலன்ரீனா, ஸ்ரீமாலி ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும், காலஞ்சென்ற ஸ்ரீ முருகதாஸ் (லண்டன்), நல்லை க.கண்ணதாஸ் (இசைத்துறை- யாழ். பல்கலைக்கழகம்), ஸ்ரீகுகன் (இசையமைப்பாளர், சப்தஸ்வரா இசைக் கலையகம்), ஸ்ரீ மோகனதாஸ் (வற்றாப்பளை) இசைப்பிரியன் இசையமைப்பாளர், பெல்ஜியம்) ஆகியோரின் பாசத்துக்குரிய மருமகனும், திரு.ஸ்ரீஸ்கந்தராஜா (அவுஸ்திரேலியா), திரு. சண்முகராஜா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற விவேகானந்தராஜா (அவுஸ்திரேலியா), பவானந்த ராஜா, கனடா), சற்குணானந்தன் (கனடா), சூரியகாந்தன் (மட்டக்களப்பு) ஸ்ரீமனோகரி சிவராமன், ஸ்ரீதேவி ஜெகதீஸ்வரன், ஸ்ரீறஜனி சுபாகரன் ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு வைற்ஹவுஸ் (white house) மலர்ச்சாலையில் நடைபெற்று புகழுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**நல்லை க.கண்ணதாசன் - 077 034 3571**
**ஸ்ரீகுகன் - 077 698 0573, கமிலஸ் - 077 758 9730**
**க.மோகனதாஸ் - 077 971 7642**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 03 . 1957



இறப்பு 08 . 01 . 2022

## திரு.நாகமணி செல்வசிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர்-யாழ். பல்கலைக்கழகம்)**

கலைமகள் வீதி, அரியாலையை பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி செல்வசிங்கம் அவர்கள் நேற்று (08.01.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி பாக்கியலச்சுமி தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற செல்லையா இராசம்மாவின் அன்பு மருமகனும், இந்திராவதி அவர்களின் பாசமிகு கணவரும், யோகராசா, காலஞ்சென்ற யோகாம்பிகை, யோகநாதன், வசந்தாதேவி, திருச்செல்வம் ஆகியோரின் அன்பு சகோதரனும், பாலதீபன், ஜெனனி விஜயதீபன், தனுரேகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிருபா, தனுராஜ், கனுஷ்ரிகா, ஜொசிங்ரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், இசைந்தியன், மித்திராஜித், ஜொஸ்மிகா ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**செ.விஜயதீபன்**
**நாவலர் பாடசாலைக்கு அருகில்**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**
**077 233 4989**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 9
காரைநகர், கிழவன்காடு கலாமன்றத்தின் ஏற்பாட்டில், 'கலாமன்ற வளர்ச்சிக்கான ஆலோசனையும் ஆதரவும்' பற்றிய கலந்துரையாடல் இன்று பி.ப. 2 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் கலைஞர்கள் மற்றும் அறிஞர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளதால் அனைவரையும் வருகை தருமாறு மன்றத்தலைவர் ந.சோதிநாதன் அறிவித்துள்ளார். (ம-ரி1)

## இருநூல்களின் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜன.9
புதிய நதியா நகைமாடம் மற்றும் தாய்சக்தி கலைக்கூடம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், கவிஞர் வேலணையூர் சுரேஷின் 'மானிடப் பேரிடர்' மற்றும் 'குறும்புப் பா-100' ஆகிய இரு நூல்களின் அறிமுகவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீராவியடிப் பிள்ளையார் கோயிலடியில் உள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.
யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினர்களாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.போதனா மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் மருத்துவர் சி.சிவன்சுதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.
சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர ஆணையாளர் கவிஞர் த.ஜெயசீலன், கௌரவ விருந்தினர்களாக புதிய நதியா நகைமாட உரிமையாளர் பிரபல தொழிலதிபர் ச.ஜெயதீஸ்வரன், புளியங்கூடல் இராஜமகாமாரி அம்மன் ஆலய அறங்காவலர் சி.செந்தூரன், கோப்பாய் கலாசார உத்தியோகத்தர் பா.ஜெயதாசன், கல்வியங்காடு கிராம அலுவலர் சி.தயாபரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.
நிகழ்வில் 'மானிடப் பேரிடர்' நூலினை கல்வியமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் வெளியிட மண்கும்பானூர் கண்ணன் முதற்பிரதியைப்பெறவுள்ளார்.
'குறும்புப் பா' 100 நூலை மருத்துவர் சி.சிவன்சுதன் வெளியிட ஆலய அறங்காவலர் சி.செந்தூரன் பெற்றுக்கொள்வார். (ச)







# பொருள் விலையேற்றத்துக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜன.9
**அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில், வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.
'உழைக்கும் மக்களை பட்டினி போடாதே', 'கட்டுப்பாட்டு விலையைக் கொண்டுவா', 'ஊழல் பணத்தை வெளியே கொண்டுவா', 'உழைப் போரை வதைக்காதே', 'தேர்தல் வாக்குறுதி என்னாச்சு?' போன்ற வாசகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் செயலாளர் சி.கா.செந்தில்வேல், கட்சியின் முக்கி யஸ்தர்களான செல்வம் கதிர்காமநாதன், நி.பிரதீபன், வவுனியா தமிழ் அரசுக் கட்சியின் அமைப்பாளர் ந.கருணாநிதி, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளையின் தலைவர் பா.நேசராஜா, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் உட்பட பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-110)

# வயற்காணி இடாப்பை மீள்திருத்த ஒத்துழைக்குமாறு கோரிக்கை

மன்னார், ஜன.9
மன்னார் மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டுக்கான வயற்காணி இடாப்பு மீள் திருத்தப் பணிகள் இந்த மாதத்துக்குள் முடிவுறுத்தப்படவுள்ளதால், விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ. மரின்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
வயற்காணி இடாப்பு மீள் திருத்தப் பணிகள் மன்னார் மாவட்ட கமநல சேவைகள் நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. மன்னார் மாவட்டத்திலுள்ள 13 கமநல சேவைகள் நிலையங்களிலும் வயல் காணிப் பதிவேடுகளை விவசாயிகள் பார்வையிட முடியும்.
கமக்காரர்கள் தங்கள் வயற்காணி அமைந்துள்ள கமநல சேவை நிலையங்களில் விண்ணப்பப் படிவங்களைப்பெற்று முழுமைப்படுத்தி தேவையான ஆவணங்களுடன் கமநல சேவை நிலையங்களில் சமர்ப்பித்து, தங்கள் வயற்காணிப் பதிவைத் திருத்திக்கொள்ள முடியும்.
தங்கள் காணி தொடர்பில் இதுவரை உரிய ஆவணங்களை சமர்ப்பிக்காத கமக்காரர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தங்கள் காணிப் பதிவை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.
வயற்காணி இடாப்பு மீள்திருத்தம் தொடர்பான மேலதிக விவரங்களை அவரவர் பகுதிக்குப் பொறுப்பான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் அல்லது கமநல சேவை நிலையங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும்.
2022 ஆம் ஆண்டுக்கான வயல் காணி இடாப்பு மீள்திருத்த வேலைகள் இந்த மாதத்துக்குள் முடிவுறுத்தப்படவுள்ளமையால் சுகாதார வழிகாட்டல்களுக்கமைய கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி இந்த வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (எ-56)

# கல்வியங்காடு பிறிமியர் லீக் தொடர் கல்வியங்காடு ரைனோஸ் சம்பியன்!

யாழ்ப்பாணம், ஜன. 9
கல்வியங்காடு பிறிமியர் லீக்கின் (கே.பி.எல்.) இரண்டாவது பருவகால தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கல்வியங்காடு ரைனோஸ் அணி தனதாக்கியுள்ளது.
ஞானபாஸ்கரோதய சங்கம் நடத்திய கல்வியங்காடு பிறிமியர் லீக்கின் இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை இரவு 7 மணிக்கு ஜீ.பி.எஸ். விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் கல்வியங்காடு ரைனோஸ் அணியை எதிர்த்து கல்வியங்காடு நைட் ரைடஸ் அணி மோதியது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கல்வியங்காடு ரைனோஸ் அணியின் தலைவர் முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கல்வியங்காடு நைட் ரைடஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 72 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
73 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய கல்வியங்காடு ரைனோஸ் அணியினர் 9 பந்துப் பரிமாற்ற முடிவிலேயே வெற்றிஇலக்கை அடைந்தனர். இப் போட்டியின் ஆட்டநாயகனாக கல்வியங்காடு ரைனோஸ் அணி வீரர் மதுசன் தெரிவு செய்யப்பட்டார். மேலும் கல்வியங்காடு பிறிமியர் லீக்கின் தொடராட்ட நாயகனாக கல்வியங்காடு ரைனோஸ் அணி வீரர் தாருகாசன் தெரிவு செய்யப்பட்டார்.
இத் தொடரில் வெற்றிபெற்ற அணிக்கான வெற்றிக்கிண்ணத்தை நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் வழங்கி வைத்தார். (ம-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாளொரு நல்வார்த்தை**

"வரலாற்றில் மகத்தான சம்பவங்கள் இரண்டு முறை நிகழ்கின்றன. முதல்முறை அது அவல மாகவும் இரண்டாம் முறை கேலிக் கூத்தாகவும் முடிகின்றது" - கார்ல் மார்க்ஸ்

## பாண் புராணம்...!

ஒரு காலத்தில் ஏழைகளின் தோழன் என்று செல்லமாக அழைக்கப்பட்ட பாண், இப்போது பணக்காரர்களுக்குக் கூட கிட்டாத உணவாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. 'கோதுமை மாவைப் பெறுவதில் பேக்கரிகள் பெரும் இடரை எதிர்நோக்குகின்றன. இதேநிலைமை நீடித்தால், மிகவிரைவில் ஒரு இறாத்தல் பாணைக்கூட கியூவில் நின்று தான் மக்கள் வாங்கவேண்டியிருக்கும்' என்றொரு அபாய அறிவிப்பை விடுத்திருந்தார் இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன.

'நாட்டில் உள்ள 7500 வெதுப்பகங்களில் தற்போது வெறும் 3000 வெதுப்பகங்கள் மாத்திரமே இயங்குகின்றன. காரணம், கோதுமை மாவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடே. வெதுப்பகங்களுக்குத் தேவையான மாவின் 75 வீதம் மாத்திரமே தற்போது விநியோகிக்கப்படுகின்றது. இதனால் தற்போது பாணை மாத்திரமே உற்பத்தி செய்யமுடிகின்றது. ஏனைய வெதுப்பக உற்பத்திகளை கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதேநிலை தொடர்ந்தால் பாண் உற்பத்தியும் பாதிக்கப்படும்' என்று சொல்கிறார் யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளரான கந்தசாமி குணரட்னம். இவ்விருவரின் கருத்துக்களும் இனிவரும் நாள்களில் நாட்டில் ஏற்படப் போகும் உணவுப்பஞ்சத்தையே கோடிகாட்டி நிற்கின்றன.

போர்க்காலங்களில், பொருளாதாரத் தடை விதிக்கப் பட்ட போது வடக்கு, கிழக்கு மக்களின் உணவுத்தேவையின் பெரும்பகுதியை பாண் தான் பூர்த்திசெய்தது. அதன் பின்னர் தற்சார்புப் பொருளாதாரத்தை மக்களோடு இணைந்து புலிகள் கட்டியெழுப்பியதால், பொருளாதாரத்தடையை தமிழ் மக்கள் மிகச் சாதாரணமாகக் கடந்திருந்தார்கள். அந்தக் கடப்புக்கு பாணும் கைகொடுத்தது. போசாக்கு இல்லாத உணவாக இருந்தபோதும், மிகமிகக் குறைந்த விலையில், சொற்ப சம்பளத்தைப் பெறுபவர்கள் கூட வயிறார உண்ணக்கூடிய பண்டமாக பாண் இருந்தது. ஒருநாளைக்கு வேலைக்குப் போய் உழைக்கும் காசில், ஒரு சிலவாரங்கள் பாணை மட்டுமே உண்டு பசியைப் போக்கியவர்கள் பலர். இடப்பெயர்வுகளின் போது, இருக்க இடமே இல்லாத நிலையில், உணவை எப்படி மக்கள் தயாரிக்க முடியும்? அப்போதும் பாண் தான் கைகொடுத்தது. இப்படி பாண் ஒருபக்கம் மக்களின் பசியைப் போக்க, அதற்குச் சமாந்தரமாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உள்ளிட்ட அமைப்புகள் மூலம் உள்ளூர் உற்பத்திகளையும் , புதிய கண்டுபிடிப்புகளையும், பொறிமுறைகளையும் விடுதலைப்புலிகள் உருவாக்கினர். நெல், பயறு, எள், உளுந்து , குரக்கன் என்று தானிய வகைகளில் தமிழர் பகுதி தன்னிறைவு அடைந்தது. வெறுமனே கோதுமை மாவில் செய்யப்பட்ட பாணும் பின்னர் குரக்கன் உள்ளிட்ட போசாக்கு நிறைந்த தானியங்கள் உள்ளடக்கப்பட்டு , உற்பத்தி செய்யப்பட்டது. அதனால் உணவுப்பஞ்சமென்ற ஒன்று போர்க்காலத்தில் தமிழர் பகுதிகளில் இல்லாமலே போயிற்று.

தமிழர்களுக்கு முன்னரேயே பாணும், பருப்பும் இல்லாமல் வாழவே மாட்டோம் என்கிற மனோநிலை கொண்டவர்கள் சிங்கள மக்கள். அதனால்தான் மூடிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்டுவந்து, சிங்கள மக்களின் பாண் கனவில் மண்ணள்ளிப் போட்ட சிறிமாவோவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருந்தது. ஒரு பாணுக்காக சிறிமாவோ நடைமுறைப்படுத்திய எத்தனையோ நல்ல திட்டங்களைக்கூட சிங்களமக்கள் கண்டுகொள்ளவில்லை. வரலாறு மீண்டும் திரும்பியிருக்கிறது. சிறிமாவோவின் காலத்துக்குப் பிறகு முதன்முறையாக நாடெங்கும் பாணுக்கும் தட்டுப்பாடு வரப்போகின்றது. அதற்கான நிர்ணயவிலைகூட இப்போது இல்லை. அதனால் வெதுப்பக உரிமையாளர்கள் சொன்னவிலைக்கே பாணை வாங்க வேண்டிய நிலை. காலப்போக்கில், என்னவிலை கொடுத்தாலும் வாங்கமுடியாத வஸ்துவாக பாணும் மாறக்கூடும். இப்போதே எரிபொருள் , அத்தியாவசியப் பொருள்கள் என எல்லாவற்றினதும் விலைகள் உயர்ந்து கொண்டே செல்வதாலும், பொருள்களுக்கான தட்டுப்பாடு நீடிப்பதாலும் கொதிநிலையில் உள்ள மக்களை, பாணுக்கு ஏற்படப்போகும் தட்டுப்பாடு அரசாங்கத்துக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடவும் வைக்கும். யார் கண்டது, புலிகளைத் தோற்கடித்தோம் என்று மார்தட்டும் ராஜபக்சக்களின் ஆட்சியை , பாண் தோற்கடித்தது என்று எழுத வரலாறு காத்திருக்கிறதோ, என்னவோ...?




# அரசாங்க அழுத்தத்தால் செயற்படுகிறார் ஆளுநர்

### நிரோஷ் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜன. 9**

**நாட்டில் '13'ஆவது திருத்தத்தால் செய்யவேண்டிய பணிகள் அதிகமுள்ளன. அதை விட்டுவிட்டு ஆளுநர் அரசின் அழுத்தத்தால் பல்வேறு விடயங்களை வடக்கில் செய்கிறார் - என்று வலி.கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார்.**

யாழ். ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை அரசு இப்போது என்ன செய்கிறது என்றால், மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்களைக் கிள்ளி எறிந்து அதையும் மத்தியின்கீழ் தந்திரமாக எவ்வாறு கையகப் படுத்தலாம் என்று செயற்பட்டு வருகிறது. அதற்கு அவர்கள் பயன்படுத்தி வரும் ஆயுதம்தான் உள்ளூராட்சி சபைகள்.

உள்ளூராட்சி சபைகளின் கீழுள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்குக்கூட நாம் மத்தியில் தங்கிநிற்கும் நிலையில், வடக்கு மாகாணத்தில் ஆளுநரைப் பயன்படுத்தி இப்போது புதிய நாடகங்கள் நடைபெறுகின்றன.

ஆரியகுளத்தில் மத நல்லிணக்கத்தை இல்லாமற் செய்வது அரசியலமைப்பை மீறுகிறது என்று ஆளுநர் தெரிவித்துள்ளார். ஆகவே ஆரியகுளம் எவருடைய சொத்து என்பது உள்ளிட்ட பல கேள்விகளை ஆளுநர் இப்போது முன்வைத்துள்ளார்.

இலங்கையில் மத நல்லிணக்கத்தைப் பகுத்தாராய வேண்டிய தேவையுள்ளது. அந்த வகையில் மதரீதியான ஆக்கிரமிப்புக்கள் குருந்தூர்மலையில் இடம்பெற்றுள்ளது. அதேபோன்று நாவற்குழியில் விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஆரியகுளத்தில் மதரீதியான குழப்பங்களை அரசு ஏற்படுத்துவதை நாங்கள் கண்டிக்கின்றோம்.

வடக்கு மாகாண ஆளுநருக்கு அரசு கொடுக்கும் அழுத்தம் காரணமாகவே இது நடக்கிறது. முன்னரும்கூட குளத்தின் நடுவில் மத நல்லிணக்க மண்டபத்தைக் கட்டுவதற்கு தேரர் ஒருவர் மாநகர சபைக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அரசியல் அமைப்பில் உள்ளதை இதற்கு மட்டுமே பயன்படுத்தும் நோக்கில் ஆளுநர் செயற்பட்டு வருகின்றார். என்றார். (ம-20)

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவேந்தல் நாளை

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் 48ஆவது நினைவு தினம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்குக் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தில் நினைவஞ்சலி மேற்கொள்ளப்படும். பொதுமக்கள் மற்றும் ஆர்வலர்கள் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் விருந்துபசாரத்தின்போது வன்முறைக் கும்பலொன்றி னால் நடத்தப்பட்ட தாக்குதலில் மாநாட்டில் கலந்துகொண்டிருந்த 11 பேர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-20-125)

**நாளை** 10.01.2022 திங்கட்கிழமை மார்கழி 26

சுபநேரம் : 12.33 - 02.03
ராகுகாலம் : 08.03 - 09.33

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



12ம் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

jitf.lk
www.jitf.lk

JITF 2022

ஜனவரி 2022
21 | 22 | 23
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)
10.00 மு.ப - 8.00 பி.ப

CONCURRENTLY WITH
Higher Education & Career Exhibition
KALVI JAFFNA 2022

Imalka 071 748 8107
imalka@saexhibitions.com

ORGANIZED UNDER MINISTRY OF HEALTH GUIDELINES

MAIN SPONSOR: INSEE CEMENT
CO - SPONSOR: SLTMOBITEL
OFFICIAL PARTNERS
ORGANIZED BY: LECS
ENDORSED SUPPORTED BY
PARTNER COUNTRY: India

## தானியம் விற்பனைக்குண்டு

நெல் சிவப்பு 406 1Kg 90
எள்ளு கறுப்பு 1Kg 450

**077 786 5637**

## மணமகள் தேவை

1983 இல் பிறந்த கொழும்பை சேர்ந்த படித்த சுயதொழில் செய்யும் மணமகனுக்கு 7 இல் செவ்வாய் தோஷம் அற்றது பொருந்தக்கூடிய படித்த அழகிய மணமகளை எதிர்பார்கின்றோம். (உள்நாட்டு / வெளிநாட்டு)

**075 669 6801, 011 259 8824**

## வீடு வாடகைக்கு

இல.50, ஆடியபாத வீதி, கொக்குவில் (மேற்கு) வீடு வாடகைக்குண்டு.
மாதவாடகை - 30000/=

**077 201 4448, 077 933 0057**

## வீடு வாடகைக்கு

1.2, 3 படுக்கையறைகள் நாள், கிழமை, மாத வருட வாடகைக்குண்டு Full Furnished, சமையலறை உபகரணங்கள். Washing Machine, Fridge, Hot Water, Private Car Park, Security

**Euro Homes Shiva, 077 143 4343**

## வேலைக்கு ஆள்கள் தேவை

தங்கி நின்று வீட்டுவேலை பார்ப்பதற்கு பெண் வேலையாள் ஒருவர் தேவை.
(வயது - 35 -55 விரும்பத்தக்கது)
ஞாயிறு விடுமுறை நாள்

இல.41/3, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்.

**077 129 3025**

CS 42125 (2.6)

## காணி விற்பனைக்கு

கரந்தன் கேணியடிப்பகுதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(பரப்பு 1300,000/=)
தரகர் தேவையில்லை.

**077 009 4847**

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் 4 வயது ஆண்பிள்ளையை பராமரிக்க பணிப்பெண் தேவை. தேவைப்படின் தங்குமிடம் வழங்கப்படும்.

**076 209 9227**

## வேலையாள் தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள ஏலக்ரோனிக் Showroom ஒன்றுக்கு கணினி அறிவுடைய ஆண்/பெண் பணியாளர்கள் தேவை.

யாழ்ப்பாணம் **077 358 3879**

## வீடு வாடகைக்கு

மு/ புதுக்குடியிருப்பு, கைவேலி, திம்பிலி வீதியில் இணைந்த குளியலறை மற்றும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.

**077 166 2959**

## முதியவர்களுக்கான வெற்றிடங்கள்

நல்லூர் கோயிலுக்கு மிகவும் அண்மையில் வைத்திய வசதி, தாதிய வசதி, உணவு வசதிகளுடன் அமைந்து வரும் திருவாசகம் முதியோர் இல்லத்திற்கு புதிதாக இணைய விரும்பும் முதியவர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

**077 934 9511**
**0044 7903 776549**

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப் பட்டிருக்கும் B- உடைய 29 வயது பெண் ஒருவருக்கு B-, B+, O-, O+ குருதியைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு:
**076 655 3718**

(CS 989) 1-6

# அடகு வைத்து மீட்டெடுக்க இயலாது போன

## உங்களது தங்க நகைகள் மீண்டும் உங்களது கைகளுக்கு

நீங்கள் தற்பொழுது அடகு வைத்திருக்கும் ரசீதனை எமது **076 788 8222** என்ற இலக்கத்திற்கு Whatsapp செய்யவும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.**

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 622 7250 | மட்டக்களப்பு | 076 622 7243 |
| சுன்னாகம் | 071 087 0689 | ஹட்டன் | 077 879 0372 |
| கிளிநொச்சி | 076 622 6964 | யாழ்ப்பாணம் | 076 622 6942 |
| பருத்தித்துறை | 076 622 6980 | முல்லைத்தீவு | 077 120 1856 |
| சாவகச்சேரி | 076 622 6967 | சம்மாந்துறை | 077 803 2233 |
| தலவாக்கலை | 071 087 1009 | அக்கறைப்பற்று | 077 778 3673 |
| நாவலப்பிட்டி | 071 087 0706 | நெல்லியடி | 074 092 0357 |
| புதுக்குடியிருப்பு | 076 991 4642 | சங்கானை | 074 092 0317 |
| கல்முனை | 071 087 0663 | பேருவளை | 077 299 9934 |
| பூண்டுலோயா | 077 768 3889 | மத்துகம | 077 220 6413 |
| வாழைச்சேனை | 077 815 1938 | ஒட்டுச்சுட்டான் | 074 092 9571 |
| ராகலை | 071 087 0703 | வவுனியா | 074 092 0313 |
| கொழும்பு | 070 253 9382 | திகன | 077 815 6738 |
| கம்பளை | 071 087 0735 | களுத்துறை | 077 616 7149 |
| மாத்தளை | 070 253 9389 | வெள்ளவத்தை | 071 087 0686 |
| கிண்ணியா | 077 120 1853 | களுவாஞ்சிகுடி | 077 120 1864 |
| மஹியங்கனை | 077 120 1862 | உடப்புவ | 077 120 1851 |
| கல்பிட்டி | 076 160 5803 | வேலணை | 076 994 0273 |
| மஸ்கெலியா | 076 090 9822 | [illegible] | 076 322 6230 |
| கட்டுகஸ் தோட்ட | 077 947 6206 | [illegible] | 077 615 7119 |
| | | மன்னார் | 077 498 5049 |

(CO 7672) (3/6)

# பணிநிலை வேண்டுகை

- கணினி பக்க வடிவமைப்பாளர் Graphics Designer (ஆண் / பெண்)
- கணினி தட்டெழுத்தாளர் Computer Typist (ஆண் / பெண்)
- நேரச்சு இயந்திர பழகுனர்கள் Offset Printing Machine Trainee (ஆண்)
- அலுவலக உதவியாளர் Office Assistant (பெண்)

**10.01.2022 - 13.01.2022 வரை**
காலை 10.00 மணி - 3.00 மணி வரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.
விண்ணப்பிக்க விரும்புவோர் நேரில் வரவும்

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்

# கரிகணன்


வடக்கின் அச்சகதாரர்

இல. 672B, கே.கே..எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : + 94 21 222 2717/8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 08 . 07 . 1938



மறைவு 10 . 12 . 2021

## அமரர் சிவசம்பு இராஜதுரை

(ஓய்வுபெற்ற தபாலதிபர் - கொக்குவில்)

**வயது - 83**

அன்பின் இருப்பிடமே பாசத்தின் உறைவிடமே
எங்கள் அப்பா, அன்பை வாழ்வாக்கி
தியாகத்தை அதற்கு உரமாக்கி ஆயுள் உள்ளவரை எமக்காக
உழைத்த அப்பா அம்மா சென்று ஈராண்டு
ஆகு முன்பே அரன் அடியில் சென்றதேனோ அப்பா
உங்கள் உருவத்தை நாம் இழந்தோமேயன்றி
நின் உயிர் எம்மோடுதான் இருக்குதப்பா
ஆசையாய் இருக்குதப்பா உங்கள் சிரித்த முகம் பார்க்க
வந்திடமாட்டீர்களா அப்பா ஈரவிழிகளுடன் என்றும் உங்கள்
நினைவுடன் வாழும் மகள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மகள் - வாசுகி (சுகி)

(cs 981 (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 04 . 1950



மறைவு 07 . 01 . 2022

## திருமதி சச்சிதானந்தன் செல்வராணி

**(செல்வா அண்ணையின் மனைவி)**

யாழ்ப்பாணம் 29, ஆஸ்பத்திரி வீதி, கொட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சச்சிதானந்தன் செல்வராணி (செல்வா அண்ணையின் மனைவி) 07.01.2022 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - ராசக்கண்ணு தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், சச்சிதானந்தனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜெகதீஸ்வரி, கனகேஸ்வரி, பூபாலசிங்கம், கமலராணி மற்றும் இராஸேஸ்வரி, ஜெயராணி, குணபாலசிங்கம், மோகன், முகுந்தன், கண்ணதாசன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பஞ்சரட்ணம் மற்றும் இராசலட்சுமி, இந்திராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இணுவில் ஆஸ்பத்திரி அருகாமையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைகால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கே.கே.எஸ். வீதி,**
**இணுவில் ஆஸ்பத்திரி அருகாமை**
**இணுவில்.**

(cs 42124) (3.6)

**தகவல்:**
**சச்சிதானந்தன் (கணவர்)**

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயலட்சுமி சிவபாதசுந்தரம்



தோற்றம் 17.04.1957

மறைவு 07.01.2022

யாழ்ப்பாணம் தலையாழியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி சிவபாதசுந்தரம் 07.01.2022 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கணேசு சிவபாதசுந்தரம் (உரிமையாளர், காமாட்சிகளஞ்சியம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னராசா (ராஜா கிறீம் கவுஸ்) - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணேசு -சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், மகேசன் காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் கமலாதேவி, சத்தியமூர்த்தி (UK), சண்முகானந்தன், சத்தியசீலன், காலஞ்சென்ற குமாரதாஸ் மற்றும் சத்தியலக்ஷ்மி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மீராஜினி (UK), திபாகினி, சுபாஜினி, பிரசாந் ஆகியோரின் அன்புத் தாயாரும், கோபிகரன் (UK), சிந்துஜன் (பொறியியலாளர்), கௌசிகன் (பொறியியலாளர் - RDD) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஸ்னி, கனிகன், சுகானி, சதுன், ஆகர்ஷினி, அக்ஷிதன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், செல்வராசா மற்றும் இந்திராணி (Germany), மகேந்திரன், ராசேந்திரன் (Germany) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**076 541 5018**
**077 794 9246**
**077 652 5349**

**101/5, [illegible]ழி லேன்,**
**[illegible] கோயில்,**
**யாழ்ப்பாணம்.**

(cs.42101) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சுரேஸ் தர்மகுலசிங்கம்

**பிறப்பு**
**08.02.1986**

**இறப்பு**
**24.12.2021**

யாழ். நுணாவில் மேற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட சுரேஸ் தர்மகுலசிங்கம் அவர்கள் கடந்த (24-12-2021 ) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மகுலசிங்கம் கமலா தேவி தம்பதிகளின் அன்பு மகனும், தகுலேந்திரன் தவமலர் தம்பதி களின் அன்பு மருமகனும், சுவஸ்திகா (இலங்கை) அவர்களின் அன்புக் கணவரும், மூர்த்தி (ஜேர்மனி), சியாமளா (கனடா), வதனா (இலங்கை), வனிதா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோத்குமார் (கனடா), லக்ஸ்மிகாந் (இலங்கை), கேதீஸ்வரன் (கனடா), ரினா (ஜேர்மனி), சோபினி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெனிபர், டெனிஸ், பிரகத்வி ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், அரிஷ், அஜேஸ், அகானா, திபிஷா, ரிசாரா, கிறிஷ்மிரா, கஜீஸ் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Sunday, 09 Jan 2022 7:00 AM - 10:45 AM மணிக்கு Brampton Crematorium & Visitation Center 30 Bramwin Ct, Brampton, ON L6T 5G2, Canada வில் நடை பெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின் றோம்.





தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வவுனியா சபரிவாசன் தீர்த்த யாத்திரைக் குழுவின் மண்டல பூசை கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை கூமாங்குளம் நாகபூஷணி ஆலயத்தில் இடம்பெற்றது. (ரி1-110)



இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையில் கணக்கு வைத்துள்ள கடந்த 2020ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி வங்கிக் கட்டடத்தில் இடம்பெற்றது. கிளை முகாமையாளர் பா.ஜெயந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் கலந்துகொண்டு சித்திபெற்ற 38 மாணவர்களைக் கௌரவித்தார். (ரி1,9)



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் மகா வித்தியாலய மாணவர்கள் 78 பேருக்கு, கற்றல் உபகரணங்களும், பெற்றோருக்கு உலர் உணவுப்பொதிகளும் கடந்த வியாழக்கிழமை பாடசாலை வளாகத்தில் வழங்கி வைக்கப்பட்டன.

இராணுவத்தினரின் ஏற்பாட்டில், 'கொழும்புபிலிவெர்ச் ஈஸ்ரன் தேவாலயத்தின்' உதவியுடன் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்புப் படைக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சஞ்சஜ வணசிங்க , புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் எஸ். ஜெயகாந், வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஓ-ரி1-19)



அலையன்ஸ் பினான்ஸ் நிறுவனத்தின் வவுனியாக் கிளையால், வவுனியா கோதண்டநொச்சிக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன. உபகரணங்களை பிராந்திய முகாமையாளர் செல்வரட்ணம் நிஷாந்தன் பாடசாலை அதிபரிடம் கையளித்தார். (3-ரி-1)



த. தே. கூ. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் நிதி ஒதுக்கீட்டில் உதவிகள் வழங்கப்பட்டன. நல்லூர் பிரதேச செயலர் பிரிவில், ஜே/94 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பாரதிமன்ற சனசமூக நிலையத்துக்கு 2 இலட்சம் ரூபா பெறுமதியான தளபா டங்களும், ஜே/101 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நண்பர்கள் விளையாட்டுக் கழ கத்துக்கும், ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும் தலா 50 ஆயிரம் ரூபா பெறும தியான விளையாட்டு உபகரணங்களும் நாடாளுமன்ற உறுப்பினரால் நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (ய-ரி1)




மன்னார் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில், மன்னார் நகர சபை ஊழியர்களுக்கு தொற்றாநோய்கள் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடு மற்றும் மருத்துவமுகாம் அண்மையில் நடைபெற்றது. முகாமில் கண், காது, பல், கொலஸ்ரோல், இரத்தத் தில் சீனி ஆகிய பரிசோதனைகள் நடத்தப்பட்டதுடன் ஊழியர்களுக்கு குறித்த நோய் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (ரி1,213)



வவுனியா தெற்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 10 சிறுவர் கழகங்களுக்கு உள்ளக மற்றும் வெளியக விளையாட்டு உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. சிறுவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக சிறுவர் வள நிலையங்களால், இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், ரகமா நிறுவனத்தின் முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ரி1-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வில் 31ஆம் நாள் நினைவலைகள்



மண்ணகம் மகிழ 30.10.1937

விண்ணகம் மகிழ 06.12.2021

## அமரர் திருமதி தவமணிதேவி ஆனந்தராஜா

அன்பின் உறைவிடமே நல் பண்பின் விளைநிலமே
கண்ணும் கருத்துமாய் எமை காத்த அன்னையே
எண்ணும் எழுத்தும் எமக்களித்த இறைவியே
விண்ணும் மண்ணும் வியந்து நிற்கும் மானிடமே

எத்தனை இடர்வரினும் எதிர்த்து நின்றீர்கள்
எத்தனை துயர்வரினும் துணிந்து நின்றீர்கள்
அத்தனை வலிகளையும் தாங்கி நின்றீர்கள்
அன்பின் வழிநின்று வாழ்வை வெற்றி கொண்டீர்கள்

இதயத்தை ஈட்டியால் குத்துவதாய் உங்கள் இழப்பு
இருப்பினும் இவையாவும் இறைசெயல் என்றெண்ணி
எம்மை நாமே தேற்றுகின்றோம் எந்நாளும்
உங்கள் ஆத்மா சாந்தியடையவதாக எம் தாயே....

(IN 15972) (3.6) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## செகநாதர் சண்முகவடிவேல்

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் செகநாதர் சண்முகவடிவேல் (தேயிலைத் தோட்ட தொழிற்சாலை அதிபராக கும்பாவளை பூண்டு லோயா) ஆகிய இடங்களில் கடமையாற்றியவர்) அவர்கள் (06.01.2022) வியாழக்கிழமை காலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செகநாதர் - சிவகாமிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, முருகுப்பிள்ளை, சிவசுப்பிரமணியம், பொன்னம்மா,பவளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலாவதி, ரதிமதி, ஜீவகன், ஐங்கரன், ஜெயந்தி, ஆனந்தி ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்ற சிவனேசன் ( குட்டிமாமா ), சண்முகநாதன் (ஓய்வு நிலை அதிபர்), அனுஜா, ஜெயா, சிவனேசன், மகேந்திரன் ஆகியோரின் மாமனாரும், சுகன்யா, பிரவீனா, துஸாந்தி, கஜாமினி, லாவண்யா, சோபிகா, அனோஜ், நிவேதா, விக்னேஸ் ஜெனோசன், சுதர்சன், சுஜி, பிரியா, நிதர்சன், விக்னேஸ்(மனோஜ்), கவிஷாந், லக்ஸ்மிகா, சிங்கரத்தினம், ஆனந்தராஜ்,ஞானசுகந்தன், டிலக்சன், கஜேந்திரன், சர்மிகா கிரிஷாந்தன் ஆகியோரின் பேரனும், சுமலதன், கிஷ்ணிகா, லிணுஷா, கவிணாஸ், தர்ஷனா, ரேணுஜன், மிதுஷன், மதுஷானந் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
021 205 1554

(cs 42127) (3.6)

"ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ"

# மரண அறிவித்தல்

மலர்வு 02 . 09 . 1930

உதிர்வு 04 . 01 . 2022



## பத்மாவதி வைத்திலிங்கம்

யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கனடா Torontoவை வதிவிடமாகவும் கொண்ட பத்மாவதி - வைத்திலிங்கம் கடந்த (04.01.2022) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் (Palace Medical Services Oman) அவர்களின் ஆருயிர் மனைவியும், இந்திராணி, காலஞ்சென்ற சாந்தினி மற்றும் சந்திரகுமார், சிந்தியா, பிறேமா, ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறிதரனின் பெரியதாயாரும், கருணாநிதி, சுனித்தா, குமரகுருபரன், குணசேகர், கீதாஞ்சலி, ஷிராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், ராதிகா, இந்துஜா, பிரணவன், வைதீகன்,ஞானகி, மயூரி, டிலன், பிரண்டன், மீரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிஜன்கா, சமீரா, டுர்வா ஆகியோரின் ஆசைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை ஞாயிற்றுக்கிழமை கனடா நேரம் 1 pm - 3 pm வரை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| இந்திரா | - | + 164 7718 5858 |
| சந்திரன் | - | 141 6953 1570 |
| சிந்தி | - | 141 684 33284 |
| ஜெயா | - | 141 654 00362 |
| பிறேம் | - | 141 662 78237 |

தகவல்:
மருமகன் - ந.ஜெயராம் (ராம்)
திருநெல்வேலி.

(cs 42092) (3.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 04 . 1989

மறைவு 07 . 01 . 2022



## கனகலிங்கம் பார்த்தீபன் (ஐயா)

கைதடி கிழக்கு கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் பார்த்தீபன் (ஐயா) நேற்று முன்தினம் (07.01.2022) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் கனகலிங்கம் பவளம் ஆகியோரின் அன்பு இளைய மகனும், சிவகுமாரன் (பளை), ஜெயலட்சுமி (இணுவில்), சதீஸ்குமார் (லண்டன்), முகுந்தன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயதரா (பளை), ரவிச்சந்திரன் (இணுவில்), நிரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனனும், பிரியங்கா, பிரியந்தி, மதுநிசா ஆகியோரின் சிறிய தகப்பனும், பிரவீனா, பிரியதர்சன், அக்ஷயா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் சிவஜக்கிய நிகழ்வுகள் இன்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கைதடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்சமாதிக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஊத்தல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி.

(CS 964) (3 / 6)

தகவல் : குடும்பத்தினர்
077 623 4950, 076 182 9873

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புனரமைப்பால் சேதமடையும் வீதி

வீதிகள் புனரமைப்புக்கென குவிக்கப்பட்டிருந்த கிரவல் மண்ணை அப்புறப்படுத்தும்போது, வீதியிலுள்ள மண்ணும் அள்ளுப்படுவதால், அந்த வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து வருகின்றது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மீசாலை மேற்கு பங்களா வீதியோரம் மற்றும் வாகையடிச்சந்தியில் வேறு வீதிகளின் புனரமைப்புக்குக் கொண்டு செல்லும் கிரவல் குவிக்கப்பட்டு, மீண்டும் ஏற்றிச் செல்லப்படுகின்றது. இதனால் ஏ-9 சந்தியிலிருந்து செல்லும் பங்களாவீதி வாகையடிச் சந்திவரை குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. (ஓ-4-159,9)


# தரம்: 05 (2022) மாணவர்களுக்கான

## இணையவழி ZOOM புலமைப் பரிசில் வகுப்புகள்

திங்கள், புதன், சனி மாலை: 6.30 - 8.30

**ஆரம்பம்: 15.01.2022**

34 வருட கற்பித்தல் அனுபவம் கொண்ட யாழ்ப்பாண ஆசிரியர்

திருமதி **தயாநிதி தர்மரத்தினம்**
B.BA / Dip.in edu.

பதிவுகளை மேற்கொள்ள
**076 654 9620**

(cs 465) (2.6)

## Building Sub Contractor தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல கட்டட நிறுவனம் ஒன்றுக்கு கட்டட நிர்மாண வேலைக்கு Sub Contractor உடனடியாகத் தேவை.

**Pera Engineering (pvt) Ltd,**
No.245, Kasthuriyar Road, Jaffna.
T.P: 075 712 2374
Email: dallpera19@gmail.com

(cs 42097) (3.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 - 11 - 1948
மறைவு 09 - 01 - 2021

**அமரர் தம்பிஜயா ரூபன் இன்பராஜா**
**(இன்பம்)**
(ஓய்வு பெற்ற கணக்காளர்)

ஆண்டு ஒன்று கடந்து சென்றாலும்
ஆழமாய் மனதினிலே உம் நிவைுகள்தான்
ஆறாத்துயரினிலே வாடுகின்றோம்
ஆறுதல் கூறுவாரின்றி ஏங்குகின்றோம்

(CS 42066) (3.6)

உயரப்புலம்
ஆனைக்கோட்டை
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



**திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்**
**(மணியக்கா)**

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்கள் : 02.01.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - நாகம்மா தம்பதிகளின் இளைய மகளும் பொன்னம்பலம் சிவசுப்பிரமணியம் (சின்ராசா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்க ளான இராமலிங்கம். தெய்வநாயகி. அரசகேசரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் தயாளினி. குகதாசன். மிருணாளினி. சுபாஷினி. தர்மினி ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவதாசன் (காலஞ்சென்றவர்). ரசீதா தேவி. அமிர்தலிங்கம். கலானந்தன் ஆகியோரின் அன்புமாமியாரும் காசிதாசன் - காயத்திரி (காலஞ்சென்றவர்). டினேஷன் - தேவசங்கீதா. தர்ஷனா- பத்மயோகன். பானுகோபன். அமிர்தா. அபிலாஷ். ஹம்ஷினி. ஹரிகேஷ் ஆகியோரின் பேத்தியும் டிவ்யனா. சுவேஷனா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 03.01.2022 திங்கட்கிழமை அன்று கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பின்னர் மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை உற்றார். உறவினர். நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும். இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி உதவி புரிந்தவர்களுக்கும். மலர் வளையங்களை அனுப்பியோருக்கும். தொலைபேசியில் அழைத்து துயர் பகிர்ந்தோருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்

**தொ.பே. இலக்கம்: 077 5581645** (in 15971) (3/6) **தகவல்: சுபாஷினி (மகள்)**

**சர்வதேச அரங்கில் இணையற்ற நிறுவனமான LOLC குழுமத்துடன் எல்லையற்ற எதிர்காலத்திற்காக இணைந்திடுங்கள்!**

### நாட்டை ஊக்குவிக்கும் நிதித்துறையின் ஜாம்பவான்களுடன் இணையுங்கள்

LOLC குழுமத்தின் துணை நிறுவனமான LOLC Finance PLC ஓர் அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனமும், இலங்கையில் தலைசிறந்த முழுமையான நிதித் தீர்வுகளை வழங்கும் அமைப்பாகவும் புகழ் பெற்றுள்ளது. எமது நாடளாவிய விரிவாக்குதல் காரணமாக, தற்கால மற்றும் புதிய வாடிக்ளையாளர்களுக்கு நிதித் தீர்வுகளை வழங்குவதற்காக ஆற்றல் வாய்ந்த, திறமை மிக்க, அர்ப்பணிப்புள்ள நபர்களை எம்முடன் இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கின்றோம்.



30 வயதிற்கு குறைந்தவரா? | நீங்கள் A/L இல் சித்தியடைந்தவரா? | உங்களிடம் மோட்டார் சைக்கிள் மற்றும் செல்லுபடியாகும் மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் இருக்கின்றதா?

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு கவர்ச்சிகரமான ஊதியம், மற்றும் வேலை மேம்பாட்டுக்கான சந்தர்ப்பங்களையும் எதிர்பார்க்கலாம்.

**நிறைவேற்று அதிகாரி**
**வணிக மேம்படுத்தல்**

பொறுப்புகள் மற்றும் பணிகள்
உடைமைகள் மீதான (Asset Backed) கடன் வழங்கல், கடன் சேகரித்தல் அல்லது கடன் வழங்குதல் மற்றும் சேகரித்தல் தொடர்பான மாதாந்த இலக்குகளை பூர்த்தி செய்யக்கூடிய திறன். முறையான 'கண்காணிப்பு பொறிமுறையுடன் தனிநபர் கடன் (Portfolio) தரத்தை உறுதி செய்தல், வாடிக்கையாளர்களுக்கு கடன் தொடர்பான தயாரிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் ஆலோசித்தல், வணிக பங்காளிகள் மற்றும் புதிய வணிகங்களை அறிமுகப்படுத்துபவர்களிடம் மிகச்சிறந்த உறவை பேணுதல் போன்றவை இந்தப் பதவியின் முக்கிய அம்சமாகும். இப்பதவி வெளிக்கள பதவியென்பதனால் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாளாந்தம் வாடிக்கையாளர்களை சந்திக்க நேரிடும்.

LOLC **பினான்ஸ் கிளை**

வட மாகாணம்
கிளிநொச்சி, யாழ்ப்பாணம், சுன்னாகம், முல்லைத்தீவு, மன்னார், நெல்லியடி, வவுனியா

கிழக்கு மாகாணம்
வாழைச்சேனை, செங்கலடி, மட்டக்களப்பு, திருகோணமலை

**பயிற்சி நிறைவேற்று அதிகாரி**
**கடன் தரம் உறுதிப்படுத்துதல் (அறவீடு)**

பொறுப்புகள் மற்றும் பணிகள்
தகுதியுடைய விண்ணப்பதாரிகள், கடன் அறவிடுதல்கள் சார்ந்த பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். நிறுவனத்தின் தேவைகளுக்கு ஏற்ப குறித்த பிரதேசங்களில் கடன் அறவீட்டுப் பணிகளை மேற்கொள்வதே தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் முதன்மையான பணியாகும்.

LOLC **பினான்ஸ் கிளை**

வட மாகாணம்
சுன்னாகம், மன்னார்

கிழக்கு மாகாணம்
திருகோணமலை, கந்தளாய்

நேரடியாக நேர்முகத் தேர்வில் பங்கேற்க இன்றே அழையுங்கள்:
கிழக்கு மாகாணம் - சுமன் 0773142544
வட மாகாணம் - சுகுமாரன் 0777793696

உங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப் பத்திரத்தை careers@lolcfinance.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது இல.100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய என்னும் முகவரிக்கு தபால் மூலம் பதவியை தலைப்பாக குறிப்பிட்டு அனுப்பவும்.

LOLC பினான்ஸ்
www.facebook.com/LOLCFinanceplc/ www.lolc.com/lolc-careers/

எந்தவொரு வகையிலும் ஆதரவு கோருதல் தகுதி இழப்பிற்கு வழி வகுக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

யாழ் கைலாசபிள்ளையார் கோயிலிற்கு அண்மையில் 3 பரப்பு காணியும் வீடும், யாழ் K.K.S வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் 2 பரப்பு காணியும் வீடும், யாழ் பலாலி வீதியில் பாலாலி வீதி முகப்புடன் 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **077 232 5565**

(CR 5657) 1-6

## மரண அறிவித்தல்



**திருமதி சாரதாதேவி சிவசம்பு**

மேற்படி பெயருடைய மரண அறிவித்தல் நேற்றைய பத்திரிகையில் 12ம் பக்கத்தில் வெறிவந்துள்ளது. அவ் விளம்பரத்தில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக விலாசம் மற்றும் தகவல் போன்றவை பிரசுரமாகவில்லை.
கீழ் குறிப்பிடும் விலாசத்தையும், தகவலையும் சேர்த்து வாசிக்கவும்.

45, புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
071 410 2174

தகவல்:
தனஞ்சயன் (சுங்கு)
மகன்

(CR 5656) 1-6

## வேலையாட்கள் தேவை

**மல்லாகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள புடைவை மற்றும் பான்சி வியாபார ஸ்தாபனத்திற்கு** அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை. **(பெண்கள் மட்டும்)**
மல்லாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு **077 487 6656**

(CS 42068) (3/6)

## Vacancy for Software Developer and data Analyst

A USA-based company with offices in Colombo and Jaffna is looking for candidates for the posts of Web Application Developer and Data Analyst.

**Qualifications:**

Degree in Computing/IT or equivalent experience
Good knowledge of programming
Knowledge in Database Management Systems
Knowledge in Mobile programming is a plus

**Send your CV to siva@monthlywarranty.com**

(CR 3699) (3/6)

## பாற்பண்ணை வேலைக்கு குடும்பம் தேவை

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் பாற்பண்ணையில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு, குடும்பம் ஒன்று தேவை. 32 முதல் 45 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும் கணவனும் மனைவியும் வேலை செய்யக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். தனிவீட்டுடன் தங்குமிட வசதியுண்டு. பாடசாலை செல்லும் பிள்ளைகள் இருந்தால், அவர்களைப் பாடசாலையில் சேர்ப்பித்து, கல்வியைத் தொடர வழிவகை செய்து கொடுக்கப்படும். இருவரின் சம்பளமும் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும் **0777 565165**

## விற்பனைப் பொறுப்பாளர் தேவை (SALES INCHARGE)

மாதகலில் இயங்கிவரும் மீன்பிடி உபகரணங்கள் விற்பனை கிளை நிறுவனத்திற்கு விற்பனைப் பொறுப்பாளர் தேவை.
(ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

1. கல்வித் தகைமைகள் : க.பொ.த. சாதாரணதரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும் (கணிதம் உட்பட)
2. கணினி அறிவுடையவராக இருத்தல் விரும்பத்தக்கது
3. வயது : 23 - 30.
4. வதிவிடம், கிராமசேவையாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
5. முன் அனுபவம் விரும்பத்தக்கது.

நேர்முகத் தேர்வு:
12.01.2022 புதன்கிழமை முற்பகல் 10.00 முதல் 1.00 மணிவரை
தொடர்புகளுக்கு: **SINPON CORPORATION (PVT) LTD MATHAKAL.**
**021 222 0090, 077477 3488**

(CS998) (2/6)

## பணியாளர் தேவை

- **வரவேற்பாளர்** (RECEPTIONIST)
- **வடிவமைப்பாளர்** (PHOTOSHOP)
- **உதவியாளர்கள்**

அனுபவமுள்ளவர்களும் வேலை பழகி செய்ய விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.

**MOORTHY DIGITAL**
**62/20, Stanly Road, Jaffna.**
**077 2247 428**

# குமார் பொன்னம்பலத்தின் 22ஆவது நினைவு நிகழ்வு!



யாழ்ப்பாணம், ஜன.9
அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் முன்னாள் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான குமார் பொன்னம்பலத்தின் 22ஆவது நினைவு யாழ்ப்பாணத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கை பரப்புச் செயலாளர் சட்டத்தரணி காண்டீபன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி வாசுகி சுதாகரன், பிரதேசசபை, நகரசபை, மாநகர சபைஉறுப்பினர்கள், கட்சியின் அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
(எ-125)

## பணியாளர்கள் தேவை

கட்டடங்கள் கட்டுமான நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

1. AutoCAD,2D,3D, செய்ய கூடிய்வர்கள்
2. தொழில்நுட் உத்தியோகத்தர்கள்
3. கட்டட மேற்பார்வையாளர்கள்

தொடர்புகளுக்கு:
**077 711 2725**

## iStore

istore.lka

EXPERINCE IN CUSTOMER MANAGEMENT
BASIC SALARY + OTHER AOLLOWANCE

CAREER OPPORTUNITY at iStore (Pvt) Ltd.
RECEPTIONIST
2 Years Experience Required
Age Between 20 - 28
No.3412, Kasthuriyar Road, Jaffna.

SEND YOUR CV VIA WHATSAPP



**RECEPTIONIST**

CALL US: +94 771 636 848 · VISIT OUR WEBSITE: WWW.APPLEISTORE.LK

## விற்பனையாளர் தேவை

திருநெல்வேலி பகுதியில் உள்ள எமது லொத்தர் விற்பனை கூட்டிற்கு விற்பனையாளர் தேவை.

தொடர்புக்கு:
**077 078 2395**

(CS 1056) 1-6

## காணி விற்பனைக்கு உண்டு

இருபாலை சந்திக்கும் கோப்பாய் சந்திக்கும் இடையில் நாவலர் பாடசாலைக்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**077 193 3490**

(CS 1059) 1-6

## யாழில் No.1 ஆங்கிலப்பயிற்சி மையம்

**DIPLOMA IN ENGLISH**
**SPOKEN ENGLISH**

Reading Writing Speaking Listening

Foundation ENGLISH | Diploma in Fluent English Part-I | Diploma in Fluent English Part-II

நேரடி வகுப்பு
புதிய பிரிவுகள் ஆரம்பம்
10/1/2022
பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்



Call now **0777173517**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்** உங்கள் முழுமையான ஆங்கிலப்புலமைக்கு

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | |
|---|---|---|---|
| Mon,Wed,Fri- 10:00 a.m. | Tue,Thu - 3:30 p.m. | Mon,Wed,Fri- 3 : 00 p.m. | கிளிநொச்சி Sat,Sun - 9:00 a.m. |
| Mon,Wed,Fri- 3:00 p.m. | Sat,Sun - 3:30 p.m. | Sat,Sun - 3 : 30 p.m. | சாவகச்சேரி Tue,Thu - 8:00 a.m. |
| Sat,Sun - 2:00 p.m. | | | சண்டிலிப்பாய் Mon,Wed,Fri- 1:30 p.m. |

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

**IELTS** # Unique Test Tips # 40 hrs with free 4Mock exams # Latest course Material ( Book 16)

**IELTS Life Skills A1** திருமணம் செய்து UK செல்வோருக்கானது

# DMI COMPUTER EDUCATION

**யாழ்ப்பாணம்** No.113, கன்னாதிட்டி வீதி [சயன்ஸ்ஹோல் அருகாமை] 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| M.M.V. வீதி, [மத்திய மகா வித்தியாலயம் அருகாமை காளி கோவில் முன்பாக] | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) | No.130,கே.கே.எஸ் வீதி, [NSB வங்கி அருகாமை] | சீரணிச்சந்தி | No.113, A9 வீதி, ஆனந்தபுரம் [மத்திய கல்லூரி மைதானம் முன்பாக] |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும், றோமன் கத்தோலிக்க மதத்தை சேர்ந்த 1985 ஆம் ஆண்டு பிறந்த, இரு முதுமாணிப்பட்டங்களை பெற்று (MSc, MBA) கொழும்பு தனியார் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக (Biomedical Science) கடமையாற்றும் மணமகளுக்கு உகந்த மணமகனை (Doctor விரும்பத்தக்கது.) பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: **proposal4750@gmail.com**

(CS 42054) (3/6)

## பங்காளர்கள் தேவை

**BUSINESS PARTNER WANTED**

கொழும்பில் இயங்கிவரும் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் பன்முகத்தன்மை வியாபாரமொன்றிற்கு வியாபாரத்தினை விரிவுப்படுத்தும் நோக்குடன் முதலீட்டு பங்காளர்கள் தேவை. உடன்பாடு ஏற்படும் பட்சத்தில் வியாபாரம் மற்றும் வர்தக கட்டிடத்தில் பங்காளர் உரிமம் சட்டப்படி இணைத்துக் கொள்ளப்படும்.

[illegible]

**[illegible] 2943 [illegible] 5**

## வேலையாட்கள் தேவை

முன்அனுபவமுள்ள கோட் மெசின் மை[illegible]. Computer Typing, பைண்டிங் (பழக வி[illegible]வர்கள் தேவை).

**077 3965 214**

## தோட்ட வேலைக்கு ஆள் தேவை

யாழ். பலாலியில் விவசாய பண்ணை[illegible] தோட்ட வேலை தெரிந்த ஆண் தேவை. [illegible] நின்று வேலை செய்வதற்கு உ[illegible], தங்குமிடம் இலவசம்.
மாதாந்தச் சம்பளம் 45000/=

தொடர்பு: **077 6871 891**

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட அரசடி வீதியில் அமைந்துள்ள இஷிகா புடைவையகத்திற்கு பணிபுரிவதற்கு பெண் வேலையாட்கள் தேவைப் படுகின்றனர். விரும்பியவர்கள் WhatsApp இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**076 8014 474**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## எட்வேட் றொபீந்திரன் மான்

**(Retired Pharmacist, AMP)**



உடுவிலை பிறப்பிடமாகவும் பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட எட்வேட் றொபீந்திரன் மான் அவர்கள் நேற்று (08.01.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற றொபேட் கனகரத்தினம் மான் அன்னமுத்து மக்ரலின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற அந்தோனிப்பிள்ளை சிசிலியா தம்பதியரின் பாசமிகு மருமகனும், மேரி றெஜினா (சோதி) இன் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரேசா தவமணி காசிப்பிள்ளை மற்றும் ஜெயராணி ஜெயராஜாவின் பாசமிகு சகோதரனும், அஞ்சலின் பிரேமிலா (முன்பள்ளி ஆசிரியை) கெலன் மஞ்சுளா (பிரான்ஸ்) அனற் சர்மிலா (லண்டன்), காலஞ்சென்ற டொனால்ட் இராஜேந்திரன் மான் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யூட்ததேயுஸ் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), யூட் நிக்சன் (பிரான்ஸ்), றெஜினோல்ட் டினேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருட்சகோதரி எத்தலீவா, காலஞ்சென்ற ஜெகநாதன், காலஞ்சென்ற சுவாமிநாதன், அருட்பிரகாசம், மேரி திரேஸ், ரூபி ஜென்றிக் ஆகியோரின் மைத்துனரும், ஆன் சிரோமி, ஜீன்தியோஜினி, வளன் பிரசாத், றெமினா, றெவின், தேயோ, பிரவீனா, கெவின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 1000)1-6

---

**OPEnE**

Organization of People for Engagement and Enterprise

OPEnE (ORGANIZATION OF PEOPLE FOR ENGAGEMENT AND ENTER PRISE) is a nonprofit local organization, working on the sectors of Community empowerment, Economic Empowerment, Food security, climate justice, Natural Resources and Education.

# Vacancies

1. **Project Coordinators (02 positions) – Social cohesion & women empowerment based in Mannar**

   Key responsibilities.
   - Responsible for overall project delivery including planning, implementation, monitoring and reporting
   - Directly liaise with donors and meet all donor compliances including reporting
   - Supervise and mentor project staff by spending extensive time in communities
   - Be part of the senior Management team of OPEnE and further develop OPEnE's program

2. **Senior Project Officers - (02 positions) –Women empowerment based in Mannar**

   Key responsibilities.
   - Responsible for mentoring and coaching community facilitators
   - Capacity building of communities
   - Maintain accurate data base and assist in reporting

3. **Project Officers - (02 positions) – Marine Environmental sustainability based in Poonakary, Kilinochchi and Women empowerment based in Manthai West, Mannar**

   Key responsibilities.
   - Responsible for community facilitation on the respective themes
   - Provide extensive field-based training
   - Maintain strong community relationship, accurate data base and assist in reporting

4. **Consultant (01 position) – Social cohesion based in Manthai West, Mannar**

   Key responsibilities.
   - Research and develop site specific social cohesion training materials
   - Train staff and communities at multiple levels on developed themes
   - Facilitate interventions in social cohesion and pilot new initiatives
   - Support in reporting

**Experience and skills required:**
- Should have a neutral attitude towards gender, caste, religious and other social divisions.
- Ability to adjust work time to suit the availability of communities (weekends, evenings, etc).
- Ability to work extensively in the field/communities.
- Knowledge and experience in women empowerment, social cohesion & Marine sustainability applicable to the position.
- Valid motor bike riding licence.
- Passion for community development.
- Fluency in Tamil and English is a must for Project Coordinators. Fluency in Tamil and working knowledge of English and of Sinhala is an added advantage for other positions.
- Previous working experience in the required sectors is desired.

**OPEnE is an equal opportunity employer; women are encouraged to apply.**

Please send in your complete CV with a cover letter stating why you are suitable for that position on or before 16th January 2022 to Team L[illegible] pital Lane, Chavatkaddu, Mannar or email to opene20[illegible] the position that you are applying for.

(CR 37308) (2/6)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05 . 11 . 1931

மறைவு 10 . 12 . 2021

கடந்த 10.12.2021 அன்று காலஞ்சென்ற
எமது குடும்பத்தலைவர்

## அமரர் நாகலிங்கம் மகேஸ்பரன்

(முன்னாள் பிரதம எழுதுவினைஞர் பெருந்தெருக்கள்- திணைக்களம்)

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு அனுதாபங்கள் தெரிவித்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதோடு இறுதிக் காலங்களில் அன்னாரை பராமரித்த லில்லி ஹோம் (Home) கோப்பாய் நிறுவனத்தினருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் உறவினர் இல்லத்தில் நடைபெறும், ஆத்ம சாந்தி பிரார்த்தனை நிகழ்வுகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**

**சோனெமு கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

தொடர்புகளுக்கு:
- **சாந்தகுமார்** (மகன் - 0044 795 808 0631)
- **ஜெயகணேஷ்** (மகன் - 0061 468 751 976)
- **தயாளினி** (மகள் - 001 2155 780707)

(cs.41959) (2.6)

---

# மரண அறிவித்தல்



மலர்வு 14 . 08 . 1937

உதிர்வு 07 . 01 . 2022

## கனகசபை சரவணமுத்து

**(முன்னாள் மனிஸ்ஃகபே உரிமையாளர் – திருகோணமலை)**

ஒட்டுவெளி, மிருசுவிலை பிறப்பிடமாகவும், பாலாவி தெற்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கனகசபை சரவணமுத்து நேற்று முன்தினம் (07.01.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை தங்கம்மா தம்பதியினரின் மகனும், கந்தையா நல்லம்மா தம்பதியினரின் மருமகனும், அன்னலட்சுமியின் அன்பு கணவரும், கோடீஸ்வரன் (முன்னாள் அன்னம்ஸ் உரிமையாளர்), கோமதி (யா/பரமேஸ்வரா வித்தியாலயம்), ஜெகதீஸ்வரன் (முன்னாள் UNDP உத்தியோகத்தர்), செந்தில்மதி (பிரதேச செயலகம்-தென்மராட்சி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கௌரிபாலினி (யா/இந்து மகளிர் கல்லூரி - உப அதிபர்), தவப்பிரகாசம் (முன்னாள் WFP உத்தியோகத்தர்), சிவகௌரி (யா/ பூம்புகார் அ.த.க பாடசாலை) கோகுலராஜா (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருவாதவூரர் மற்றும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, அருணாசலம், கனகம்மா, பரமேஸ்வரி மாணிக்கவாசகர் ஆகியோரின் சகோதரரும், செந்தில்வேல் காலஞ்சென்றவர்களான இராசம்மா, அருணாசலம், நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், ஆஞ்ஜெயன், (Srilanka Airforce) ஆயிழை, ஹனுஜா, கிரிஷோத்மன், கபிஷோத்மன், சங்கோதயன், சாருகேசி, வேதோதயன், யாதுமை, தாழிசையன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னார் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாலாவி தெற்கு,
கொடிகாமம்.

**தகவல் : குடும்பத்தினர்**
**076 546 5600, 077 9730930**

(CS 964) (3 : 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவமனைகளை...

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்ட மருத்துவமனைகள் உட்பட 9 மாகாண மருத்துவமனைகளை, மத்திய சுகாதார அமைச்சு கையப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. இதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. அதனையடுத்து அந்த முயற்சி மௌனிக்கப்பட்டிருந்தது.

மாகாண சுகாதார அமைச்சுக்கு வருடாந்தம் வழங்கப்படும் ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக, மாகாணத்துக்கு உட்பட்ட மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் மிகப் பெரிய திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி விடுவிப்பது வழமை.

கிளிநொச்சி மருத்துவமனையில் ஆய்வுகூடம் அமைப்பதற்கும், வவுனியா மருத்துவமனையில் அவசர விபத்து சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்கும் இரண்டு ஆண்டுகளில் கட்டம் கட்டமாக நிதி விடுவிக்கப்படும் என்று மத்திய சுகாதார அமைச்சு தெரிவித்திருந்தது.

தற்போது அந்த நிதியை வழங்க முடியாது என்று மத்திய சுகாதார அமைச்சு, வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளது. மேற்படி இரு மருத்துவமனைகளையும் மத்திய அரசு கையகப்படுத்த எடுத்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்ட பின்னணியிலேயே நிதி நிறுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் மத்தியிடம் குறித்த மருத்துவமனைகள் வந்தாலேயே அவற்றுக்கு நிதி ஒதுக்கப்படும் என்ற தகவல் மறைமுகமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறான குறுக்குவழிகள் மூலம் வடக்கு மாகாண மருத்துவமனைகளை தம் வசம் கொண்டுவர மத்திய அரசு முயல்வதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. (ஒ-5)

## காட்டுக்குள்...

ருந்த கஞ்சாத் தோட்டத்தை அடையாளம் கண்டு கைப்பற்றியுள்ளனர். இதன்போது கைப்பற்றப்பட்ட 5 ஆயிரத்து 788 கிலோகிராம் கஞ்சா பொலிஸ் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. கஞ்சாத் தோட்டத்திலிருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சா ஆறு முறை ஹெலிகொப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டே அதிரடிப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-இ)

## நாயாற்றுக்கரையில்...

இரும்புப்பொருள் ஒன்று கரையொதுங்கியுள்ளதைக் கண்டு உரிய தரப்புகளுக்கு அறிவித்துள்ளனர். கரை ஒதுங்கியுள்ள இரும்புப் பொருளை கடற்படையினர் முதற் கட்டமாக பார்வையிட்ட பின்னர், பெருமளவான மக்களும் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

இந்த இராட்சத இரும்புப் பொருள், பாதைக் கப்பலாக இருக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது. (ஒ-19)

## வர்த்தகருக்கு...

ளவில் இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காசுக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் உள்ள முரண்பாடு காரணமாகவே இந்த வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றது என ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஒ-26)

## விவசாயிகளுக்கு...

மொனராகலை, சியம்பலாண்டுவ பிரதேசத்தில் விவசாயிகள் குழுவொன்றைச் சந்தித்த போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

'தடுப்பூசியைச் செலுத்தும் பணியில் மாத்திரமல்ல , நாட்டின் ஏனைய திட்டங்களையும் வெற்றிகரமாக முன்னெடுக்க, இராணுவத்தினரால் முடியும். சில பயிர்களுக்கு விவசாயிகள் பழக்கப்பட்ட யூரியா போன்ற உரங்களைத் தவிர்த்து, கரிம உரத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வர முடிந்தது. முதலில் விவசாயிகள் தங்கள் மீது நம்பிக்கை வைக்கவேண்டும். அவர்களுக்கு எப்படி கரிம உரத்தைப் பயன்படுத்துவது என்று அடுத்த பெரும்போகத்தில் படையினர் தெளிவுபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்' என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-இ)

## வெதுப்பக...

நிறுத்தப்படும் என்று யாழ்ப்பாண மாவட்ட வெதுப்பகச் சங்கங்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை தற்போது வெதுப்பகப் பொருள்களுக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில், வழமையை விட குறைவான உற்பத்திகளையே மேற்கொண்டு வருவதாகவும் அந்தச் சங்கங்கள் குறிப்பிடுகின்றன.

யாழ்ப்பாண மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் செயலர் கா.பாஸ்கரன் இது தொடர்பில் குறிப்பிடுகையில், கோதுமைமா முன்னர் விநியோகிக்கப்பட்ட அளவை விட குறைவான அளவிலேயே பேக்கரிகளுக்கு வழங்கப்படுகின்றது. சுமார் 75 சதவீதமே வழங்கப்படுகின்றது. இதனால் பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருள்களை ஏற்கனவே குறைத்துள்ளோம்- என்றார்.

இதேவேளை யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கந்தசாமி குணரட்ணம் தெரிவிக்கையில், உற்பத்திக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். எதிர்வரும் காலத்தில் பாண் தவிர ஏனைய பேக்கரி பொருள்களை உற்பத்தி செய்வதில் சிக்கல் நிலைமை ஏற்படும். இலங்கை முழுவதும் 7 ஆயிரத்து 500 வெதுப்பகங்கள் உள்ளன. அவற்றில் 3 ஆயிரம் வெதுப்பகங்கள் மட்டுமே தற்பொழுது இயங்கிக் கொண்டுள்ளன. அவற்றிலும் ஆயிரத்து 500 பெரிய வெதுப்பகங்கள் மட்டுமே இயங்கிக் கொண்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பிரபலமான வெதுப்பகங்களுக்கு கோதுமை மா இல்லை. அவர்கள் தனியாரை நாடிய காரணத்தால் அவர்களுக்கு சங்கம் மூலம் கோதுமைமா விநியோகம் இடம்பெறுவதில்லை. வெதுப்பக உரிமையாளர்களின் தேவையை பிறிமா நிறுவனத்தால் தற்போது முழுமை செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் அதிகமான பாடசாலைகளுக்கு சிற்றுண்டிகளை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது- என்றார். (ஒ-5,25)

## கடற்கரையில்...

நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல் சீற்றம் கொண்டுள்ள நிலையில் கடற்கரையில் அலையின் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது. இந்த நிலையில் நேற்றுக்காலை புதுமாத்தளன் கடற்கரைப்பகுதியில் கடந்த காலத்தில் புதைக்கப்பட்ட அல்லது கடலில் அள்ளுண்டு போன உழவு இயந்திரத்தின் பாங்கள் சில கரையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து. அங்கு சென்று பார்வையிட்டனர். உழவு இயந்திரத்தின் பாகங்களை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தோண்டுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஒ-19)

## ஒரு தொகு...

மீதித்தொகை நாளை திங்கட்கிழமைக்குள் செலுத்தப்படும் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் சிக்கியுள்ள அத்தியாவசியப் பொருள்களின் கொள்கலன்களை விடுவிக்க 14 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

## வந்தார்...

நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை ஆரம்பித்து 65 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டே, சீன வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு இலங்கை வந்துள்ளார். (ஒ-இ)

## காணாமற்போன...

மீட்கப்பட்டுள்ளார். யோகராசா ராஜினி (வயது - 36) என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

இவர் பூதன்வயல் கிராமத்தில் வசித்து வந்துள்ளார். அவருக்கு 22 மற்றும் 16 வயதில் இரண்டு பிள்ளைகள் உள்ளனர். பெண்ணின் கணவர், அவரைப் பிரிந்து முல்லைத்தீவு தட்டையர்மலையில் வசித்து வருகின்றார். பூதன்வயலில் உள்ள அவரது வீட்டில் வேறு ஓர் ஆணும் வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த பெண் கடந்த 4ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார். அவரது கைப்பை ஒன்று தென்னங்காணி ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டது.

தொடர்ந்து நடத்திய தேடுதலில் அந்தக் காணிக்குள் இருந்த கிணற்றில் சடலம் கண்டறியப்பட்டது.

சடலம் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பெண்ணின் வீட்டில் வசித்ததாகக் கூறப்படும் கிளிநொச்சியைச் சேர்ந்த 33 வயதுடைய ஆண் விசாரணைக்காக பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (ஒ-19)

## தட்டுப்பாடு...

தொடர்ந்து இடம்பெறும் என்று யாழ் வணிகர் கழகத்தலைவர் இ.ஜெயசேகரன் தெரிவித்தார்

வணிகர் கழகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் நாட்டில் படிப்படியாக சில பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அந்தந்த நிறுவனங்கள் விநியோகத்தை மட்டுப்படுத்தியதன் காரணமாக பால் மா, எரிவாயு சிலிண்டர், கோதுமை மா என்பவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

எரிவாயு சிலிண்டர்களின் வெடிப்புகள் காரணமாக மீளப்பெறப்பட்டு அவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 60 - 70 வீதமான கோதுமை மா விநியோகம் தற்போது சீராகி வருகிறது. பாண் மற்றும் பணிஸுக்கு மாத்திரம் போதுமான அளவுக்கு கோதுமை மா வெதுப்பகங்களுக்கு விநியோ கிக்கப்பட்டு வருகின்றது. பால்மா விநியோகமும் இந்த மாத இறுதியில் சீரடையு மென எதிர்பார்க்கப்படுகின்றது.

நெல்லின் விலை அதிகரித்ததால் உள்ளூர் நாட்டரிசி 160 ரூபா வரை விற்கப்படுகிறது. இறக்குமதி செய்யப்படும் அரிசி 130 - 140 ரூபா வரையும் கீரிச் சம்பா 190 - 200 ரூபா வரை விற்கப்படுகின்றது. உள்ளூர் அரிசிகளின் விலை தைப்பூசத்துக்குப் பின்னர் சற்றுக் குறைவடையும் சாத்தியக்கூறுகள் உள்ளன. 15 - 20 ரூபா வரை இந்த விலை இறக்கம் ஏற்படலாம். ஆனால் நெல் உற்பத்தியில் உரத் தட்டுப்பாடு மழையின்மை போன்றவற்றால் இந்த பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

உளுந்து, பயறு, எள்ளு மற்றும் நிலக்கடலை போன்ற பயிர்ச்செய்கைகளில் விவசாயிகள் ஈடுபடவேண்டும். அரசு உளுந்து இறக்குமதிக்கு தடை விதித்துள்ள நிலையில் அதிகமானோர் உளுந்தை அதிகளவில் உற்பத்தி செய்ததால் விலை வெகுவாகக் குறைந்துள்ளது - என்றார். (ஒ-20)

## இந்தியத்...

பிலுள்ள இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து தயாரித்துள்ள வரைவு ஆவணமே செவ்வாய்க்கிழமை கையளிக்கப்படவுள்ளது. தமிழ் மக்களின் அபிலாஷைகளை முழுமை செய்தல் மற்றும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் ஆகிய விடயங்களை முதன்மைப்படுத்தி இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. (ஒ-5,22)

## பெண் மீது...

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தூரப் பிரதேசங்களில் இருந்து வனப்பகுதிகளை கடந்து பணிக்கு வரும் ஊழியர்களை கடும் அச்சத்தில் தள்ளியுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, நேற்றுமுன்தினம் இரவுக் கடமைகளை நிறைவு செய்து நேற்று அதிகாலை மருத்துவமனையிலிருந்து துணுக்காயிலுள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். ஒட்டுசுட்டான் நகரத்தை தாண்டி மாங்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது காட்டுப்பகுதியில் வீதியில் நின்ற இருவர் சுகாதார உதவியாளர் மீது இனந்தெரியாத திராவகத்தை வீசியுள்ளனர்.

கண்கள் பாதிக்கப்பட்ட அவர் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் செல்ல முடியாத நிலையில் அருகில் இருந்த ஒரு பொதுக் கிணற்றில் முகத்தை கழுவிய போதும் கண் பார்வை சீராகவில்லை. சற்றுத் தொலைவிலிருந்த ஒரு வீட்டில் தஞ்சம் அடைந்து அங்கிருந்து நோயாளர் காவுவண்டிக்கு அறிவித்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் மாற்றப்பட்டுள்ளார். (ஒ-19)

# பாரவூர்தி – கார் நாவற்குழியில் விபத்து

யாழ்ப்பாணம், ஜன. 9

நாவற்குழியில் பாரவூர்தியும் காரும் மோதிக்கொண்டதில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். நாவற்குழி சந்திக்கும், நாவற்குழி பாலத்துக்கும் இடையில் நேற்றிரவு 9 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. காரில் பயணித்தவர் தலையில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பெக்கோ வாகனத்தை ஏற்றிச் சென்ற பார ஊர்தியை முந்திச் செல்வதற்கு கார் முற்பட்டபோதே விபத்து நிகழ்ந்தாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எரிவாயுவுக்காக சாவகச்சேரியில் நீண்ட வரிசை!

சாவகச்சேரி, ஜன. 9

சாவகச்சேரி நகரப்பகுதியிலுள்ள எரிவாயு விற்பனை நிலையத்தில் நேற்றுமுன்தினம் எரிவாயு விநியோகிக்கப் பட்ட நிலையில், அதற்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர்.

நீண்ட நாள்களின் பின்னர் எரிவாயு விநியோகிக்கப் பட்ட தால் பெருமளவிலான மக்கள் அதைப் பெற்றுக்கொள்ள முண்டியடித்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

(ம-9)

# சிலிண்டர் தட்டுப்பாட்டால் மூடப்படும் உணவகங்கள்!

கொழும்பு, ஜன.9

நாட்டில் நிலவும் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டால் நாட் டின் பல்வேறு பகுதிகளில் இயங்கிய 15 ஆயிரத்துக்கும் அதிகமான சிறிய உணவு விடுதிகள் மற்றும் சிற்றுண் டிச்சாலைகள் மூடப்பட்டுள்ளன என்று சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஹொட்டல்களுக்கு எரிவாயு சிலிண்டர் கிடைக்கின்ற போ தும், அவை நாளாந்தத் தேவையை முழுமை செய்யக் கூடியவையாக இல்லை என்பதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-இ)

# விருதுகளுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாணம் பிரதேச கலா சாரப் பேரவையால் கலைத்து றைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படுகின்ற விருது களாகிய இளங்கலைஞர் விருது, யாழ்.ரத்னா விருதுக ளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத் துறை, இசைநாட கம், இசை, வாத்தியக்கலை, கூத்து, கிராமியக்கலைகள், இசைக்கலை, ஒப்பனைக் கலை ஆகிய துறைகளில் யாழ்ப்பாணம் பிரதேச செய லகப்பிரிவில் கலைப்பணி யாற்றிய கலைஞர்கள் மற் றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செய லர் பிரிவில் நிரந்தர வதிவி டத்தைக்கொண்ட, இதுவரை இளம் கலைஞருக்கான கலைத்துறைச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாதவர்க ளும் 18 தொடக்கம் 40 வயதுக்கு இடைப்பட்டோரும் இளங்கலைஞர் விருதுக்கும், 60 வயது பூர்த்தியடைந்தவர் களும் இதுவரை இந்த விரு துகளைப் பெற்றுக் கொள் ளாதவர்களும் யாழ்.ரத்னா விருதுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணம் பிரதேச செய லக கலாசாரப் பிரிவில் பெற்று, பூரணப்படுத்தி உரிய கலைத்துறையை சான்று படுத்தும் ஆவணப் பிரதிக ளுடன் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப் பங்களை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்துள் ளார்.

(ஒ-ரி1)


## உயர்தரப்பிரிவு (A/L)

மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
இரசாயனவியல் & உயிரியல் Personal & Group classes, (Tamil & English Medium)
(CS 5658) 1-6
Contact No:-076 7781 442

## வேலைக்கு ஆட்கள் தேவை

K.K.S. வீதி, நாச்சிமார் கோவிலடியில் இயங்கும் தளபாட விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.
(CS 1061) 1-6
076 8294 100

## பழைய கட்டடம் வாங்கப்படும்

பழைய வீடு / கட்டடம் இடிபாடு விலைக்கு வாங்கப்படும்.
076 893 6169

## விற்பனைக்கு

JT தொடர் இலக்கமுடைய ஆட்டோ சிவப்புக்கலர் விற்பனைக்கு உண்டு.
T.P 077 087 3589

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ்நகரில் IELTS (Academic and General), AI UK Exam (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை)
English Grammar and Spoken English தனியாகவும்குழுவாகவும் கற்பிக்கப்படும்.
Guarnteed to 7.5 in IELTS Exam
Group and Indivual Classes
புதிய பிரிவுகள்
January 10 ஆரம்பம்
Please Contact: 077 780 3970
074 007 1970

## காணி விற்பனைக்கு

இல.5, அம்பலவாணர் வீதியில் 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(cs 994) (2.6)
077 759 2935, 077 338 4367

## Personal English Classes

யாழ். நகரில் தனி வகுப்புக்கள்
Grammar - Spoken Grade - 7, G.C.E O/L, A/L, Graduates, English Literature
G.C.E O/L. தொழில் புரிபவர்கள்
(CR 36989)(3.6)
K.Ganesh (BA) 077 766 8725

## மணமகள் தேவை

யாழ்.இந்துகௌரவ குடும்பம் 1986 இல் பிறந்த அனுஷம் நட்சத்திரம் 5'8" உயரமான அரச தொழில் புரியும் மணமகனுக்கு அரச அல்லது தனியார் தொழில் புரியும் மணமகள் தேவை.
077 082 6883

## மணமகள் தேவை

யாழ். இந்து, கௌரவ குடும்பம், 1987 ஆம் ஆண்டு, 5'6", பூரட்டாதி 2 ஆம் பாதம், கிரக பாவம் 39, சூரிய செவ்வாய் - 11 இல், B.Sc, M.Sc,(Computer Science) அரச தொழில் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
எதிர்பார்ப்பு - பட்டதாரி, அரசதொழில்
(cs 926) (2.6)
077 693 6744

## SENG. ACADEMY

IELTS - New batch ஆரம்பம்
Sp.Offer 10 % Discount உடன்
Basic & Advanced grammar Class Free + Handouts +CDs
53, சிவகுருநாதர் வீதி, Brown Rd.
077 798 9830
GR.6,7,8,9 Eng Spoken with grammar

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் தேவை. (சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)
1) சமையலாளர் : யாழ்ப்பாணத்து பாரம்பரிய உணவு வகைகள் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும்.
2) தோட்டப் பராமரிப்பாளர் 3) ரூம் (Room) துப்பரவுப் பணியாளர்
4) வரவேற்பாளர் 5) கணக்காளர்.
தொடர்பு: 077 872 9806, 077 251 4981
சுயவிபரக்கோவையை கீழே உள்ள முகவரிக்கு அனுப்பவும்:
விளம்பர இல. 1032
C/O உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(cs.42091) (2.6)

## காணி விற்பனைக்கு

நல்லூர் கந்தர்மடம் பழம் வீதியில் பிள்ளையார் கோயி லுக்கு அருகாமையில் 10 அடி பாதையடன் கூடிய 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை
விலை - 1 கோடி 35 லட்சம் 077 955 3322
(CS 995) (3/6)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும்
பலசரக்கு வணிக நிலையத்திற்கு பொதி செய்யவதற்கும் Computer Billing செய்வதற்கும் பெண் வேலையாட்களும் மற்றும் தங்கி நின்று வேலை செய்வதற்கு ஆண் வேலையாட்களும் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுய விபரக்கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.
(cs 984) (3.6)
077 419 5015

## வீடு வாடகைக்கு

மொரட்டுவ, லுனாவ (Lunawa) எனும் இடத்தில் (வெள்ள வத்தையில் இருந்து 12km, மொரட்டுவ பல்கலைக்கழகத்தி லிருந்து 3.6 km ) நல்ல சூழலில் அமைந்த நீர், மின்சாரம் மற்றும் மின்தூக்கி (Lift) வசதி கொண்ட "Sea View Residences" தொடர்மாடியில் அருகருகே அமைந்த 3 வீடுகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 820 9424
(CS 1054) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடி பாதையுடன் 105 பரப்புக் காணி 1 1/2, பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (மேட்டுநிலம், நிலபரப்பு, நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 km தூரம்)
ஒரு பரப்பின் விலை 4 லட்சம்.
தொடர்பு: 077 911 6983, 077 658 5999, 077 288 0152, 077 623 4204.
(CS 986)1-6

## ஆண், பெண் வேலையாள்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு ஆண், பெண், வேலையாள்கள் தேவை. வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை மாத வேதனமாக 17000/- தொடக்கம் 25000/- வரை வழங்கப்படும். வேலை நேரம் காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை.

## ஆண், பெண் வேலையாள்கள் தேவை

வவுனியா நகர்ப்பகுதியில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு ஆண், பெண், விற்பனையாளர் தேவை. வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை மாத வேதனமாக 17000/- தொடக்கம் 20000/- வரை வழங்கப்படும்.
(வவுனியா ஸ்தாபனத்திற்கு வவுனியாவில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு: 074 049 0003
(CS 42100) (3/6)

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"
## TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்பப் பிரிவு
விசேட செயலமர்வு -2021
13,15,16,17 JANUARY-2022

| உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | பொறியியல் தொழில்நுட்பம் |
|---|---|
| திருக்குமரன் (B.Sc in Agri.)<br>நிரோஜன் (B.Sc in Agri.)<br>சிவகுமார் (B.Sc in Agri.) | அருண்குமார் [BTech Hons(Eng.)]<br>சிவஜன் (Lecturer)<br>நிசாந்தன் (HNDE) |

காலை 9 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை அனைத்து மாணவர்களும் பங்குபெறலாம்.
இடம்: வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 017 5346


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 16

# சஞ்சீவி

Registered as a Newspaper

எங்கோ ஒரு பூவைத் தவற விடுகிறார்கள்.
வேறெங்கோ ஒரு பூவைக் குனிந்து எடுக்கிறார்கள்.
எங்கும் வேறெங்கும் இருக்கிறது ஒரே ஒரு பூ.

- வண்ணதாசன்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2052 | மார்கழி: 25 | ஞாயிற்றுக்கிழமை (09.01.2022) | சிகரம் : 81

*அல்மாட்டி நகர பிதாவின் தலைமை அலுவலகம் கலவரக்காரர்களால் தீக்கிரை*



# கலங்குகிறது கஜகஸ்தான்!







○ ஆர்.பிரகாஷ்

விலையேற்றத்தை மட்டுமே பரிசாகத் தந்த 'அறிவிக்கப்படாத' சர்வாதிகார ஆட்சிக்கு, ஓரணியில் திரண்டு முடிவு கட்டியுள்ளனர் கஜகஸ்தான் மக்கள். சொந்த நாட்டின் வளத்தையே சரிவரப் பயன்படுத்தத் தெரியாத பிறழ்வான நிர்வாகத்தைக் கொண்டு நடத்திய அஸ்கர் மாமின் ஆட்சிக்கு அங்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவுடனும், சீனாவுடனும் தனது பெருமளவான எல்லைகளை கஜகஸ்தான் பகிர்ந்துகொள்கின்றது. தேசிய வளம் என்று பார்க்கையில், மத்திய கிழக்கு வட்டகையுடன் தொடர்பைக் கொண்டிருக்கின்றது கஜகஸ்தான். ஏகப்பட்ட எண்ணெய் வளம் கஜகஸ்தானில் உள்ளது. சோவியத் ஒன்றியத்தில் இருந்து உடைந்து பிரிந்த கஜகஸ்தான் உலகளாவிய எண்ணெய் இருப்பில் 3= 5 வீதத்தைக் கொண்டுள்ளது. நிலக்கரி, எரிவாயு, கனிமங்கள் என்று கஜகஸ்தானின் வள இருப்பு நீண்டு செல்கின்றது. ஆனால், அந்த வளங்கள் சரிவரப் பயன்படுத்தப்படுகின்றனவா என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில்.

தேயிலையின் விலை இலங்கையில் எல்லை கடந்து சென்றால் எப்படியிருக்கும்? என்று சிந்தித்துப் பாருங்கள். இதுதான் இப்போது கஜகஸ்தான் மக்களின் கோபாவேசத்துக்கு முதன்மைக் காரணம். அள்ள அள்ளக் குறையாத எண்ணெய் வளம் இருக்கையில், அந்த வளத்துக்காக ஏன் பணத்தை வாரி இறைக்க வேண்டும்? என்பதுதான் அந்த நாட்டவர்களின் கேள்வி. நியாயமான கோபம்தான். ஆரம்பத்தில் பெற்றோலிய எரிபொருள்கள் மீதான விலை அதிகரிப்புக்கு எதிராக ஆரம்பித்த இந்தப் போராட்டம், இப்போது அரசின் அனைத்துக் குறைபாடுகளுக்கும் எதிராக தீவிரம் பெற்றுள்ளது. தற்போது அங்கு நடப்பது போராட்டம் அல்ல கலவரம், வன்முறை.

கஜகஸ்தானின் வர்த்தக நகரும், பெரு நகருமாகவுள்ள அல்மாட்டி முழுவதுமாக போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இதனால், தேசிய வருமானமும், தேசியப் பொருளாதாரமும், தேசியப் பாதுகாப்பும் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றன. போராட்டத்தின் எதிரொலியாக பிரதமர் அஸ்கர் மாமின் தலைமையிலான அரசாங்கம் பதவியில் இருந்து விலகியுள்ள போதிலும், சுயமாக இயல்பு நிலையை ஏற்படுத்த முடியாத நெருக்கடிக்கு அதிபர் தள்ளப்பட்டுள்ளார்.

## தலையிட்டது ரஷ்யா

இதனால், 'கூட்டுப்பாதுகாப்பு ஒப்பந்தத்தை' நடைமுறைப்படுத்துமாறு ரஷ்யாவிடம் கையேந்தியுள்ளது கஜகஸ்தான். ரஷ்யா, பெலாரஸ், தஜிகிஸ்தான், கிர்கிஸ்தான், ஆர்மீனியா, கஜகஸ்தான் ஆகிய ஆறு நாடுகளும் சி.எஸ்.ரி.ஓ. என்றழைக்கப்படும் கூட்டுப்பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. இவற்றில் ஒரு நாடு தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று அழைப்பு விடுத்தால் மற்றைய நாடுகள் தங்கள் படைகளை குறிப்பிட்ட காலத்துக்கு அனுப்பி நிலைமையைச் சமாளிக்க உதவி புரியும்.

இந்த அழைப்பை கஜகஸ்தான் விடுத்ததை அடுத்து, ரஷ்யப் படைகள் அல்மாட்டி நோக்கி விரைந்துள்ளன. அமெரிக்காவும் 'நிலைமையைக் கவனிக்கிறோம்' என்று அறிக்கையிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், 'கஜகஸ்தானின் ஜனநாயகப் பிறழ்வு' வருத்தமளிக்கின்றது என்று அறிவித்துள்ளது.

ஆக, இராணுவத்தினருக்கும் ஆட்சிப்பீடத்தினருக்கும் ஆதரவாக ரஷ்யாவும், போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக அமெரிக்காவும், மேற்கத்தேயமும் குரல் கொடுத்துள்ளன. இந்த நிலைமை கஜகஸ்தானின் எல்லைகளுக்கு அப்பால், இந்தப் போராட்டம் வல்லரசுகளின் ஈகோ யுத்தமாக விரிவடையக்கூடிய ஏது நிலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கஜகஸ்தான் தொடர்புடைய வட்டகை (சீனா, ரஷ்யா) அமெரிக்காவுக்கு அதிகம் வேண்டப்பட்ட, கேந்திர முக்கியத்தும் மிக்க இடம். இப்படியான உள்நாட்டுக் கலவரங்கள் அமெரிக்காவுக்குக் கிடைத்த அதியுச்ச போனஸ். இப்படியான 'பனால்டி' வாய்ப்புக்களை அமெரிக்கா தவறவிட்டதில்லை. வரலாறும் அதுவே!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த வெற்றியை சாப்பிட முடியாது?



நிலாந்தன்

புதிய ஆண்டு பிறந்தபொழுது நாட்டில் ஏழைகளின் வீடுகளில் பால்தேநீர் இருக்கவில்லை. இனி தேநீர்க் கடைகளில் பால் தேநீரை விற்க முடியாது என்று தேநீர்க்கடைகளின் சங்கத்தலைவர் அண்மையில் தெரிவித்திருந்தார். சாதாரண தேநீர்க் கடைகளில் மட்டுமில்லை நட்சத்திர அந்தஸ்துள்ள உல்லாச விடுதிகளிலும் பால்தேநீர் தட்டுப்பாடாக இருப்பதாக தெரிகிறது. ஒரு சிறிய அங்கர் பெட்டி வாங்குவது என்றால் அதோடு சேர்த்து நான்கு அல்லது ஆறு அங்கர் யோக்கட்களையும் வாங்குமாறு வர்த்தகர்கள் வற்புறுத்துகிறார்கள். அங்கர் கொம்பனிதான் அவ்வாறு விற்குமாறு அறிவுறுத்தல் வழங்கியதாக அவர்கள் கூறுகிறார்கள். ஒரு பெட்டி அங்கருக்காக எந்த விலையும் கொடுக்க தயாரான ஒரு நடுத்தர வர்க்கம் அங்கர் பால்மாப்பெட்டியோடு யோக்கட்களையும் வாங்கிக்கொண்டு போகிறது.




புதிய ஆண்டு பிறந்தபொழுது அங்கர் மட்டுமல்ல சமையல் எரிவாயுவும் அரிதாகவே கிடைத்தது. சிலிண்டர் அடுப்புகள் வெடிக்கத் தொடங்கிய பின் யாழ்ப்பாணத்தில் கொட்டடியில் அமைந்திருக்கும் எரிவாயு சிலிண்டர் களஞ்சியத்தை அகற்றுமாறு சில கிழமைகளுக்கு முன் அந்தப்பகுதிமக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தார்கள். ஆனால் அதே எரிவாயுக் களஞ்சியத்துக்கு முன்னால் இப்பொழுது நீண்டவரிசையில் எரிவாயுவுக்காக காத்திருக்கிறார்கள். உயிரச்சம் என்று வந்த பொழுது தமது வீடுகளுக்கு மத்தியில் இருந்த அந்த எரிவாயுக் களஞ்சியத்தை அகற்றுமாறு போராடிய மக்கள், பசி என்று வந்ததும் அங்கே போய் வரிசையாக நிற்கிறார்கள். சாதாரண ஜனங்களுக்கு எரிவாயு எட்டாப்பொருள் ஆகிவிட்டது. விநியோகத்துக்கு வரும் ஒரு தொகுதி எரிவாயு சிலிண்டர்கள் பெருமளவுக்கு நட்சத்திர அந்தஸ்துள்ள விடுதிகளுக்கு வழங்கப்படுவதாக ஒருதகவல். ஆனால் எரிவாயு அடுப்புகளை நம்பி.புகைக் கூடு இல்லாத வீடுகளைக் கட்டிய மக்கள் விறகடுப்பு வைப்பதற்கு வீட்டுக்கு வெளியே சிறுதட்டிகளை இறக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கொழும்பின் மிகப் பெரிய சுப்பர்மார்க்கெட்களில் ஒன்றாகிய ஆர்பிகோ சுப்பர் மார்க்கெட்டில் விறகுக் கட்டுக்கள் விற்கப்படுகின்றன. ஒரு பொதி 150 ரூபாயிலிருந்து 250 ரூபா வரை விலை போகிறது. சுப்பர்மார்க்கெட்களில் விறகை விற்கும் ஒரு காலம். எரிவாயு தட்டுப்பாட்டால் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான சிறிய தேநீர்க்கடைகள் மற்றும் சாப்பாட்டுக் கடைகள் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அச்சக உரிமையாளர் ஒருவர் சொன்னார் புதுவருசப் பிறப்புக்கு கலண்டர் அடிப்பதற்கு முடியாமல் இருப்பதாக. ஏனென்றால் கலண்டர் மாத இதழ்களை ஒன்றாகச் சேர்த்து இணைப்பதற்கு ஒரு உலோகப் பட்டி பயன்படுத்தப்படுகிறது. இந்த உலோகப் பட்டி வெளிநாட்டில் இருந்து வருகிறது. நாட்டின் பொருளாதார நெருக்கடியால் அதன் விலை அதிகரித்து செல்வதோடு அது அரிதான பொருளாக மாறிவிட்டது. எனவே கலண்டர்களை அடிக்க முடியவில்லை என்று அவர் சொன்னார். கலண்டருக்கும் தட்டுப்பாடான ஒரு புதுவருசம் பிறந்திருக்கிறது.

கடந்த திங்கட்கிழமை புத்தாண்டு பிறந்து இரண்டு நாள்களின் பின் அரசாங்கம் முட்டை விலை இரண்டு ரூபாயாலும் இறைச்சிக் கோழியின் விலை 50 ரூபாயாலும் குறைக்கப்படுவதாக அறிவித்தது. ஆனால் கடைகளில் ஏறிய விலை ஏறியது தான். மூத்த வர்த்தகர் ஒருவர் சொன்னார், ' இலங்கை போன்ற நாடுகளில் ஏறிய விலை இறங்குவது மிக அரிது'என்று. இலங்கை இப்பொழுது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி அசாதாரணமானது. எனவே பொருளாதாரம் ஸ்திரத்தன்மைக்கு வந்ததும் இப்பொழுது ஏறியிருக்கும் விலைகள் இறங்கத்தானே வேண்டும் ?என்று அவருக்குச் சொன்னேன். அவர் சொன்னார், ' என்னுடைய இதுவரை கால அனுபவத்தின் படி ஏறிய விலைகள் இறங்குவது குறைவு' என்று.அவர் கூறுவது சரியாக இருந்தால் வரப்போகும் மாதங்களில் நிலைமை இன்னும் மோசமாக மாறலாம்.

"2022 ஆம் ஆண்டும் மக்கள் அத்தியாவசிய பொருள்களுக்கு கஷ்டப்படவேண்டிய வருடமாக அமையும் நிலையே இருக்கின்றது" என்று கூறியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார. தெற்காசிய பிராந்தியத்திலேயே அதிக பணவீக்கம் பதிவாகியுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடம் பெற்றுள்ளது. 2021 நவம்பரில் 9.9% ஆக இருந்த நாட்டின் பணவீக்க விகிதம் 2021 டிசெம்பரில் 12.1% ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. ஜனவரி 18 ஆம் திகதி இலங்கை 500 மில்லியன் டொலர் கடனை திருப்பிச் செலுத்தியதன் பின்னர் வெளிநாட்டு கையிருப்பு மேலும் குறையும் என பொருளாதார நிபுணர் கலாநிதி நிஷான் டி மெல், தெரண செய்திக்கு தெரிவித்துள்ளார். இதனால், தர வரிசையில் இலங்கை தொடர்ந்து வீழ்ச்சியடையும் என்று அவர் கூறுகிறார். கடனைத் திருப்பிச் செலுத்துவதால் அந்நியச்செலாவணிக் கையிருப்பு தொடர்ந்து குறையும் என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார். இந்த நிலையில் கடனை மீளச் செலுத்துவதற்கு மறுசீரமைப்புச் செயற்பாடுகள் தேவை எனவும், அதற்கான நடவடிக்கைகள் இப்போதே ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால் நாட்டின் ஜனாதிபதி யுத்த களத்தில் தான் செய்த சாதனைகளை இப்பொழுதும் நினைவூட்டிக் கொண்டிருக்கிறார். நாட்டின் முதற்பிரஜையாக தன்னைத் தெரிவு செய்வதற்காக பல தியாகங்களைச் செய்த சிங்களவர்களின் பாதுகாப்பும் அவர்களது பாரம்பரியத்தை பாதுகாப்பதும் தனது தலையாய பொறுப்பு என தான் உறுதியாக நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார். கடந்த இரண்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோட்டை கல்யாணி சாமஸ்ரீதர்ம மகா சங்கசபையால் அவருக்கு "ஸ்ரீலங்கா தீஸ்வரபத்ம விபூஷன" விருது வழங்கப்பட்டபொழுது ஆற்றிய உரையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யுத்த வெற்றிதான் அவருடைய ஒரே அரசியல் முதலீடு. கடந்த இரண்டு ஆண்டுகால ஆட்சியின் பின்னரும் அவர் தன்னுடைய சாதனை என்று கூறுவது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் யுத்தத்தை வெற்றி கொண்டதையே. அதே சமயம் வைரஸ் தொற்றில் இருந்து நாட்டை பாதுகாத்ததையும் அவர் தனது சாதனையாகக் கூறுகிறார். அதற்கும் அப்பால் அவருடைய கடந்த இரண்டு ஆண்டுகால ஆட்சி குறித்து அவர் பெருமையோடு சுட்டிக்காட்ட வேறு எதுவும் இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகால ஆட்சியில் ஏற்பட்ட எல்லாச் சறுக்கல்களுக்கு பின்னரும் அவர் தன்னை சிங்கள பௌத்தர்களின் தலைவராகவே காட்டுகிறார்.

ஆனால் அவருக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வழங்கிய சிங்கள மக்கள் இப்பொழுது ஆத்திரத்தோடும் விரக்தியோடும் காணப்படுகிறார்கள். அவர்கள் அடுத்த தேர்தலில் அவருக்கு எதிராகவே வாக்களிப்பார்கள் என்று எதிர்க்கட்சிகள் நம்புகின்றன. மூன்றிலிரண்டு பெரும்பான்மை எப்பொழுதோ காலாவதியாகிவிட்டது என்று கட்சிகள் நம்புகின்றன. அண்மைய வாரங்களில் தென்னிலங்கையில் உள்ள பிரதேசசபைகளில் நிகழும் பட்ஜெட் வாக்கெடுப்புக்களின் முடிவுகள் அதைத்தான் நிரூபிக்கின்றன. கடந்த மாதம் [illegible] பல [illegible] நடந்தது. அத்தேர்தல் முடிவுகளும் அதைத்தான் உணர்த்துகின்றன. அதே போல கடந்த மாதம் நிகழ்ந்த தாதியர் சங்கத்துக்கான தேர்தல் முடிவுகளும் அதைத்தான் உணர்த்துகின்றன. அமைச்சுக்களின் செயலர்களும் பிரதான அதிகாரிகளும் பதவி விலகுவதும், பதவி மாற்றப்படுவதும் அதைத்தான் உணர்த்துகின்றன. இந்த வாரம் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பதவி நீக்கப்பட்டார். கடந்த ஞாயிற்றுக்கிழமை சுசில் பிரேமஜயந்த, தெல்கந்த சந்தைக்குப் போயிருக்கிறார். அங்கே பச்சைமிளகாய் ஒரு கிலோ 1200 ரூபாவுக்கு விற்கப்படுவதை சுட்டிக்காட்டி ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் கேள்வி கேட்டிருக்கிறார். "விவசாயத்துறை அமைச்சு தோல்வி கண்டுவிட்டது. விவசாயத்துறை தொடர்பில் அரசின் கொள்கை முழுத்தோல்வி கண்டுவிட்டது" என்று அவர் கூறியுள்ளார். அதனால் பதவியில் இருந்து தூக்கப்பட்டிருக்கிறார். அவர் மூன்று ஜனாதிபதிகளின் கீழ் சுமார் 18 ஆண்டுகளாக சிரேஷ்ட அமைச்சுப் பதவிகளை வகித்தவர். நாட்டின் பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கு நெருக்கமானவராகப் பார்க்கப்படும் அவரை ஜனாதிபதி . பதவியிலிருந்து தூக்கியிருக்கிறார். இது அரசாங்கத்தை விமர்சித்ததற்காக வழங்கப்பட்ட ஒரு தண்டனை என்பதற்கும் அப்பால் அரசாங்கத்தில் பிரதமர் மஹிந்தவின் நிலை பலவீனமடைந்து வருவதைக் காட்டுவதாகவும் ஒரு வியாக்கியானம் உண்டு.

ஆளும்தரப்புக்குக்குள் இருந்து கொண்டே அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்து வருபவர்களில் பெரும்பாலானவர்கள் மஹிந்த ராஜபக்சவுக்கு நெருக்கமானவர்கள். அவர்களைத் தாமரை மொட்டு கூட்டணிக்குள் தொடர்ந்தும் பேணிவைத்திருப்பது பெருமளவுக்கு மஹிந்த ராஜபக்சதான். இப்பொழுது அவருக்கு விசுவாசமான ஒருவர் தூக்கப்பட்டிருக்கிறார். இது எதிர்காலத்தில் பஸில் ராஜபக்சவை பிரதமராக நியமிப்ப தற்குரிய நிலைமைகள் அதிகரித்து வருவதைக் காட்டுகிறதா?

புதிய ஆண்டு பிறந்த கையோடு நாட்டு மக்களுக்கு பஸில் ராஜபக்ச சில சலுகைகளை அறிவித்தார். மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை சமாளிப்பதற்கு இந்த சலுகைகள் போதாது. அவை அரசாங்கத்தின் தோல்விகளிலிருந்து மக்களுடைய கவனத்தைத் திருப்ப உதவாது. ஆனால், அதற்காக எதிர்க்கட்சிகள் நம்புவது போல ராஜபக்சக்களை இலகுவாகத் தோற்கடிக்கமுடியாது.

"அரசாங்கத்தை எதிர்க்கட்சிகள் கவிழ்க்கத் தேவையில்லை ஏனெனில் அது ஏற்கனவே கவிழ்ந்துவிட்டது" என்று மனோ கணேசன் கூறியுள்ளார். அது உண்மை. அரசாங்கம் தோற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அதைத் தம்முடைய வெற்றியாக மாற்ற எதிர்க்கட்சிகளால் முடியாதிருக்கிறது. அதற்கு முதலாவது காரணம் , எதிர்க்கட்சிகள் ஒரு பலமான தலைமையின் கீழ் ஒன்றுதிரண்ட சக்தியாக இன்றுவரை மேலெழவில்லை. இரண்டாவது காரணம், ராஜபக்சக்கள் இனிமேலும் யுத்த வெற்றிவாதத்துக்கு தலைமை தாங்கமுடியும். யுத்த வெற்றிவாதம் எனப்படுவது 2009 க்கு பின்னரான சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தின் புதிய வடிவம். அதை அவர்கள் ஈஸ்டர் குண்டுவெடிப்பின் மூலம் அடுத்தடுத்த கட்டத்துக்கு 'அப்டேட் 'செய்து கொண்டார்கள். எனவே தென்னிலங்கை அரசியலில் தமிழின எதிர்ப்பும் முஸ்லிம் எதிர்ப்பும் தொடர்ந்தும் தீர்மானிக்கும் சக்திகளாக உள்ளவரை ராஜபக்சக்கள் யுத்தவெற்றி வாதத்துக்கு தலைமை தாங்கலாம்.

யுத்த வெற்றிவாதத்தை எதிர்கொள்வதற்கு எதிர்க்கட்சிகளுக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது என்னவெனில் மூவினத்தன்மை பொருந்திய ஒரு கூட்டுக்குப் போவது. மூன்று இனத்தவர்களின் வாக்குகளையும் திரட்டும்போதுதான் யுத்த வெற்றிவாதத்தை அதாவது 2009 க்கு பின்னரான சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தை தோற்கடிக்லாம் என்பது 2015ஆம் ஆண்டு நிரூபிக்கப்பட்டது. அவ்வாறு மூன்று இனத்தவர்களின் வாக்குகளையும் கவர்வதற்கு ஒரு ஜனவசியம் மிக்க தலைவர் வேண்டும். ஒப்பீட்டளவில் ரணில் விக்கிரமசிங்க அப்பொழுது அப்படியொரு தலைவராகத் தோன்றினார். இப்பொழுது அப்படி ஒரு தலைவரைக் கண்டுபிடிக்க எதிர்க்கட்சிகளால் முடியவில்லை. எதிர்க்கட்சிகள் அப்படி ஒரு தலைவரைக் கட்டியெழுப்பாத வரை ராஜபக்சக்கள் நிம்மதியாக இருப்பார்கள். ஏழைச் சிங்கள மக்கள் யுத்தவெற்றியைச் சாப்பிட முடியாது என்று உணரும் ஒரு நாள் வரும் வரையிலும் அவர்கள் நிம்மதியாக இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr.S.கிருபானந்தகுமாரன்
கால்நடை மருத்துவர்







# கால்நடை வளர்ப்பில் பெண்களும் சவால்களும்:

இனப்பிரச்சினையும் அதனோடு இணைந்த யுத்தமும் எமது நாட்டின் வடக்கு - கிழக்கு பகுதியின் வளர்ச்சியையும் பொருளாதரத்தையும் பல தசாப்தங்களுக்கு பின் தள்ளிவிட்டது. குறிப்பாக விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி போன்றவற்றை சூனிய நிலைக்கு தள்ளி இருந்தது எனலாம். இந்தப் பின்னடைவு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் வடக்கு, கிழக்கின் பங்களிப்பை புறக்கணிக்கும் அளவுக்கு மாற்றி இருந்தது. ஒரு காலத்தில் மீன்பிடியில்-நாட்டின் அதிக உற்பத்தியை செய்த வடக்கு, கிழக்கு இன்று பின்தங்கிப் போய் விட்டது. இதே போல் விவசாயத்திலும், கால்நடை வளர்ப்பு வேளாண்மையிலும் காத்திரமான பங்களிப்பினை வழங்கிய மேற்படி பகுதிகள் இன்று நலிவடைந்துவிட்டன.

இலங்கையில் இடம்பெற்ற கொடிய யுத்தம் , மரணங்களை ஏற்படுத்தியதோடு ஏராளமான அங்கவீனர்களையும் பல ஆயிரக்கணக்கான விதவைகளையும் பெண் தலைமைக் குடும்பங்களையும் உருவாக்கியுள்ளது. அங்கவீனமுற்ற ஆண்கள் உள்ள குடும்பங்களில் கூட, பெண்கள்தான் தலைமை ஏற்று நடத்த வேண்டிய நிலை. வடக்கு ,கிழக்கை பொறுத்தவரை ஏறக்குறைய ஒரு லட்சம் விதவைகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரை மேற்படி பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய நடைமுறைச் சாத்தியமான விடயங்களை அவர்களின் வரலாற்றுப் பின்புலத்துடன் ஆராய்வதோடு, நடைமுறையில் இருக்கும் சில சமூக பொருளாதாரக் காரணிகளையும் கூறிச் செல்ல முற்படுகின்றது .

யுத்தம் முடிந்தது பத்து வருடங்கள் கழிந்த நிலையிலும் கணிசமான குடும்பங்கள் இன்னும் பின்தங்கிய நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது என்பதுடன் அண்மையில் ஏற்பட்டுள்ள கொரோனா நிலையும் அவர்களின் பொருளாதார நிலையை கடுமையாக பாதித்துள்ளது. கால்நடை வளர்ப்பு வேளாண்மையைப் பொறுத்தவரை ஆண்களைப் போல பெண்களும் தமது காத்திரமான வகிபாகத்தை செய்கின்றனர். இலங்கைபோன்ற வளர்முக நாடுகள் ஆடு, மாடு, கோழி வளர்ப்பை பல ஆயிரம் வருடங்களாக தமது வாழ்வியலின் ஒரு பகுதியாகச் செய்துவருவதைக் காணமுடிகிறது. பொதுவாக கிராமியப் பொருளாதாரத்தின் அச்சாணியாக இவை அமைகின்றன. இந்த விலங்கு வேளாண்மையில் பெண்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. ஆடு,மாடு,கோழி வளர்ப்பில் பெரும்பாலான வேலைகள் பெண்களாலே செய்யப்படுகிறது. குறிப்பாக விநியோகப்படுத்தல் போன்ற ஒரு சில வேலைகளைத் தவிர ஏனைய எல்லா வேலைகளையும் பெண்களே செய்கின்றனர்.

ஆணாதிக்க சமூகத்தைக் கொண்ட பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளில் ஆண்கள் வேலைக்குச் சென்று சம்பாதிப்பதையும் பெண்கள் குழந்தை வளர்ப்பவர்களாகவும் கால்நடைகளைப் பராமரிப்பவர்களாகவும் மட்டுமே இருப்பதையும் காணமுடிகிறது. உலக மயமாதலும் அதனுடன் அமைந்த கைத்தொழில் புரட்சியும் ஓரளவுக்கு பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கிய போதும் அவை பெரும்பாலும் நகரங்களில் தான் சாத்தியமாகி இருக்கின்றன. குறிப்பாக ஆடைத்தொழிற்சாலைகள் இந்த வாய்ப்புகளை வழங்குகின்றன. எனினும் பெரும்பாலான கிராமங்களில் பெண்கள் இன்னும் வீடுகளில் இருப்பதும் ஆடு, மாடு போன்றவற்றை பராமரிப்பதிலும் தான் ஈடுபடுகின்றனர். இதுதான் பெரும்பாலான வடக்கு, கிழக்கின் கிராமங்களின் இன்றைய நிலையும் கூட. எனவே அவர்கள் சாதாரணமாக செய்யும் இந்த கால்நடை வளர்ப்பை மெருகூட்டி சிறப்புறச் செய்தால் மிகச் சிறந்த வருமானத்தை அவர்களால் பெற முடியும்.

கால்நடை வளர்ப்பில் ஆடு,கோழி போன்ற சிறிய கால்நடைகள் அநேகமாக பெண்களின் கட்டுப்பாட்டில்தான். எனினும் மாடு,எருமை போன்ற பெரிய கால்நடைகள் ஆண் பெண் இரு பாலாராலும் இணைந்தே பராமரிக்கப்படுகின்றன. எனினும் மாடு எருமை வளர்ப்பில் பால் கறத்தல்,பால் உற்பத்திகளை செய்தல்,தொழுவப் பராமரிப்பு,கால்நடைகளுக்கான உணவூட்டல் போன்றவற்றை பெண்களே அதிகம் செய்கின்றனர். கோழி வளர்ப்பில் தீவனக் கையாளுகை, முட்டைகளைச் சேகரித்தல், அவற்றை அடை வைத்து குஞ்சு பொரிக்கச் செய்தல் போன்ற செயன்முறைகளையும் பெரும்பாலும் பெண்களே செய்யும் அதே வேளை இங்கு விற்றல், வாங்கல் நடைமுறைகளும் அவர்களாலே மேற்கொள்ளப்படுகின்றன. ஆடு வளர்ப்பிலும் அதிகளவில் பராமரிப்புப் பணிகள் பெண்களை சேரும் என்றாலும் விற்றல், வாங்கல் செயன்முறைகள் ஆண்களை நம்பித்தான் பெரும்பாலும் நடைபெறுகின்றன.

குறிப்பாக வீடுகளுக்கு மிக அண்மையில் வளர்க்கக் கூடிய கோழி,ஆடு,செம்மறிஆடு,கன்றுக் குட்டிகளை பெண்கள் கையாளும் அதேவேளை , வீட்டில் இருந்து தொலைவில் நடைபெறும் கால்நடைகளை மேய்த்தல் ,விற்கும்,வாங்கும் விடயங்களை அவர்கள் கையாளுவது குறைவு. இதற்கு ஒரு வலுவான ஆண் துணை தேவைப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க பெரும்பாலான கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பெண்களைப் பொறுத்தவரை தொழில்நுட்பப் பின்புலம் மிக மிகக் குறைவாகவே காணப்படுகிறது. அவர்கள் வீட்டுச் சூழலை விட்டு அதிகம் வெளியே செல்வது குறைவு என்பதால் இந்த நிலை ஏற்படுகிறது. இதனால் அவர்கள் சிறந்த பண்ணைகளையும் புதிய தொழில் நுட்ப மாற்றத்தையும் காண்பது அரிது. அவர்களுக்கு சிறப்பான தொழில் நுட்ப அறிவுக்கான பயிற்சிகளை ஆலோசனைகளை வழங்கும் பட்சத்தில் அவர்களால் ,

- **பண்ணையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியும்**
- **அதிகரித்த வருமானம் மூலம் குடும்ப வறுமையை குறைக்க முடியும்**
- **குடும்ப உணவுத்தேவையை பூர்த்தி செய்ய முடியும்**
- **கிராமிய நலன்கள் குறிப்பாக பெண்கள்,குழந்தைகளின் நலன்கள் மேம்படும்.**
- **பெண்களின் குடும்பத்தை தாங்கும் வலு கூடும்/ உறுதியடையும்.**
- **முடிவு எடுக்கும் ஆற்றல் வலுப்படும்.**
- **குடும்பத்துக்கு மேலதிக வருமானம் கிடைக்கும்.**
- **கால்நடை வளர்ப்பு நிரந்தரமானது.வருடம் முழுதும் வருமானத்தை தொடர்ச்சியாக தரவல்லது. சரியாக அவர்கள் வழிநடத்தப்படும் பட்சத்தில் மிகச் சிறந்த வருமானத்தை தொடர்ச்சியாகப் பெறமுடியும்.**

இலங்கையைப் பொறுத்தவரை உள்ளூர்ப் பால் உற்பத்தி மிக மிகக் குறைவு. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பால் மாவையே[ milk powder] அதிகம் நம்பி இருக்கும் நிலை உள்ளது. எமக்கு அண்மைய நாடான இந்தியாவில் பால் மாவைவிட திரவ பால் பாவனையே அதிகம் காணப்படுகிறது. திரவப் பால் ஆரோக்கியமானது. உண்மையில் இலங்கை போன்ற சிறிய நாடுகளில் அதனை நடைமுறைப்படுத்துவதும் மிக இலகுவானது. நான் முன்பே கூறியது போல கால்நடை வளர்ப்பில் பெண்களின் பங்களிப்பு மிக மிக அதிகம் என்பதால் அவர்களுக்கு சிறந்த பின்புலத்தை வழங்கும் பட்சத்தில் மிகச் சிறந்த பிரதிபலனைப் பெற முடியும். இறக்குமதி செய்யும் பால்மாவுக்கான செலவை கணிசமாக குறைக்கலாம். அத்துடன் இலங்கை மக்கள் பொதுவாக கோழி இறைச்சியை அதிகம் உண்ணும் அதேவேளை தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் ஆட்டிறைச்சியை விரும்பி உண்ணும் நிலையும் உள்ளது. இந்த விடயங்களை கருத்திற்கொண்டு இலங்கையில் ஏராளமான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதில் அரச மற்றும் தனியார் அமைப்புகள் பங்குபெறுகின்றன. குறிப்பாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் மூலம் கால்நடை தொடர்பான அரச திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**இந்தத் திட்டங்களாக,**

- நல்லினக் கால்நடைகள் வழங்குதல்.
- கால்நடை வளர்ப்புக்கான ,உயர் உற்பத்திகளைப் பெறுவதற்கான தொழில் நுட்ப அறிவுரைகளை வழங்குதல், பயிற்சி வகுப்புகள், விரிவுரைகள் நடத்துதல் , விடயத் தொடர்புடைய புத்தகங்கள் வழங்குதல்
- செயற்கை முறைச் சினைப்படுத்தல்,நோய்த் தடுப்பு முறைகள், சிகிச்சை முறைகளை வழங்குதல், தடை இன்றிய மிருக வைத்திய சேவையை வழங்குதல்.
- கால்நடைகளை வளர்ப்பதற்கான கூடுகள், கொட்டகைகளை இலவசமாக மற்றும் மானியமாக வழங்குதல்.
- இலகு தவணைக் கடன்களை வழங்க பண்ணையாளரை வங்கிகளுக்கு பரிந்துரைத்தல்.
- புதிய தொழில் நுட்ப மற்றும் சிறந்த பண்ணைகளுக்கு அவர்களை அழைத்துச் சென்று காட்டுதல்

என்பன அமைந்துள்ளன. தற்போது கால்நடை வளர்ப்புக்கு மிகக் குறைந்தளவு வட்டி விகிதத்தில் அரச வங்கிகளில் கடன் உதவி வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய நடைமுறைகள் அரச,மற்றும் தனியார் அமைப்புக்கள் மற்றும் அரசால் தற்போது ஓரளவுக்கு மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் சில பெண் தலைமைக் குடும்பங்களுக்கு பிரத்தியேகமாக வழங்கப்படுகின்றன. எனினும் எமது சமூகத்தில் கால்நடை வளர்ப்பு தொடர்பான பாரம்பரிய பழைய நம்பிக்கைகள் அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் நாகரிக மாற்றங்கள் முட்டுக் கட்டைகளை போடுகின்றன.

கால்நடைகளுக்கு ஏற்படும் கால்வாய் நோய் மற்றும் ஏனைய உயிர்கொல்லி நோய் நிலைமைகளின் போது பெண்களால் அவற்றை தனியாகக் கையாளும் உடல்வலு மிக குறைவு. வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களிலும் அவர்களுக்கு மிகவும் உறுதியான துணை தேவைப்படுகிறது. மேலும் மேய்ச்சல் நிலத்தின் பற்றாக்குறை காரணமாக நீண்ட தூரத்துக்கு கால்நடைகளைக் கொண்டு செல்ல வேண்டியும் ஏற்படுகிறது.

இது கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பெண்களுக்கு சவாலானது. சில வாழ்வாதார உதவிகள் குறிபிட்ட காலத்துக்கு மட்டுமே நிலைத்திருக்கும். எனினும் கால்நடை வளர்ப்புக்கு செய்யும் உதவிகள் நீண்ட காலத்துக்கு நிலைக்கும். புலம்பெயர் உறவுகள் இங்கு வாழும் மக்களுக்கு இது போன்ற உதவிகளை செய்வது இந்த மக்கள் தமது சொந்தக் காலில் நிற்க வழி செய்யும்.

மிகச் சிறந்த தீவன மேலாண்மையை அவர்களுக்கு சிபாரிசு செய்வது புல் வளர்ப்பு, உள்ளக மற்றும் அரை உள்ளக வளர்ப்புக்கு ஏற்ற கால்நடைகளை வழங்குதல் போன்ற செயன்முறைகளை அவர்களுக்கு செய்வதன் மூலம் மேலே கூறப்பட்ட சில பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியும்.

யுத்தம் மற்றும் கொரோனா போன்ற அனர்த்தங்கள் காரணமாக ஏற்படும் பொருளாதாரப் பின்னடைவுகளை உடனடியாகத் தீர்க்க முடியாது. எனினும் சிறந்த திட்டங்களை சரியாக நடைமுறைப்படுத்துவது மூலம் இதனைப் படிப்படியாக மாற்ற முடியும்.

பெண் தலைமைக் குடும்பங்கள், முன்னாள் போராளிப் பெண்கள் என விசேட கவனிப்பு தேவைப்படும் பெண்கள் எம் சமூகத்தில் இருக்கின்றனர். எனவே அவர்களை கை கொடுத்து தூக்கி விடுதலென்பது சமூகத்தில் வாழும் சகலரதும் கடமை. அவர்களின் வலுவையும் இயலுமையையும் சரியாகப் பயன்படுத்துவதோடு, சரியான வாய்ப்புகளையும் வழங்கினால் அவர்கள் முன்னேறுவதோடு எமது சமூகமும் தன்னிறைவு பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

65

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | | | | ■ |
| 11 | | 12 | | ■ | 13 | | 14 |
| | ■ | | ■ | 15 | | ■ | |
| ■ | 16 | | 17 | | ■ | 18 | |
| 19 | | | | ■ | 20 | | |
| 21 | | | ■ | 22 | | | |

**அனுப்புபவர் பெயர்:**...............................................

**முழுமையான தபால் விலாசம்:** ................................

...............................................................

**கையொப்பம்:**...............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. போதனை 5. உலகம் 7. மங்கள நிகழ்வுகளில் இதனைப் பயன்படுத்துவார்கள். 8. குழந்தை 9. காட்டு 10. முற்கால வாகனம் 11. அறுப்பது இதனால் 13. விலக்கும் சொல் 15. பெரு விருச்சமரம் 16. பிரதிக்ஞை 18. தானியத்தின் தோல் (நெல்) 19. பட்டினம் 20. நண்பகல் சமய(ம்) 21. இடம் அல்ல 22. உணவு.

## மேலிருந்து கீழ்

1. நன்மை செய்தல் 2. ஒரு வகைத் தாவரம் 3. சுறுசுறுப்பாக இது சேகரிப்பதை மனிதன் இனிப்பாக அருந்துவான் 4. அனைத்தும் 5. மகள் 6. பெறுமதி 8. இறத்தல், சாதல், அழிதல் 12. சிறுவரின் விளையாட்டுக் கருவி 14. யௌவனமான காட்சி 15. இசைவுச் சொல் 16. அனைத்தும் 17. தங்களது 18. சொரிய 19. புதிய 20. பெரிய

### சொற்சிலம்பம் போட்டி 64 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. அந்தாதி 4. கதவு 6. வனவாசம் 7. சாமரம் 10. மையம் 11. அகராதி 12. அரம் 13. ஏகவாரிசு 14. சகா 15. கல் 16. சகல 17. மனத்திடம்

**மேலிருந்து கீழ்**

1.அஞ்சாமை 2. தாவரம் 3. தினம் 4. கசரோகம் 5. தம் 8. மயங்கல் 9. எதிர்காலம் 11. அரசு 12. அரியன 13. ஏகல் 14.சகட 16. சதி

### சொற்சிலம்பம் போட்டி இல.65

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**14.01.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக** தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 64 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**சி.பிரணவி,**
187, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு**
**திருமதி ந.புஸ்பலதா,**
மீனாட்சியம்மன் கோயிலடி, சங்கத்தானை, சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**
**சி.பாலசுந்தரம்,**
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

**4 ஆம் பரிசு**
**கே.இராஜகோபால்,**
கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

**5 ஆம் பரிசு**
**ப.ஆரணி,**
நாகர்கோவில்.

1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

# யாழ்ப்பாண வரலாறு

ஆரம்பத்தில் பிறமத வழிபாடுகளைத் தடை செய்திருந்த ஒல்லாந்தர், தமது ஆட்சியின் பிற்பகுதியில் பிறமதவழிபாடுகளுக்கு அனுமதி வழங்கினர். ஒல்லாந்தர் காலத்தில் முத்துக் குளிப்பு குத்தகையை எடுத்து வர்த்தகம் செய்து வந்த வைத்திலிங்கச்செட்டியார் அப்போது இருந்த ஒல்லாந்த ஆளுநருடன் நெருக்கமான நட்பு பூண்டிருந்தார். அதனால் வைத்திலிங்கச்செட்டியார், ஆளுநரிடம் கோயில் கட்டுவதற்கான அனுமதியைப்பெற்று 1787 ஆம் ஆண்டு யாழ். நகரப்பகுதியில் காணி ஒன்றைக் கொள்வனவு செய்து வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலைக் கட்ட ஆரம்பித்தார். 1790 ஆம் ஆண்டு கோயில் கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

வைத்திலிங்கச்செட்டியார், வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலைக் கட்டியதும் பெருமாள் கோயிலடியில் இருந்த செட்டிகள் தாங்களும் ஒரு கிருஷ்ணன் கோயில் கட்டுவதற்கு அனுமதி பெற்று வரதராஜப் பெருமாள் கோயிலைக் கட்டுவித்தனர்.

இந்துக்கள் கோயில் கட்டியதும் யாழ்ப்பாண கத்தோலிக்கர்கள் தாமும் ஒரு கத்தோலிக்க தேவாலயம் கட்டுவதற்கு அனுமதி கோரினர். ஒல்லாந்த நிர்வாகமும் கத்தோலிக்க தேவாலயம் கட்டுவதற்கு அனுமதி வழங்கியது.

வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலும் பெருமாள் கோயிலும் கட்டுவதற்கு ஒல்லாந்த அரசு அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து நல்லூர்க் கந்தசாமி கோயில் பிராமணர்களும் நல்லூர் கந்தசாமி கோயில் கட்டுவதற்கு அனுமதி கோரினர். நல்லூர்க் கந்தசாமி கோயில் பிராமணர்கள் தமது விண்ணப்பத்தை மாப்பாண முதலியார் ஊடாகத் தாக்கல் செய்தமையால் அவரது பெயரில் தீர்ப்பு வழங்கப்பட்டதாக இராசநாயகம் முதலியார் எழுதியுள்ளார்.

இதனைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்தின் கட்டுமானப்பணிகள் 1789 ஆம் ஆண்டு ஆரம்பமாகின. தொம்மையாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை, சுவாம்பிள்ளை சூசைப்பிள்ளை, மரியபிள்ளை, அரசுநிலையிட்ட முதலியாரின் மனைவி, பிலிப் நிக்கொலஸ்பிள்ளை, பஸ்தியாம்பிள்ளை நல்லதம்பி ஆகியோர் தேவாலயத்துக்காக காணி அன்பளிப்புச்செய்தனர். சிலர் தமது காணிகளை விற்று பணத்தை தேவாலயக் கட்ட நிதிக்கு அன்பளிப்புச்செய்தனர்.

## ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள்

### கூழங்கைத் தம்பிரான்

ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் இவர் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். காஞ்சிபுரத்தில் பிறந்த இவர் யாழ்ப்பாணம் வந்து வைத்திலிங்கச்செட்டியாருடன் நட்புப்பூண்டு வாழ்ந்து வந்தார்.

வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் கூடும் புலவர் அவைக்கு இவரே தலைமை தாங்கினார். கோவையைச்சேர்ந்த கத்தோலிக்க பாதிரியரான கபிரியேல் பக்சிகோ என்பவர் இவரிடம் தமிழ் கற்றார். பைபிளை மொழி பெயர்த்த பிலிப் டீ மெல்கோ, 'யோசேப்பு புராணம்' என்ற நூலை இயற்றுவதற்கும் உதவி செய்தார். மயில்வாகனப்புலவர், இருபாலை நெல்லைநாத முதலியார் ஆகியோர் இவரின் மாணவர்கள். இவர் நன்னூலுக்கு உரையெழுதியுள்ளதுடன் நல்லைக் கலி வெண்பா,கூழங்கையர் புராணம் என்பவற்றையும் எழுதியுள்ளார். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்த கூழங்கைத் தம்பிரான் 1795 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் காலமானார்.

### வரதபண்டிதர் (1656- 1716)

சுன்னாகத்தில் அரங்கநாதையர் என்பவருக்கு மகனாகப்பிறந்த வரதபண்டிதர், சிவராத்திரி புராணம், கிள்ளை விடு தூது, ஏகாதசிப்புராணம், அமுதசாகரம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

### சின்னத்தம்பிப்புலவர் (1716- 1780)

சின்னத்தம்பிப்புலவர் ஒல்லாந்தரால் தேசவழமைச்சட்டத்தை இயற்றுவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைமை முதலியரான வில்லவராய முதலியாரின் மகன். சிறு வயதிலேயே கவி பாடும் வல்லமை பெற்றிருந்த சின்னத்தம்பிப்புலவர் ஒரு நாள் மாடு மேய்க்கும் சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த போது தமிழ் நாட்டிலிருந்து வந்த வித்துவான் ஒருவர் இவர்களது வீட்டுக்குப்போவதற்கு (வில்லவராய முதலியாரின் வீட்டுக்கு) வழி கேட்க, சின்னத்தம்பிப்புலவர் பாடலிலேயே பதிலளித்தார். பறாளைப்பள்ளு, மறைசையந்தாதி, கரவை வேலன் கோவை, கல்வளையந்தாதி என்பன இவரால் இயற்றப்பட்ட நூல்கள்.

### இணுவில் சின்னத்தம்பிப்புலவர்

சின்னத்தம்பிப்புலவர் என்ற பெயரில் இணுவிலிலும் ஒருவர் வாழ்ந்துள்ளார். இவரால் இயற்றப்பட்ட நூல்கள், பஞ்சகன்னத்தூது, கைலாயநாதன் தோத்திரம்,மறியற்கொச்சம், சிவகாமியம்மன் துதி, சிவகாமியம்மன் திருவூஞ்சல், கைலாயநாதர் திருவூஞ்சல், அனுவுருத்திர நாடகம், நொண்டி நாடகம், வசந்தன் நாடகம்,கோவலன் நாடகம்,இளந்தாரி புராணம் என்பன.

### மயில்வாகனப்புலவர் (1779- 1816)

மாதகலில் வாழ்ந்த இவர் கூழங்கைத் தம்பிரானின் மாணவன். ஒல்லாந்த அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாண வரலாற்றைக்கூறும் யாழ்ப்பாண வைபவமாலையை இவர் எழுதியுள்ளார். யாழ்ப்பாண வரலாற்றைக்கூறும் நூல்களுள் முதல் நூலாக தற்போது யாழ்ப்பாண வைபவமாலையே காணப்படுகிறது. போர்த்துக்கீசருக்கும் சங்கிலிக்குமிடையே இடம்பெற்ற போர் பற்றிய இவரது கூற்றுக்கும் போர்த்துக்கீசரின் குறிப்புகளுக்குமிடையே வேறுபாடு காணப்படுவதாக பின்னாளில் யாழ்ப்பாண வரலாற்றை எழுதிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

### சிற்றம்பலப்புலவர்

இவரும் மாதகலில் வாழ்ந்தார் இருபாலைச்சேனாதிராய முதலியார் ,அராலி அருணாசலம்பிள்ளை ஆகியோர் இவரின் மாணவர்கள்.

(வரலாறு நீளும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகவிழா; நம்பிக்கையின் விதைப்பு

"நடிப்பை வலிந்து செய்யாமல் மிக இலகுவாக எளிமையாக செய்யும்பொழுது அது காத்திரமாக வெளிவருகிறது என்பது இங்கு தெளிவாக்கப்பட்டது. அவர் பேசிய தமிழ்கூட வசீகரிப்பாக இருந்தது. அன்ரன் செக்கோவின் கைவண்ணம் தெளிவாகத் தெரிந்தது. தித்திக்காவின் நெறியாள்கையிலும் நடிப்பிலும் பகீரதனின் நடிப்பிலும் உயிர்பெற்ற உடல்கள் என்ற நாடகம் முக்கியமாக பேசப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஒ க.ரதிதரன்







கொரோனா கால முடக்கங்கள், பாதிப்புகளுக்குப்பின்னர் முதன்முறையாக ஒரு நாடக விழாவை( 31.12.2021 அன்று) 'செம்முகம் ஆற்றுகைக் குழு' நடத்தியது. தொடர் மழை காரணமாக திறந்த வெளியில் நிகழ்த்த வேண்டிய ஆற்றுகையை ஒரு உள்ளக வெளியில் நிகழ்த்தி இருந்தனர். பார்வையாளர்கள் உள்ளும் புறமுமாக நின்று நாடகங்களைப் பார்த்து இரசித்தனர். எல்லா நாடகங்களும் சரியான முறையில் வடிவமைக்கப்பட்டு இருந்தன. அவற்றுள் சில நாடகங்கள் நேர்த்தியாகவும் கனதியான பாடுபொருள்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்தன. சிறுவர் நாடகம், நவீன நாடகம், ஊம நாடகம், யதார்த்த நாடகம் என பல்வேறு வகைகளில் ஆற்றுகைகள் அமைந்திருந்தாலும் எல்லாமே குறுநாடக வகையைக் கொண்டிருந்தன.

நாட்டின் பொருளாதார இடர்பாட்டின் ஆரம்ப நிலையிலும் கூட துணிந்து இந்த முயற்சியில் இறங்கிய செம்முகம் ஆற்றுகைக் குழுவுக்கும், சத்தியசீலனுக்கும் பாராட்டுக்கள். இவ்வாறானதொரு ஆற்றுகை வெளியை (வள நிலைய அரங்கு) வழங்கிய நண்பர் மயூரனுக்கு நன்றிகள். நாடகம் சமூக மட்டத்தில் இயல்பாக செய்யப்படுவது ஒரு நல்ல அறிகுறியாகும். ஏற்கனவே சமூக மட்டத்தில் பல்வேறு அரங்கக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருப்பதும் நாடகங்கள் போடுவதுமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். கொரோனாக் காலங்களில் கூட நாடகம் மற்றும் நாடகக் கதையாடல்கள் இணையவழி ஊடாக நடத்தப்பட்டிருந்தமையை சிறப்பான அம்சமாக இங்கு குறிப்பிடலாம்.

இந்த நாடகவிழாவில், 8 குறுநாடகங்கள் மேடையேற்றப்பட்டிருந்தன. இந்த ஆற்றுகை வெளி ஒரு கொட்டகையின் அண்ணளவாக 15 அடி அகலமும், 10 அடி நீளமும் கொண்ட தரைப் பகுதியாக இருந்தது. அதே போல உள்ளகப் பார்வையாளரும் 30 அல்லது 40 ஆக இருக்க, வெளியில் நின்ற பார்வையாளர்களும் கிட்டத்தட்ட 20 பேராக இருந்திருப்பர்.

எல்லா ஆற்றுகைகளும் முடிந்து வெளியேறும் போது மனம் இலகுவாகவும், நல்ல அனுபவமாகவும் அமைந்திருந்தது. பார்வையாளர்கள் எல்லோருமே அழுதும், சிரித்தும் மகிழ்ந்தனர். குறிப்பாக சிறுவயதுப் பார்வையாளர்கள் மிகுந்த ஆனந்தத்தோடும், மகிழ்ச்சியோடும் நாடகம் பார்த்ததோடு அதில் சிலர் தாமும் பங்கேற்பாளர்களாக மாறவும் செய்தனர். சாரங்கனின் நெறியாள்கையில் உருவான "மெய்நிலை" நாடகத்தில் கொரோனாக் காலத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளின் இணையவழிக் கற்கைக்காக விலையுயர்ந்த கையடக்கத் தொலைபேசி வாங்குவதற்காக படும்பாடு சித்திரிக்கப்படுகிறது. கலையின் வெளிப்பாட்டைக் காட்டிலும் காலத்தின் வெளிப்பாடாகச் சிறப்புற்றுத் துவங்கியது.

அன்ரன் செக்கோவின் எழுத்து வடிவம் "புகையிலை" என்ற பெயரில் சுனில் ஆரியரத்னவால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு ஆற்றுகை செய்யப்பட்டது. சுனில் ஆரியரத்னாவின் நடிப்பு பாத்திரத்துக்கு மிகப் பொருத்தமாக இருந்தது. நடிப்பை வலிந்து செய்யாமல் மிக இலகுவாக எளிமையாக செய்யும் பொழுது அது காத்திரமாக வெளிவருகிறது என்பது இங்கு தெளிவாக்கப்பட்டது. அவர் பேசிய தமிழ் கூட வசீகரிப்பாக இருந்தது. அன்ரன் செக்கோவின் கை வண்ணம் தெளிவாகத் தெரிந்தது.

தித்திக்காவின் நெறியாள்கையிலும் நடிப்பிலும் பகீரதனின் நடிப்பிலும் உயிர்பெற்ற "உயிரற்ற உடல்கள்" என்ற நாடகம் முக்கியமாக பேசப்பட வேண்டிய ஒன்றாகும்.



பிள்ளைகள் எல்லோரும் வெளிநாடு சென்றுவிட்ட பெற்றோரின் இறுதி வாழ்க்கைக்கு ஒரு இயந்திர மனிதன் உதவி செய்கிறான். எவ்வளவுதான் காசை அள்ளிக் கொட்டினாலும் அன்புக்கான ஏக்கமும் தனிமையை போக்காமையும் என்பதே இங்கு மறைந்துள்ள குறியீட்டு அல்லது பூடகமான மறைபொருளாகக் காணப்படுகிறது. இந்த நாடகம் பார்வையாளருக்கு பல்வேறு வகையான அர்த்தங்களை வெளிப்படுத்தி நின்றது. இந்த நாடகத்தின் மறைபொருள் கலைத்துவமாக வெளிப்பட்டது.

சாம்சன் என்ற 11 வயதுச்சிறுவனின் எழுத்துரு, நெறியாள்கை, நடிப்பில் உருவான "சுழன்றால் சுகம்" என்ற நாடகம் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். பிளாஸ்டிக் பாவனையை நிறுத்தும் விழிப்புணர்வாக இந்த சிறுவர் ஓராள் அரங்கு அமைந்திருந்தது. பாடி, ஆடி, மகிழ்ந்து குலாவி ஆற்றுகையைச் செய்த சாம்சன் இங்கு பாராட்டுக்குரியவர்.

சத்தியசீலனின் நெறியாள்கையில் உருவான 'இருக்கை' என்ற நாடகம் மனைவியை இழந்த கணவனை அடிப்படையாகக் கொண்ட நாடகமாகும். மற்றவர்களின் துயரங்களை புரிந்து கொள்ளாத அல்லது புரிந்தும் புரியாமல் இருக்கிற மனிதர்களின் கதையாகவும் இது இருக்கிறது. நாடகம் ஆரம்பிக்கும் போது இறந்து போன மனைவி ஒரு படச்சட்டத்தை மெய்யுருத் தெரியும்படி பிடித்துக்கொண்டு நிற்க கணவன் அதற்கு விளக்கேற்றுவதாக காட்சி அமைகிறது. இங்கு சம்பவம் நடிப்பு என்பன யதார்த்தமாக இருக்க வெளிப்பாட்டு முறையானது செய்து காட்டும் அரங்க நுட்பத்தோடு அமைந்திருந்தது. இந்தக் கதை உண்மைச் சம்பவத்தோடு இணைந்து இருந்தமையால் அங்கு நடித்தவர்களும் மிகவும் உண்மையாக தம்மை வெளிப்படுத்தினர். இது அன்றாட வாழ்க்கையின் மிக நெருக்கமான பிரச்சினை என்பதால் இந்த நாடகம் முடிக்கப்பட்ட முறையில் அதாவது அவர் மீள்வதற்கான ஒரு பாதையை சற்றுத் தெளிவாக காட்டி இருக்கலாம் என்று தோன்றியது.

கனிஸ்ரனின் நெறியாள்கையிலும், நடிப்பிலும் உருவான "இடைவெளி" என்ற நாடகம் கொரோனா காலத்து ஒரு தனி மனிதனின் வாழ்வை வெளிப்படுத்தி நின்றது. யதார்த்தத்தையும் மோடிப்படுத்தலையும் ஒன்றாக இணைத்து உருவாக்கப்பட்ட இந்த நாடகம் ஒரு குறியீட்டு வெளிப்பாட்டையும் கொண்டு இருந்தது. எனினும் சொல்ல வந்த விடயத்தை சற்று தெளிவுபடுத்த ஏதாவது நுட்பங்களைப் பயன்படுத்தி இருக்கலாம். கனிஸ்ரனின் நடிப்பு வெளிப்பாடு நன்றாக இருந்தது.

லோகநாதனின் எழுத்துரு நெறியாள்கையிலும், மகாலிங்கம் மற்றும் லீலாவின் நடிப்பிலும் உருவான "மனச்சாட்சி ஓடுது துரத்திப் பிடி" என்ற நாடகம் இங்கு குறிப்பிட்டு பேசப்பட வேண்டிய ஒன்றாகும். இது மிக யதார்த்தபூர்வமான நாடகமாக அமைவதோடு நடிப்பில் மிக கலைத்துவமாக அந்த நாடகத்தின் மையப் பிரச்சினையை தெளிவாக அலசி ஆராய்ந்து வெளிப்படுத்தியதோடு நாடக முடிவில் ஒரு சிறு விவாதத்தையும் உண்டாக்கியிருந்தது. லோகானந்தன், மகாலிங்கம், லீலா போன்றோர் அரங்கில் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர்கள். இந்த நாடகத்தினூடாக ஒரு சிறிய பிரச்சினையை காட்டி ஒரு பெரிய செய்தியை வெளிப்படுத்தியது சிறப்பானதாகும். அதாவது மனிதர்கள் தமது மனிதாபிமானத்தை எத்தனை தடவை ஆனாலும் இழக்காது இருத்தல் வேண்டும் என்பது புலப்பட்டது.

"ஒன் த ஸ்பொட்" என்ற பகீரதனின் நெறியாள்கை மற்றும் நடிப்பில் உருவான ஊம ஓராள் அரங்கு சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் எல்லோரையும் கவர்ந்திழுத்தது. பகீரதனின் ஊம நடிப்பு சிறப்பாக வெளிப்பட்டது. அவர் தனது உடல் மொழியின் மூலம் சம்பவங்கள், செய்திகளைத் தெளிவாக வெளிப்படுத்தியதோடு நாடக ஆற்றுகையில் சிறுவர்கள், பெரியவர்களையும் இணைத்து ஒரு பங்குபற்றும் அரங்கு போல நிகழ்த்தி இருந்தார். இங்கு உடலை வளைத்து நெளித்து நடிக்கும் போது பார்வையாளர் கூடத்திலிருந்து ஒரு சிறுவன் சிரித்த சிரிப்பை பார்க்க எல்லோருக்கும் சிரிப்பு சிரிப்பாக வந்தது.

இறுதியாக ஆற்றுகை செய்யப்பட்ட "எங்கே போனார் எலியார்" என்ற சத்தியசீலனின் எழுத்துரு, நெறியாள்கையில் உருவான சிறுவர் நாடகம் குறிப்பிட்டுப் பேசும்படியாக இருந்தது. எலியைத் தேடும் போது பார்வையாளர் சிறுவர்கள் எங்கே எலி ஒளிந்து கொண்டிருக்கின்றது என்பதை தேடுபவருக்கு சொல்லிக் கொடுத்தனர். அதே போல சிறுவர்களும் ஆற்றுகை வெளியினுள் நுழைந்து எலிகளைப் பிடிக்க உதவினர். இந்த சிறுவர் நாடகம் எல்லா இடங்களிலும் கொண்டு சென்று ஆற்றுகை செய்யப்படுதல் வேண்டும். இன்றைய கல்வி உலகம் சிறுவர்களுக்கான மன அழுத்தங்களையும் ஏற்படுத்துவதால் அவற்றிலிருந்து மீள்வதற்கு இந்த சிறுவர் அரங்கு பேருதவி புரியும். இதன் எழுத்துருவை எப்பொழுதுமே ஒரு பரிமட்டான அல்லது ஒரு நெகிழ்வான தன்மையில் வைத்திருந்தால் பங்குபற்றும் சிறுவர்களாலேயே இடத்துக்கிடம் வேறுபட்ட சிறுவர் ஆற்றுகை வெளிப்படவும், புதிய பரீட்சார்த்த முயற்சிகளாகவும் அமைந்திருக்கும். இந்த நாடகம் சிறுவர்களின் உடலையும், மனதையும் மட்டுமல்ல பெரியவர்களின் மனதையும் இலகுபடுத்தியது.

ஊஉஊர் இன் இயக்குனர் மயூரன் வழங்கிய இட வசதிகளோடும் செம்முகம் ஆற்றுகைக் குழு சிக்கனப்படுத்தி எடுத்த பதினைந்தாயிரம் ரூபாவோடும் பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தின் ஒளியமைப்பு சாதனங்களோடும் இப்படி ஒரு நாடக விழாவை செய்து முடித்தது மெச்சத்தக்க ஒன்றாகும். இந்த நாடக விழா தங்களுக்கு ஒரு பெரிய நம்பிக்கையை தந்தது என்று சத்தியசீலன் குறிப்பிடுகிறார். இந்த நாடக விழா முடிவில் ஒரு பெட்டியை எல்லோரிடமும் பிடித்து பார்வையாளர்களிடம் ஒரு தொகை பணம் பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கு தேவையான உதவிகள் கிடைத்தால் இன்னமும் இதை மெருகேற்றிச் செய்வார்கள் என்ற நம்பிக்கை தெரிகிறது.

எனினும் ஒரு சிறிய உள்ளக வெளியினுள் பார்வையாளரும், ஆற்றுவோரும் மிக நெருக்கமாக அருகருகே இருந்து ஆளோடு ஆள் பேசுவது போல ஆற்றுகை நிகழ்த்தும் போது அன்னியோன்னியமும் ஊடாட்டமும் அதிகம் இருக்கும். ஆனால் திறந்த வெளிக்கு வரும் போது இதன் வெளிப்பாட்டுத் திறன் மிக அதிக அளவில் தேவைப்படும் என்பது இவர்களது எதிர்கால நாடக விழாவுக்கான சவால்களில் ஒன்று. அதையும் வெல்வார்கள் என்ற நம்பிக்கையை இந்த நாடக விழா விதைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவின் சீற்றம்!

2022 ஆம் ஆண்டுக்கான முதலாவது அமைச்சரவைக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை இரவு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நடைபெற்றது.

வழமையாகப் புன்னகையுடன் அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்கும் ஜனாதிபதி, அன்றைய தினம் கடுப்பிலேயே இருந்துள்ளார்.

கூட்டத்தின் ஆரம்பத்திலேயே, " அரசை விமர்சித்துக்கொண்டு, எவரும் அரசியல் இருக்க வேண்டியதில்லை. அவ்வாறானவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். எனக்கு எதிராக வாக்களித்த 55 லட்சம் பேரும் இருக்கின்றனர். அவர்கள் பக்கத்துக்கு சென்று விமர்சனங்களை முன்வைக்கலாம்." என சீறிப்பாய்ந்துள்ளார் ஜனாதிபதி.

இவ்வாறு ஜனாதிபதி கடும் சினத்துடன் உரையாற்றுவதை விழி பிதுங்கிய நிலையில் சில அமைச்சர்கள் செவிமடுத்துக் கொண்டிருந்தனர். குறிப்பாக கடந்த காலங்களில் அரசைக் கடுமையாக விமர்சித்த அமைச்சரவைத் தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றம் சென்றுள்ள - அமைச்சர்களான விமல்வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில ஆகியோரும் 'கப்சிப்'.

அதன்பின்னர் 49 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி கையில் எடுத்துள்ளார். " நாட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்." என சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்புவரை காத்திருக்காமல் அன்றைய தினமே சலுகைகள் தொடர்பான அறிவிப்பை விடுக்குமாறு பணித்தார். இதனையடுத்து அன்றைய தினம் இரவே பஸில் ராஜபக்ச அவசர ஊடகச் சந்திப்பொன்றை நடத்தி, 5000 ரூபா உட்பட நிவாரணத் திட்டங்கள் தொடர்பான அறிவிப்பை விடுத்தார்.





## அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

# சுசிலுக்கு ஆறுதல்



தென்னிலங்கையில் உள்ள சிரேஷ்ட அரசியல்வாதிகளுள், இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள சுசில் பிரேம ஜயந்தவும் ஒருவர். அரசியலில் அடிமட்டத்தில் இருந்து மேல்மட்டம்வரை வந்தவர். நகரபிதா, மாகாண முதல்வர், பிரதி அமைச்சர், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் என முக்கியமான பதவிகளை வகித்துள்ளார்.

அதுமட்டுமல்ல பலம்பொருந்திய அரசியல் கூட்டணியாக விளங்கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளராகவும் 10 ஆண்டுகள் வரை பதவி வகித்தவர். பல தேர்தல்களில் மஹிந்த தரப்பை வெற்றிபெற வைப்பதற்கு கட்சிக்கு நிர்வாக மட்டத்தில் சக்தி வழங்கியவர்.



இப்படியான ஒருவரைத்தான் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிரடியாக நீக்கியுள்ளார். இந்த விவகாரம் ஆளுங்கட்சிக்குள்ளும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. சுசில் பிரேமஜயந்த சனிக்கிழமை நாட்களில் சந்தைக்குச் செல்வது வழமை. கடந்த முதலாம் திகதியும் சந்தைக்குச் சென்றார். அங்கு வந்த ஒரு ஊடகவியலாளர் ஒருவர், 'சேர், சந்தை நிலைவரம் எப்படி? நாட்டு நிலைவரம் எப்படி?' என்றும் கேட்க, விளாசித்தள்ளினார் சுசில்.

" அந்நிய ஆக்கிரமிப்பின்போதுகூட, எமது நாட்டு விவசாயம் இந்தளவுக்கு பாதிக்கப்படவில்லை. ஆனால் தற்போது தவறான முடிவுகள் எடுக்கப்பட்டதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எம்மைப் போன்றவர்கள் முடிவெடுக்கும் இடத்தில் இல்லை. ஓரமாக நிறுத்தப்பட் டுள்ளோம்.விவசாயத்துறை அமைச்சர் 'பெயில்'. உரியவகையில் செயற்படக்கூடிய- தகுதியானவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும்." - என்றார் சுசில்.

அவரின் அந்த அறிவிப்பு தொடர்பான காணொலி சமூகவலைத் தளங்களில் வைரலானது. தேசிய ஊடகங்களிலும் பிரதான செய்தியானது. இதனால் கடுப்பான சில அமைச்சர்கள் அது தொடர்பில் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளனர். ஜனாதிபதியும் கோபத்தின் உச்சத்துக்கு போனார்.

திங்கள் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் கடும் சினத்தை வெளியிட்டார். மறுநாள் செவ்வாய்கிழமை இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டார். சுசில் பிரேமஜயந்த, இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்குக்கூட தெரியாதாம். சுசிலுக்கு அழைப்பை ஏற்படுத்திய பிரதமர் மஹிந்த, " சுசில், ஷிராந்தி சொல்லித்தான் எனக்கே விடயம் தெரியும். உங்களுக்கு நடந்தது தொடர்பில் கவலை அடைகின்றேன்." என குறிப்பிட்டுள்ளார். ஆளுங்கட்சியில் உள்ள மேலும் சில உறுப்பினர்களும் சுசிலுக்கு நேர்ந்த கதி குறித்து அதிருப்தியை வெளியிட்டுள்ளார்கள். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சுசிலுடன் தொலைபேசிமூலம் உரையாடியுள்ளார். அநேகமாக சுசில், சுதந்திரக் கட்சியின் பக்கம் தாவக்கூடும் என்றும் சொல்லப்படுகின்றது.

# பழசும் புதிசும்

புதிய ஜனாதிபதி செயலாளராக காமினி செனரத் எதிர்வரும் 20 ஆம் திகதி கடமையேற்கவுள்ளார். தற்போது ஜனாதிபதி செயலாளராக செயற்படும் பி.பீ. ஜயசுந்தர 15 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திலிருந்து விடைபெறவுள்ளார். ராஜபக்ச குடும்பத்துக்கு விசுவாசமாக செயற்படக்கூடிய காமினி செனரத், பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் நம்பிக்கைக்குரியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பழைய மொந்தை பழைய கள்

அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ள நிலையில், புதிதாக எவரும் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படமாட்டார்களெனத் தெரியவருகின்றது. இதனால் இருப்பவர்கள் மத்தியில் விடயதானங்களே கைமாற்றப்படவுள்ளன.

இதன்படி சுமார் 50 வீத அமைச்சுகள் மறுசீரமைக்கப்படுமென தகவல்கள் வெளியாகியுள்ளன. விவசாயம், சுற்றாடல், வர்த்தகம் உட்பட மேலும் சில அமைச்சுகள் கைமாறப்படவுள்ளன. அதற்கான மீளாய்வுப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

அதேபோல இராஜாங்க அமைச்சுப் பதவிகளிலும் பல மாற்றங்கள் இடம்பெறவுள்ளன. சுசில் பிரேமஜயந்தவின் இடத்துக்கு யாரை நியமிப்பது என ஆராயப்பட்டுவருகின்றது. மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அதில் எஸ்.பி. திஸாநாயக்கவின் பெயர் முன்னிலையில் இருப்பதாக தகவல். பழைய மொந்தைகளில் பழைய கள்ளையே கொஞ்சம் இடம் மாற்றி, திரும்ப ஊற்றுப்படப்போகின்றதாம்.



# நலமா ராஜித?

நல்லாட்சியின்போது சுகாதார அமைச்சராக பதவி வகித்தவர் ராஜித சேனாரத்ன. கோத்தா ஆட்சியில் சுகாதார அமைச்சராக செயற்பட்டவர் பவித்ரா. அதேபோல இவ்விருவரும் அரசியல் களத்தில் சரமாரியாகச் சொற்கணைகளைத் தொடுத்துக்கொள்வார்கள். ராஜித காலத்தில் சுகாதார அமைச்சில் மோசடிகள் இடம்பெற்றன என பவித்ராவும், அவ்வாறு நடைபெறவில்லை என ராஜிதவும் அடிக்கடி சபையிலும் கருத்தியல் ரீதியிலும் மோதிக்கொள்வர். சுகாதார அமைச்சராக செயற்பட்ட பவித்ராவுக்கும் கொரோனா தொற்றியிருந்தது. அவர் அவசர சிகிச்சைப்பிரிவில்கூட சிகிச்சைபெற்றார். கடும் போராட்டத்துக்கு மத்தியில் மீண்டுவந்தார். அதன்பின்னர் அரசியலில் அவர் எவரையும் கடுமையாக விமர்சிப்பதில்லை. ஆவேசமாக உரையாற்றக்கூடிய அவர் அடக்கி, வாசிக்கத் தொடங்கினார்.

'மரணத்தின் நுழைவாயிலுக்கே சென்று திரும்பிய நான், வாழ்வின் உண்மையான அர்த்தத்தை புரிந்துகொண்டேன், இனி மனித நேயத்துக்கே முன்னுரிமை' எனக்கூறி தனது அரசியல் ஸ்டைலை மாற்றிக் கொண்டார். சுகாதார அமைச்சு பதவி பறிபோன பின்னர், செயற்பாட்டு அரசியலில் அவர் அதிகம் ஆர்வம் காட்டுவதில்லை. ராஜபக்சக்களுக்காக கூவுவதையும் தற்போது நிறுத்திக்கொண்டுள்ளார்.



ராஜித சேனாரத்ன கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். பிரதமர் உட்பட பல அரசியல்பிரமுகர்கள் அவரிடம் சுக நலம் விசாரித்து வருகின்றனர். அந்த பட்டியலில் பவித்ராவும் இணைந்துகொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மானத்தீ

○ கருணை ரவி


பூங்கொடிக்கு நித்தியை நினைக்க கவலையாக இருந்தது. நித்தி ரியூசனுக்குப்போவதில்லை. ரியூசன் காசு கட்டவும் வசதி இல்லை. கந்தவிக் கிழவன் கரைவலை இழுக்கப்போனால்தான் சாப்பாடு. மரியதாஸ் ஒட்டகப்புலத்துக்கு பூறாட்டியைக் கூட்டிக்கொண்டு போய் புக்கை கட்டிய பிறகுதான் பூறாட்டிக்கு நோவு குறைந்தது.
பூங்கொடியின் காதில் இருந்த தோட்டை பிலிப்பிடம் அடைவு வைத்து அந்தக்காசுக்கு கருவாட்டை கட்டி, பூறாட்டி சிறு வியாபாரம் செய்தான். சைக்கிளில் உடுப்பிட்டிச் சந்தைக்கும் கொயிலுச் சந்தைக்கும் இலக்கணாவத்தை, இலந்தைக்காடு, வல்வெட்டி என வீடு வீடாகவும் கருவாடுகளைக் கொண்டுபோய்க் கொடுப்பான்.
பூறாட்டி பூங்கொடியிடம் மூன்று மாத ரியூசன் காசைக் கொடுத்தான். நித்தி ரியூசனுக்குப்போக மறுத்தான். முகம் தெரியாதவர்களோடு நித்தி சிநேகிதம் வைத்திருப்பதும் இரவில் நெல்லியடி மஹாத்மா தியேட்டருக்கும் லக்ஷ்மித் தியேட்டருக்கும் படம் பார்க்கப் போவதும் கிழவனுக்குப் பிடிப்பதில்லை. பூங்கொடி சொல்லியும் கேட்கமாட்டான்.
ஒருநாள் நெல்லியடி லக்ஷ்மித் தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருக்க நெல்லியடிக்கு வந்த பொலிஸ்காரருக்கு புலிகள் சுட்டார்கள். ஐந்து நிமிடம் பொலிஸோடு சண்டை பிடித்து அவர்களை சுட்டுக்கொன்று விட்டு அவர்களின் துப்பாக்கிகளைப் பறித்துக் கொண்டு ஓடினார்கள்.




சண்டை நடக்க தெருக்களில் நின்ற சனங்கள் கத்திக் கொண்டு அல்லோலகல்லோலப் பட்டார்கள். சிறுவர்கள், பெரியோர்கள் எல்லோரும் திக்குத்தெரியாது சிதறியோடினர். கடைக்காரர் கடைகளை பூட்டியும் பூட்டாததுமாய் ஓடினார்கள். தியேட்டர் இஞ்சின் நின்றதும் உள்ளிருந்தவர்கள் கலாதிப்பட்டனர்.
" ஜெயக்கொடிக்குக் காயமாம்"
யாரோ சொல்லிக் கொண்டு ஓடினான்.
" மாணிக்கராசா வரப்போறான்"
வேறொருவன் சொல்லிக்கொண்டு ஓடினான். பொலிஸ் மாணிக்கராசா என்றால் நெல்லியடி கலங்கும். சந்திகளில் இளைஞர்கள் கூட்டமாக நிற்க முடியாது. ரியூசன் விடும் நேரங்களில் மாணவிகளை இளைஞர்கள் பின்தொடரக் கூடாது. லைற் இல்லாமல் இரவில் சைக்கிள் ஓடமுடியாது. மாணிக்கராசாவின் கைத்தடியில் எப்பவும் இரத்தம் பிசுபிசுக்கும்.
பூங்கொடி படலையில் நின்று நித்தியைத் தேடினாள். நெல்லியடியில் பொலிஸைச் சுட்டது ஊரெல்லாம் பரவியது. ஜெயக்கொடிக்குக் காயம் என்றதும் சிலர் இரங்கினர். பொலிஸ்காரர் தெருவுக்குத்தெரு வேட்டை நாய்கள் மாதிரித் திரிந்தார்கள். சனங்கள் கேற்றுக்களைப் பூட்டினார்கள். பூங்கொடி அழுதமுது நித்தி வரும் வழியைப் பார்த்தாள்.
நெல்லியடியில் என்ன புதுப்படம் வந்தாலும் நித்திதான் முதல் ஆளா நிற்பான். காசு என்று கெஞ்சினாலும் பூங்கொடி கொடுக்கமாட்டாள். கந்தவிக்கிழவன் புறுபுறுப்பார். கிழவன் எதிர்த்துக் கதைத்தால் நித்தி முறாய்த்துப் பார்ப்பான்.
"பசிக்குதெண்டா பாணுக்கு காசு குடுக்கலாம். படத்துக்கு எண்டு கேக்க தூக்கிக் குடுத்திட்டு சவட்டிக்கொண்டு கிடக்கிறார்."
பூறாட்டியைப் பேசிக்கொண்டு தெருவில் நின்றாள் பூங்கொடி. மரியதாஸின் றொபோவோடு நித்தி படத்துக்குப் போனான். றொபோவோடு கூடக்குடாது என்று கந்தவிக்கிழவன் எத்தனையோ தடவைகள் சொல்லியும் கேட்கவில்லை. றொபோ பள்ளிக்கூடம் போகாமல் இயக்கங்களோடு திரிகிறான். நோட்டீஸ் குடுக்கப்போறான். இரவில் சென்றிக்கும் போறான் என்று மரியதாஸ் சொல்லுவான்.
பூங்கொடிக்கு கிழவன் எத்தனையோ தடவைகள் இவைகளைச் சொல்லியும் பூங்கொடி அசட்டுத்தனத்தில் இருந்த கோபத்தில் கிழவன் நித்தியைத் தேடி தெருவுக்கு வரவில்லை.
பூறாட்டி மரியதாஸ் வீட்டைபோய் றொபோ வந்திட்டானோ என விசாரிக்க எழும்பி கேற்றடிக்குப் போனான். பொலிஸ்காரர் தெருவழிய நிற்பார்கள் என்று பூங்கொடி போகவிடாது தடுத்தாள்.
தூரத்தில் இலாம்பு வெளிச்சம் தெரிந்தது. கனகம் வீட்டு ரேடியோ பெரிய சத்தமாகப் படித்தது. ஒன்பது மணிச் செய்திக்கு கனகம் எப்பவும் ரேடியோவை பெரிய சத்தமாய் கூட்டிவிடுவாள். செய்தி முடிந்ததும் நிப்பாட்டமாட்டாள். பத்துமணியில் இருந்து பதினொரு மணிவரை இரவின் மடியில் பழைய பாடல்களை கேட்டபிறகே ரேடியோவை நிப்பாட்டுவாள். பழைய பாட்டு என்றால் அவளுக்கு ஒரு கலை.
படகில் வலைகளை ஏற்றிவிட்டு அந்தோனி கடலில் இறங்காமல் மணலில் படுத்திருந்தான். விடிய என்ன நடக்குமோ என்ற பயம் அவனில். ஜெயக்கொடிக்குக் காயம் என்றதும் செத்திருக்கலாம் என்று நினைத்தான்.
அந்தோனி ஆட்களை வைத்து மரங்கடத்துவான். வன்னியில் இருந்து புதுக்காட்டுச்சந்தியால் மருதங்கேணி வந்து அப்படியே அம்பன் குடத்தனையால் மரங்களைக்கொண்டு வருவான். ஜெயக்கொடி மடக்கிப்பிடிப்பான். அவன் பிடித்தால் தப்பமுடியாது. இலஞ்சமும் வாங்க மாட்டான். உடனே வழக்குப் போடுவான்.
பிலிப்பு இலாந்தரோடு வந்தான். பூங்கொடியைக் கண்டதும் நித்தியை விசாரித்தான். நித்தி படத்துக்குப்போய் வராததை கவலையோடு பிலிப்புக்குச் சொன்னாள்.
"விடிய சந்தைக்கு வாழைக்குலை கொண்டுபோகோணும். குலையை வெட்டி வைச்சிட்டு வாறன். நித்தி சைக்கிளை வாங்கிக் கொண்டு போனவன், இன்னும் கொண்டு வந்து தரேலை"
படத்துக்கு என்றால் பிலிப்பு சைக்கிள் கொடுத்திருக்கமாட்டான். பூறாட்டிக்கு குளிசை வாங்க என்று சொல்லிச் சைக்கிள் வாங்கியதை பூங்கொடிக்குச் சொன்னான். பிலிப்புக்கு ஏமாத்து, பொய், களவு ஒன்றும் பிடிக்காது.
கொஞ்சநேரம் பூங்கொடியோடு கதைக்காமல் நின்றான்.
அவளின் கவலையை பிலிப்பு பெரிதாக்க விரும்பவில்லை. சைக்கிளின் அவசரத்தை புரிய வைத்தாலும் அவளிடம் எந்தப்பரிகாரமும் கிடைப்பதில்லை என்பதை உணர்ந்து, நித்தி வந்ததும் சைக்கிளை கொண்டு வந்து தரும்படி சொல்லிவிட்டுச் சென்றான். பூங்கொடிக்கு சைக்கிள் வாங்கியது பெரிய சங்கடமாகவும் குற்ற உணர்வாயுமிருந்தது. அவள் பொய் சொல்லாதவள். நித்தி பொய் சொல்லி சைக்கிள் வாங்கியதை தாங்கமுடியாமல் நின்றாள்.
" அம்மா..."
பூங்கொடி திரும்பிப்பார்த்தாள். நித்தி இருள்மாதிரி நின்றான்.

(வருவாள்)





## நவீன சிவபெருமானின் ஒரு ஞாயிறு

பனியன் மேனியனாய்,
அசுதரனும் கம்பளதரனும்
தோடுகளற்ற செவியில்
ஏர்பாடுகளாய் மாறி
பாடிக்கொண்டிருக்க,

தட்சனுக்கு பயந்த சந்திரன்
கொரோனா கடையடைப்பின்
கத்தரி படாத சிகையின் மேல்
நைக்கியின் இலச்சினையாய் மாறி
சூடிய தொப்பியில் சரிந்திருக்க,

கதிர் புகா கண்ணாடியால்
தன் நெற்றிக் கண்ணை மறைத்தபடி

வியர்வை வர
கழற்றி வைத்த
மேல் ஆடையை
அரக்கசைத்து,
நடைப்பயிற்சி முடித்து வந்த
நவீன சிவபெருமான்

ஆளற்ற உருக்கின்
இருக்கையில் அமர்ந்தபடி,
களைப்பில் கண்ணயர்ந்து
சிலையாய்
சமைந்துவிட்டார்.

மூச்சு வாங்கி மெல்ல நின்று
சற்று தாமதமாய் ஸ்தலம் சேர்ந்த
பார்வதி தேவியவர்
என்னங்க! என ஆணையிட,

உடனடியாய் உறக்கம் முறித்து
தண்ணீர் குடுவையை
பையில் தேடி எடுத்துத்
திருகி நீட்டுவார், பிராட்டியிடம்.

ஓரத்து மர நிழலில்
வேலவனும் விநாயகனும்
பிணக்குகள் யாதுமற்று,
ஞானப்பழத்தை
பகிர்ந்துண்ணக் கண்ணுற்று,

நாரதர் எங்கே இன்னும்
வரக்காணோம்?
என சிந்தை கொண்டு,

கைபேசியை இடம்மாற்றி
கால்நீட்டி கண்ணயர்வார்
கயிலை நாதர்....

வேணுகோபால் தயாநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலன் பிறக்கிறான்

சஞ்சீவி **சிறுகதை**

ஆசி.கந்தராஜா



வறட்சி.
கிழக்கு ஆபிரிக்க நாடுகளிலே மழை பொய்த்து விட்டது. இதுவரை காணாத வறட்சி எனப் பேசிக் கொண்டார்கள். கிளிமஞ்சாரோ (Kilimanjaro) ஆபிரிக்காவின் மிக உயர்ந்த மலை. அதன் உச்சியிலுள்ள உறைபனிகள் என்றும் உருகுவதில்லை. இருந்தாலும் என்ன? அதன் அடிவாரத்திலே இப்பொழுது வறட்சி. பசுமை இழந்து குச்சிகளைத் தாங்கிய மரங்கள், வற்றிய நீரோடை. மரங்கள் சிலவற்றின் உச்சிகளுக்கு, தமது கழுத்தை நீட்டி ஒட்டகச்சிவிங்கிகள் உணவு தேடின. மெலிந்தன வலியனவுக்குப் பணியும் நியதி. பிணம் தின்னும் கழுகுகள் மட்டும் வயிறாற உண்ட களைப்பில் உயிர்ப்பிழந்த மரக்கொம்புகளில் இளைப்பாறின. மலை அடிவாரத்தின் தென்மேற்குத் திசையில் குரவைச் சத்தங்களும் மேளச்சத்தங்களும் ஒலித்தன. அங்கு வாழும் சுதேசிகள் ஒன்றாக இணைந்து வேள்வி நடத்துகிறார்கள். மழை பொய்த்ததால் வனமும் மக்கள் வயிறும் வறண்டு விட்டன. அந்த வறட்சியிலே 'டிரைபல்' (Tribal) முறுகல்களும் விரோதங்களும் கருகினபோலும். அனைவருக்கும் இப்போது வேண்டியது மழையே! அதற்காக, அவர்களின் கலாசார மரபு, வேள்வியும் கூட்டுவழிபாடும்!

வேள்வி தொடங்கியிருக்க வேண்டும். வேள்வியில் பலியிடும் ஆடுகளின் அலறல் கொட்டுமேளச் சத்தங்களை மேவி எதிரொலித்தது. எலும்பும் தோலுமாக வயிறு ஒட்டிய நிலையில் உள்ள ஆடுகள், மேலதிகமாக வேள்வி நடக்கும் இடத்துக்கு இழுத்துச் செல்லப்படுகின்றன.

ஹகங்கி இன்று வேள்விக்குப் போகவில்லை. அவளால் இயலவில்லை. இப்பொழுதெல்லாம் அடிக்கடி அவள் சிறுநீர் கழிக்க வேண்டும். பிரசவ காலம் நெருங்க நெருங்க இந்த உபத்திரவம் அவளைப் பாடாய்ப்படுத்துகிறது. இன்று மதியத்திலிருந்து அடிவயிறும் விட்டுவிட்டு வலிக்கிறது. இந்த வலியின் அர்த்தம் அவளுக்குத் தெரியும். ஒருமுறையல்ல மூன்று முறை ஆண் குழந்தைகளைப் பிரசவித்தவள். ஒன்றுமே பிழைக்கவில்லை. இந்தக் குழந்தையாவது தனக்குத் தங்க வேண்டுமென்று அவள் வேண்டாத தெய்வம் இல்லை.

சென்றவாரம் தான் கணவனின் இனத்தவர்கள் காட்டுக் கிராமத்திலிருந்து, கிளிமஞ்சாரோ மலையையொட்டி, இவள் வாழும் விவசாயப் பூமிக்கு வந்திருந்தார்கள். மழை இல்லை. வன வருமானமும் வேட்டையும் படுத்துவிட்டன. மழை வரும் வரை. அல்லது ஏதோ ஒரு வருமானம் கிடைக்கும் வரை இங்கே தான் இருப்பதாக உத்தேசம் என்று கூறி உட்கார்ந்து விட்டார்கள். அவர்களை 'வெளியே போ' என்று சொல்லவோ அல்லது 'எம்மிடம் பணமில்லை' என்று கூறவோ முடியாது. குல ஆசாரங்களைப் பேணுதல் அவர்களின் இனக் கடமை. இதனால் அவர்கள் அங்கு இருக்கும் வரை சாப்பாடு போட்டேயாக வேண்டும். தவறினால், அந்த 'டிரைப்' மக்கள் ஹகங்கியையும் அவள் கணவனையும் தங்கள் குலத்திருந்து விலக்கி விடுவார்கள்.

எதிர்பாராத இந்த செலவுகளைச் சமா ளிப்பதற்காக அவள் கணவன் எல்லைதாண்டி நைல் நதிக் கரையில் வாழும் தன் பால்ய நண்பனைப் பார்க்கச் சென்றிருக்கிறான். வாரம் ஒன்றாகியும் அவனிடமிருந்து தகவல்கள் வராதது ஹகங்கிக்கு மனச்சோர்வை ஏற்படுத்தியது. அண்டி வாழவந்த கணவனின் 'டிரைபல்' இனத்தவர்களும் வேள்விக்கு சென்று விட்டார்கள்.

ஹகங்கிக்கு அடிவயிற்றில் மீண்டும் நோவெடுத்தது. பன்னீர்க்குடம் உடைந்து விட்டது. பிரசவத்துக்கு வந்திருந்த எலிச பெத் சுறுசுறுப்படைந்தாள். இவள் அங்குள்ள மாதா கோவிலைச் சேர்ந்த கன்னியாஸ்திரி. அந்த கோவிலில்தான் ஹகங்கி யும் தோட்ட வேலை செய்கிறாள். அவ ளும் இவளும் ஒத்த வயதுத் தோழிகள். நட்பின் இறுக்கம் எலிசபெத்தை இங்கு பிரசவம் பார்க்க வைத்துள்ளது.

மின்னலென ஒரு வலி அடி வயிற்றில் இருந்து நெஞ்சுவரை பாயவே, ஹகங்கி தம்பிடித்து முக்கினாள். அது பிரசவ முக்கல்... அழகான குழந்தை ஒன்று ஜனனமாகியது. 'ஹகங்கி, நீ அதிர்ஷ்டக்காரி. பெண்குழந்தை...., ராணியாட்டம் உனக்கு சீர்வரிசை கொண்டுவரப் போகிறாள். எத்தனை பேர் அவளுக்கு 'மணப்பெண் கூலி' கொடுக்க போட்டி போடுகிறார்கள் என்று பாரேன்' என்று உற்சாக வார்த்தைகள் கூறிக்கொண்டே தொப்புள் கொடியை கயிறால் இறுகக்கட்டி நறுக்கத் தயாரானாள்.

ஹகங்கி மூச்சைப்பிடித்து மீண்டும் முக்கினாள். முன்னைய தொப்புள் கொடியை நசித்தவாறு இன்னொரு சோடி பிஞ்சுக்கால்கள் உலகத்தை எட்டிப் பார்த்தன. பிரசவம் பார்த்த எலிசபெத் அரண்டு விட்டாள். இரட்டைக்குழந்தை, அதுவும் காலால் பிறக்கிறது. 'ஆண்டவரே...., இந்த நேரத்திலா....?' எலிசபெத் சிலுவைக் குறியிட்டாள்.

ஹகங்கி கண்களை மூடி அரை மயக்கத்தில் படுத்திருந்தாள். முக்குவதற்குக்கூட அவளிடம் பலமில்லை. ஆட்டமும் பாட்டமும் வேள்வியும் முடிந்து உறவுகள் வீட்டுக்கு வருவதற்கு முன்பு ஏதாவது செய்ய வேண்டும். கன்னியாஸ்திரிகளுக்கான மேலங்கியை இழுத்துச் செருகியவாறு எலிசபெத் சுறுசுறுப்புடன் பணியில் ஈடுபட்டாள். காட்டாமணக்கெண்ணையை கைகளிலே தடவி பிஞ்சுக் கால்களை இறுகப்பற்றி குழந்தையை வெளியே இழுத்தாள். இரண்டாவதாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

**ஹகங்கி மூச்சைப்பிடித்து மீண்டும் முக்கினாள். முன்னைய தொப்புள் கொடியை நசித்தவாறு இன்னொரு சோடி பிஞ்சுக்கால்கள் உலகத்தை எட்டிப் பார்த்தன. பிரசவம் பார்த்த எலிசபெத் அரண்டு விட்டாள். இரட்டைக்குழந்தை, அதுவும் காலால் பிறக்கிறது. 'ஆண்டவரே, இந்த நேரத்திலா?' எலிசபெத் சிலுவை குறியிட்டாள்.**

இரண்டு குழந்தைகளும் ஆரோக்கியமானவையாகத் தோன்றின. இவை குலஆசாரங்களுக்குத் தப்புமா...? வேள்வி முடிந்து இனத்தவர்கள் இப்போது வந்துவிட்டால்...? அசுரகெதியில் எலிசபெத் செயற்படத் துவங்கினாள். வெள்ளெருக்கம் சருகுகளைக் குவித்து நெருப்பிட்டு மூட்டினாள். கருகிய எருக்கம்பாலின் வாசனை ஹகங்கியை விழிப்படையச் செய்தது. தான் இரு குழந்தைகளைப் பிரசவித்திருப்பதை பூரணமாக உணரத் தொடங்கினாள். பலம் முழுவதையும் திரட்டி, எழுந்து உட்கார்ந்தாள். குழந்தைகளைப் பார்த்ததும் அழுகை பீறிட்டது.

'இரட்டைக் குழந்தைகள் தான்...., பயப்படாதே! இதற்கு ஏதாவது வழி செய்வோம் என்று எலிசபெத் ஆறுதல் கூறினாள். ஆறுதலான வார்த்தைகளையும் மீறி அழுகை தொடர்ந்தது. அவளுடைய அழுகையின் காரணத்தை எலிசபெத் பூரணமாக அறிவாள். பிறந்த குழந்தைகளுக்கு என்ன நடக்குமென்பது ஹகங்கிக்கு நன்கு தெரியும். அவளுடைய கணவனின் 'டிரைப்'பில் இரட்டைக் குழந்தைகள் பிறப்பது பற்றி விநோதமான கருத்திருக்கிறது. அது அபசகுனம் என்று கருதுகிறார்கள். மழை பொய்த்து பஞ்சம் பரவியுள்ள இந்தக் காலத்தில் பிறந்த இரட்டைக் குழந்தைகள் 'சாத்தான்களே' எனச் சொல்லி கொன்று விடுவார்கள்.

மேளச்சத்தம் அடங்கியது. வேள்வி முடிந்து விட்டதா...? ஹகங்கியின் கண்ணீரும் வறண்டுவிட்டது. திக்பிரமை பிடித்தவள் போல மூலையில் குந்தி இருந்தாள். உறவுகளின் உரையாடல் சத்தம் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தது.

'அவர்கள் வருகிறார்கள்... என் குழந்தைகளைக் காப்பாற்று' என ஹகங்கி எலிசபெத்தை யாசித்தாள். கழுத்தில் தொங்கிய சிலுவையை கண்களில் ஒற்றி 'ஆண்டவரே இந்தக் குழந்தைகளைக் காப்பாற்றும்' என கண்களை மூடி எலிசபெத் மண்டியிட்டு பிரார்த்திக்க ஆரம்பித்தாள்.

உறவுகளின் சத்தம் முற்றத்தில் மிக அருகில் கேட்டது. தாமதிக்க இனி நேரமில்லை. தனது தீர்மானத்தினைச் செயற்படுத்துவதில் எலிசபெத் தீவிரமானாள்.

ஹகங்கியின் தொடைகளிலே வழிந்துகிடந்த இரத்தத்தையும் பிரசவ திரவங்களையும் தன் தொடைகளிலும் அங்கியிலும் பூசிக் கொண்டாள். ஆண்குழந்தையை தானே பிரசவித்த பாவனையில் ஒன்றி.... கன்னிமரியாள் அல்ல, எலிசபெத்தும் தன்னைத் தாயாக்கிப் படுத்துக்கிடந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்



# ஆரவாரம் கூடாது

காட்டில் குரங்கு ஒன்று துள்ளிக் குதித்தபடி வந்தது. அப்போது எதிரே வந்த கரடி, "ஏய், குரங்கே... எதற்காக இப்படித் துள்ளிக் குதித்துச் செல்கிறாய்? நீ மகிழ்ச்சியாக இருப்பது போல் தெரிகிறதே..." என்றது.

"ஆம்... ஒரு புளியமரத்தில் தேனடை ஒன்றைக் கண்டேன். அதனால் ஏற்பட்டதுதான் இந்த மகிழ்ச்சி. நீயும் வா.. காட்டுகிறேன்" என்றது குரங்கு.

இரண்டும் புறப்பட்டன. சிறிது நேரத்தில் கரடியும் குரங்கும் புளியமரத்தை வந்தடைந்தன. மரக்கிளையில் பெரிய தேனடை ஒன்று தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் மகிழ்ச்சியில் கரடி "ஆய்... ஊய்..." என்று கூச்சலிட்டுத் துள்ளிக் குதித்தது.

"ஏய்... கரடியே! ஏன் இப்படிச் சத்தம் போடுகிறாய். தோட்டக்காரன் வந்துவிட்டால் இருவருக்கும் ஆபத்து. நீ அமைதியாக மரத்தடியில் நில்லு. நான் மரத்தில் ஏறி உனக்குத் தேனடையை எடுத்துத் தருகிறேன்" என்றது குரங்கு.

ஆனால், அந்தக் கரடி மகிழ்ச்சியில் கூச்சலிடுவதை நிறுத்தவில்லை.

"அடடா... இந்தக் கரடி போடும் கூச்சலுக்கு யாராவது இங்கே வந்துவிடப் போகிறார்கள். அதற்குள் நாம் பாதுகாப்பாக மரத்தில் ஏறிக் கொள்ள வேண்டியதுதான் என்று முடிவு செய்த குரங்கு, உடனே மரத்தின் உச்சிக்குச் சென்றது.

சத்தத்தைக் கேட்டு கையில் தடியுடன் வந்த தோட்டக்காரன் கரடியைக் கண்டு திடுக்கிட்டான். "ஓஹோ... தோட்டத்தை அடிக்கடி நாசம் செய்வது நீதானா?" என்று கரடியை நோக்கிக் கம்பை வீசினான்.

கம்பு கரடியின் நெற்றிப் பொட்டைப் பதம் பார்த்தது. அதிக மகிழ்ச்சியும், தன்னிலை மறத்தலும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதைக் கரடி உணர்ந்தது. வலியால் துடித்த கரடி கூச்சலிட்ட படி ஓட்டமெடுத்தது. மரத்தின் மீதிருந்த குரங்கோ அமைதியுடன் தேனடையை எடுத்துச் சாப்பிட்டது.

**அமைதியாக இருப்பவரே சாதிப்பார்கள்; ஆரவாரம் செய்பவர்கள் அல்லர்!**






**கே.நாராயணி,**
தரம் 3
சரவணபவானந்த வித்தியாலயம்.



**ஜீவா சஞ்சய்,**
தரம் 10E
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



**கே.கார்த்திக்,**
தரம் 5.
யா/ஸ்ரீசோமஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலை.



**கு.அபிநாஷ்,**
A/L 2023
யா/மகாஜனக் கல்லூரி.



**உ.அக்சனா,**
தரம்- 6
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



**ப.கோஷியா,**
தரம் -4
யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

## விடுகதைகள்

1. என்னை நீங்கள் பார்க்கலாம், தொடலாம், ஆனால் பிடிக்க முடியாது. அது என்ன?

**நிழல்**

2. மழையில் நனைவேன், வெயிலில் காய்வேன் , வெளியில் மலர்வேன், வீட்டில் சுருங்குவேன். நான் யார்?

**குடை**

3. மொட்டைப் பாடிக்கு உச்சியிலே குடுமி. அது என்ன?

**தேங்காய்**

4. நீட்டிக் கொண்டால் நீளமாகவும் ,சுருட்டிக் கொண்டால் மூலையிலும் நிற்பேன்.

**பாய்**

**வ.ஜானுஷா,**
தரம்-4
யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை.

## ஆங்கில சொற்கள்

| | |
|---|---|
| House | வீடு |
| Road | பாதை |
| Cat | பூனை |
| Pen | பேனா |
| Bed | கட்டில் |
| Computer | கணினி |
| Crow | காகம் |
| Stone | கல் |
| Bus | பேருந்து |
| Idea | யோசனை |
| Discipline | ஒழுக்கம் |
| Feelings | உணர்வுகள் |
| Mind | மனது |
| Trust | நம்பிக்கை |

## வழிகாட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படலை

அற்றைத் திங்கள் 3



தி.செல்வமனோகரன்

"கோதாரி விழுந்ததுகள் படலையைப் பூட்டுதுகளில்லை"
"படலையச் சாத்துங்கோ"

தொண்ணூறுகளில் ரயில் விபத்தில் இறந்து போனதாகக் கூறப்படும் "விசர்ச்செல்வம்" சற்று உரக்கச் சொல்லும் வசனங்கள் இவை. ஆள் நல்ல நெடுவல். கறுத்த உடம்பு, கலைஞ்ச தலை, சற்றுநீண்ட தாடி, இடுப்பில சாக்கு அல்லது துணி கட்டியிருப்பார். கையில மூன்று, 4 தகரப்பேணிகள் இருக்கும். அவை சுத்தமாக இருக்கும். தனக்குள் தானே அதிக சத்தமின்றி கதைத்தபடி திறந்திருக்கும் படலையைச் சாத்திக் கொழுவியபடி அதற்குள்ளால் அல்லது அதற்கு மேலாக பேணியை நீட்டுவார். குறித்த நேரத்தில் தேநீர் கொடுக்கவேண்டும். அல்லாது விடின் அடுத்த வீட்டுக்குப்போய் படலையைப பேசியபடி சாத்தி, தகரப்பேணியை நீட்டுவார். அவர் படலையைத் தாண்டி ஒரு நாளும் உள்நுழைந்ததில்லை. படலையைப் பூட்டாது அவர் சென்றதை நான் ஒரு நாளும் பார்த்ததில்லை.

தமிழர் வாழ்வியலில் படலையும் ஓர் அங்கமாக இருந்து வந்திருக்கிறது. காட்டுமிராண்டித் தனத்தில் இருந்து விடுபட்டு நிலையான ஓரிடத்தில் தங்கி தனக்கான வீட்டை அமைத்து வாழும் மனநிலையினது பேறாக படலை உருவாயிற்று. புறநானூற்றில்

"உடும்பு இழுது அறுத்த ஒடுங்காழ்ப் படலைச் சீறில் முன்றில் கூறு செய்திடுமார்" (பா.325)

"படலை முன்றில் சிறு திணை உணங்கல்" (பா.319)

என வருகின்ற அதேவேளை வீட்டில் உள்ள தலைவியை நினைந்து உருகும் தலைவனின் எண்ணத்தில்

"முன்றில் தூங்கும் படலைப்பந்தர்" (அகம்.87)

வந்து போவது அக்காலச் சமூகத்தில் படலை பெற்றிருந்த இடத்தை எமக்குத் தெளிவுபடுத்துகிறது. இயற்கைநெறிக் கால இலக்கியங்கள் இயற்கையோடு ஒட்டிய வாழ்வில் இலை, தழைகளாலும் சிறுசிறு கிளைகளாலும் கொண்ட குடிசை நுழைவாயிலில் தடிகள், மூங்கில், ஓலை முதலியவற்றால் பிணைக்கப்பட்டு வைக்கப்பட்டதாகவே படல் காணப்பட்டது. விவசாயச் சமூகத்தில் பயிரை, தானியத்தை பாதுகாக்கவும் தனது இருப்பை =நிலத்தைப் பாதுகாக்கவும் உருவாக்கப்பட்ட வேலியமைப்பின் ஊடாக உள்வருதலுக்கான வாயிலில் "படலடித்தல்" முறைமை காணப்பட்டது. பின்பு அது குடிசைக்காரரின், நிலவுடைமையாளரின் அதிகார எல்லையை வகுத்தலின் வழி பாதுகாப்பு சார்ந்த அம்சமாக வேலியும், படலையும் கட்டமைக்கப்பட்டன.

படலை என்பது நிலையான வேலியில் உள்வருவதற்கான வாயிலில் அமைக்கப்பட்டதாகும். ஆகவே அது உள்வருதல், வெளிச் செல்லுதல் எனும் இரு செயல்நிலைக்கு ஏதுவான தன்மையுடையதாக அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் நிலையான வேலியில் குறித்த இடைவெளிவிட்டு உறுதியான மரக் கப்புக்கள் நிறுத்தப்படும். அவற்றுக்குக் குறுக்கே அவ்விடைவெளியை விட நீளமான தடிகளை (கழிகள்) வைத்துக் கட்டுவர். ஏறத்தாழ மூன்றடி உயரத்துக்கு அது கட்டப்படும். வருபவர், அதனைக் கடந்து செல்வர். காணிக்குள் கால்நடைகள் உள்வருதலை அவை தடுத்தன. கடந்து செல்வதனால் இவை "கடப்பு" அல்லது கடவை எனப்பட்டன. பின்பு இரயில் பாதை, தெரு என்பவற்றைக் கடந்து செல்லுமிடங்கள் முறையே இரயில் கடவை, பாதசாரி கடவை எனப் பெயர் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கடப்பைக் கால்நடைகளும் கடக்கப் பழகியதாலோ அன்றி மறைப்பு, பாதுகாப்பு என்பன கருதியோ படலைகள் தட்டையாக உருவாக்கப்பட்டு கட்டப்பட்டன. இலை தழைகள், கிளைகள், கொடிகள் என்பனவற்றால் ஆக்கப்பட்ட போது அவற்றை கால்நடைகள் உண்டன அல்லது அவை விரைவில் காய்ந்து காணமற்போயின. அதனால் படலைகள் நாயுண்ணி, முள்ளுடைய கிளைகள் என்பவற்றால் ஆக்கப்பட்டன. அவை மனிதர்க்கும் ஊறு விளைவித்தன. அவற்றின் ஆயுட்காலமும் குறைவு இதற்கு மாற்றாக தடிகள், மூங்கில்கள் கொண்டு படலைகள் உருவாக்கப்பெற்றன. கொக்கைத்தடிக்கு உரிய தடியை நெருப்பில் வாட்டிப் பின் பட்டையை உரித்துப் பயன்படுத்துவதன் ஊடாக உக்கல் தன்மை பெறுவதைக் குறைத்து நீண்ட காலம் பயன்படுத்துவது போல படலைக்கும் தடிகள் பயன்படுத்தப்பட்டன. அதனை வேலியோடு சார்த்தி வைக்கும்வரை அது "படல்" என்றோ "தட்டி" என்றோதான் கூறப்பட்டது. இந்தியன் ஆமிக்காலத்தில் அவர்களின் உள்வருகையைத் தடுக்க குறுகிய மற்றும் தனியார் ஒழுங்கைகளுக்கு நடுவே கிடுகு கட்டப்பட்ட தட்டிகள் வைக்கப்பட்டு மறைப்பு உருவாக்கப்பட்டதை நாம் நினைத்துப் பார்க்கலாம்.

சார்த்துதல் என்பதில் இருந்து விடுபட்டுப் படலையை செங்குத்தாக நிறுத்தி ஒருபக்க மரத்தோடு நிலையாகக் கட்டி மறுப்பக்கத்தால் திறந்து மூடிப் (புழங்குதல்) பயன்படுத்தும் முறை உருவாகத் தொடங்கிய போதே படல் "படலை" ஆயிற்று. வேலியில் கட்டப்பட்டு பின்பு வேலி முடிவில் நுழைவாயிலின் இருபக்கமும் உறுதியான விரைவில் உக்கல் அடையாத மரங்கள் நடப்பட்டன. அவை "கப்பு" எனக் கூறப்பட்டன. பெரும்பாலும் இடப்பக்கக் கப்பில், படலை பிணைக்கப்பட்டு வலப்பக்கம் திறந்து மூடக்கூடிய வகையில் கட்டமைக்கப்பட்டது. கப்போடு படலையைப் பிணைக்க கொடி, நார், மரப்பட்டை போன்றனவும் பின்பு தும்புக்கயிறு நைலோன் கயிறு, வயர் போன்றனவும் பயன்படுத்தப்பட்டன. படலையை இறுக்கக் கட்டாமல் சற்று இளக்கமாகக் கட்டுதலினூடாக படலையை திறந்து மூடுதல் இலகுவாக்கப்பட்டது. கயிறுகளின் தன்மைக்கேற்ப அவற்றின் பயன்பாட்டுக் காலம் அமைந்தன. பின்பு இரும்புப் பிணைச்சல்களும், முளையாணிக் கட்டைப் பயன்பாடும் உருவாயிற்று. இதனால் இலகுவாகத் திறந்து மூடும் வகையில் படலை அமைக்கப்பட்டது.

குறித்த நிலவுடமையாளரின் தேவை மற்றும் பொருளாதாரத்துக்கேற்ப படலையின் தரமும் மாறுபட்டது. வெறும் நிலங்களுக்கும் விவசாய நிலங்களுக்கும் கமுகு, பனை முதலியவற்றின் சிலாகைகளைக் கொண்ட படலைகள் அமைக்கப்பட்டன. வீடுகளுக்கு அறுக்கப்பட்ட மரச் சிலாகைகளாலான கிராதிப் படலைகள் அழகியல் தன்மைகளோடு அமைக்கப்பட்டன. முக மறைப்புக்கு ஆரம்பத்தில் கிடுகும் பின்பு தகரங்களும் கீழே கருக்குமட்டை, மரச்சிலாகை முதலியனவும் பிற்பட .மரச்சிலாகைகளும் பயன்படுத்தப்பட்டன.


ஒல்லாந்தர் காலத்தின் பின் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள் எமது பாரம்பரியத்திலும் தாக்கங்களை உருவாக்கின. வீட்டு வாயில்களில் கற்கட்டுடன் கூடிய படலைகள் உருவாயின. படலைகளின் பாதுகாப்புக்கே கூரை அமைக்கப்பட்டது. அதன் வளர்நிலைக்கட்டமாக திண்ணைகள் அமைக்கப்பட்டன. குறிப்பாகப் பெருங்கல் வீடுகள் நுழைவாயில் வரை கூரை அமைப்புக் கொண்டவையாக 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இருந்து சுதந்திரம் அடையும் வரையான காலப்பகுதியில் கட்டமைக்கப்பட்டன. அவ்வாறல்லாத வீடுகள் தனியே கூரைகொண்ட படலைகளைக் கொண்டுள்ளன. படலையுடன் கூடிய மதில்களோடு திண்ணைகளும் சுமைதாங்கிகளும் அமைக்கப்பட்ட வீட்டுப்படலைகளை உடையன என்பது பெறப்படுகிறது.



அதேவேளை சங்க இலக்கியத்தில் "படலை" என்பது "மாலை" எனப் பொருள்படவும் (பல்ஆள் கோவலர் படலை சூட (புறம். 265) பயன்படுத்தப்பட்டுள்ளது. அது தனித்த பூக்களால் ஆக்கப்பட்டதாகவும் கலம்பகமாக பல வகைப்பூக்களால் கட்டப்பட்டதாகவும் (பெரும்பா.174) சுட்டப்படுகிறது.

படலை எனும் சொல் "படல்" எனும் சொல்லிலிருந்து வந்ததாகக் கூறப்படுகின்றது. அதேவேளை வெயில், மழைத்தூறல் என்பவற்றில் இருந்து பாதுகாக்கவும், மறைப்புக்காகவும் இலை, தழைகள், ஓலைகள் தடிகளில் கட்டப்பட்டன. அவை "தட்டி" எனவும் "படல்" எனவும் கூறப்படுகின்றன. ஆரம்பத்தில் குடிசைகளுள் எவ்வுயிரியும் புகாதிருக்கவும் பண்டத்தைப் பாதுகாப்பாக வைக்கவும் அமைக்கப்பட்டன. திண்ணைக்குச் சற்றுத் தள்ளி கால்நடைகளுக்கான ஒற்றைச் சலவைக்கல் தொட்டிகளும் ஆவுரோஞ்சிகளும் அமைக்கப்பட்டன. திண்ணைகளின் ஒரு கரையில் மண்பானையில் நீர் வைக்கப்பட்டது. தெருவில் செல்லும் பயணி தன் தலைச் சுமையை இறக்கி வைக்க சுமைதாங்கியும் அருந்த நீரும் களைப்பு நீங்கத் திண்ணையும் உதவின. இது குறித்த வீட்டின் பொருளாதார வசதியினை பறைசாற்றினும் வழிப்போக்கருக்கு உதவும் இடமாகவும் சாதி நீக்கம் செய்யப்பட்ட இடமாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு வழிப்போக்கரின் சங்கடத்தை, களைப்பை நீக்க உதவுவதால் இது சங்கடப்படலை எனக் குறிப்பிடப்பட்டதாக சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆயினும் இது ஒரு கருத்தேற்றமாகவே எம்மால் கருதமுடிகிறது.

திண்ணையற்ற கூரையுடன் கூடிய படலையும் இவ்வாறே சுட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அரிச்சந்திர புராணம் "பாய்கதிர் படலை உட்சுருக்கிப் பையவே" என்கிறது. படலை உட்புறம் திறக்கப்பட்டு பின்பு நேரே வந்து மூடப்படும் திறந்த கதவு தானாக மூடாது. அதேவேள்ள பலமான காற்று படலையை அறைந்து சாத்தும். காலப்போக்கில் படலை ஈடாடிவிடும்.



(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1898, 1899 ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட உயர்நீதிமன்ற வழக்காக நடைபெற்று முடிந்த அழகம்மா கடத்தல் வழக்கு அந்தக்கால யாழ்ப்பாணத்தின் பண்பாட்டையும் நிலைமைகளையும் விளங்கிக் கொள்ள இன்றும் உதவுவதாக உள்ளது.

# அழகம்மா கடத்தல் வழக்கு 2

## குடும்பப் பின்னணி

○ தி.கோபிநாத்

அழகம்மா கடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு அக்கால யாழ்ப்பாணத்தில் மிகப் பரபரப்பாகப் பேசப்பட்டமைக்கு இரு காரணங்கள் இருந்தன.

முதலாவதாக, அது உள்ளூரில் தீர்க்கப்பட முடியாமல் உயர்நீதிமன்ற வழக்காக மாறி மிக நீண்ட நாட்கள் எடுத்துக் கொண்ட வழக்காகவும், வழக்கின் தீர்ப்பு சர்ச்சைக்குரியதாகவும் அமைந்தது. அத்துடன் ஒரு தடவையில் முடிந்துவிடாமல் இன்னொரு உயர்நீதிமன்ற வழக்காக அது தொடர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது காரணம், குறித்த வழக்கு யாழ்ப்பாணத்தில் புகழ்மிக்கதும் நன்கு மதிக்கப்பட்டதுமான நயில்ஸ் குடும்பத்தின் நெருங்கிய உறவினர்களிடையே நடைபெற்ற வழக்கு என்பதாகும். அவ்வகையில் நயில்ஸ் குடும்பப் பின்னணியை முதலில் ஆராயலாம்.

நயில்ஸ் குடும்பமானது நதானியேல் நயில்சில் இருந்தே தொடங்குகிறது. நதானியேல் நைல்ஸ் (Nathaniel Niles) புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவர். 1803 இல் பிறந்த அவரது இயற்பெயர் வேலாயுதர் கதிரேசன் என்பதாகும். தனது 15ஆவது வயதில் தந்தையை இழந்த அவர் வேலையும் கல்வியும் தேடி , உடுவிலில் மிசனரிப் பணிசெய்து கொண்டிருந்த வின்ஸ்லோ (Winslow) தம்பதியினரைச் சென்றடைந்தார்.

யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மிசன் தமது மதப் பணிகளைத் தொடங்கியிருந்த காலம் அதுவாகும். 1816 இல் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த அமெரிக்க மிசன் குழுவினர் தேவாலயங்களை அமைத்து மதப் பணிகளைத் தொடங்கியதுடன் பாடசாலைகளையும் அமைக்கத் தொடங்கியிருந்தனர். அவ்வகையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த முதலாவது அமெரிக்க மிசன் குழுவில் வின்ஸ்லோ தம்பதியினர், டானியர் பூவர் தம்பதியினர் போன்றோர் உள்ளடங்கியிருந்தனர்.

அந்தக்காலத்தில் தெல்லிப்பழையில் திருமதி டானியர் பூவர் ,நாள்பாடசாலையினைத் தொடங்கியிருந்தார். அந்தப் பாடசாலையின் 8 மாணவர்களில் ஒருவராக நதானியேல் நைல்ஸ் சேர்க்கப்பட்டார். அந்தக்கால அமெரிக்க மிசனரிச் செயற்பாடுகளுக்கு அமெரிக்காவின் கிறித்தவச் செல்வந்தர்கள் உதவியளித்து வந்தனர். அவ்வாறு உதவியளிப்போர் ஒவ்வொரு மாணவரைப் பொறுப்பெடுத்துக் கல்வியளிப்பதற்கான செலவுகளை அமெரிக்க மிசனுக்கு வழங்கிவந்தனர். அவ்வாறு நிதி வழங்கியோரது பெயர்கள் குறித்த மாணவர்களுக்குச் சூட்டப்பட்டன. அப்படித்தான் வேலாயுதர் கதிரேசனின் பெயரும் நதானியேல் நயில்ஸ் என மாற்றப்பட்டு ,புரொட்டஸ்தாந்துக் கிறிஸ்தவராகவும் மாறினார்.

1823இல் டானியர் பூவர் தெல்லிப்பழையிலிருந்து வட்டுக்கோட்டைக்குச் சென்று வட்டுக்கோட்டைச் செமினரியை நிறுவினார். இதுவே பிற்காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியாக மாறிய பாடசாலை ஆகும். இவ்வாறு வட்டுக்கோட்டைச் செமினரி தொடங்கப்பட்டபோது அதன் முதல் 48 மாணவர்களில் ஒருவராக நதானியேல் நைல்ஸ் சேர்க்கப்பட்டார்.

ஐந்து ஆண்டுகளில் செமினரிக் கல்வியினை நிறைவுசெய்த நதானியேல் 1928இல் உடுவிலுக்கு சமயப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார். (அக்காலத்தில் உடுவிலில் அமைந்திருந்த அமெரிக்கன் மிசனின் சமயப் பாடசாலை பிற்காலத்திலேயே வட்டுக்கோட்டைச் செமினறியுடன் இணைக்கப்பட்டது.) 1830 இல் சமயக் கல்வியை முடிந்த்துக் கொண்ட நதானியேல் 1831 ஜனவரியில் ஒரு கிறிஸ்தவ சமயப் பிரசங்கியராக நியமிக்கப்பட்டார். அமெரிக்கன் மிசன் முதன்முதலாகச் சுதேசிகளைப் பிரசங்கியராக நியமித்தமை அதுவே முதற் தடவை . 1837 இல் நதானியேல் உடுவில் பெண்கள் கல்லூரியின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். சுமார் 10 ஆண்டுகள் அங்கு பணியாற்றிய பின்னர் 1848 இல் மீண்டும் வட்டுக்கோட்டைத் தேவாலயத்துக்கு மாற்றப்பட்டார். 1868 அளவில் தனது 65ஆவது வயதில் அமெரிக்க மிசன் பணியிலிருந்து நதானியேல் ஓய்வு பெறவேண்டி ஏற்பட்டது. அதன் பின்னர் வெஸ்லியன் மிசனில் பணியில் இணைந்து வண்ணார்பண்ணை மெதடிஸ்த தேவாலயத்தில் ஐந்து ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்ற நதானியேல் 1881 இல் காலமானார்.


டானியல் பூவர்

நதானியேல் இருபாலையைச் சேர்ந்த சந்திரவர் என்பவரது மகளான கண்ணாத்தையை மணம்முடித்திருந்தார். 1818 இல் பிறந்த கண்ணாத்தை 1831 இல் கிறித்தவ சமயத்தினைத் தழுவி பாஃன் னி கோல்ட்(Fanny Colt) என்ற பெயரையும் கொண்டிருந்தார். இவர்களுக்கு 3 ஆண்களும் 7 பெண்களுமாக 10 பிள்ளைகள் பிறந்தனர்.

ஆண்பிள்ளைகளான டானியேல் பூவர், சாமுவேல், ஜோன் ஆகிய மூவரும் போதகர்களாகப் பணியாற்றினர். தனது ஆசிரியரான டானியல் பூவரது பெயரினைத் தனது மகனுக்கு நதானியேல் சூட்டியிருந்தார். நதானியேலின் மகள்மாரில் மூவர் வோல்ற்றன், அடம்ஸ், தாமோதரன் ஆகிய போதகர்களைத் திருமணம் செய்தனர். இவர்கள் தவிர காவல்துறை நீதிபதி தம்புவை ஒரு மகளும் , சரவணமுத்து சொலமன் என்பவரை இன்னொரு மகளும் திருமணம் செய்திருந்தனர்.

நதானியேலின் இந்தப் பிள்ளைகளில் டானியேல் பூவர் நயில்சின் மகளே அழகம்மா. அந்தக்கால யாழ்ப்பாணத்தில் சொத்து, சாதி, பாரம்பரியக் காரணங்களால் மச்சானும் மச்சாளும் திருமணம் செய்விக்கப்படுவது பரவலான பழக்கத்தில் இருந்தமையை அவதானிக்க முடிகிறது. அவ்வகையில் நதானியேலின் பெண்பிள்ளைகளது மகன்கள் பலர் அழகம்மாவின் முறை மச்சான்களாக, சம வயதினராக இருந்தனர். அவ்வகையில் மூன்று அத்தைகளின் குடும்பங்கள் அழகம்மாவின் வாழ்வில் தொடர்புபட்டன.

யாழ்ப்பாணத்தில் நன்கறியப்பட்ட நதானியேலின் மிக நன்கறியப்பட்ட பேரப்பிள்ளைகளுக்கிடையிலான திருமணச் சிக்கலே கடத்தலாகிப் பெரும் வழக்குகளாக முடிந்தது.

நதானியேல் சிறிது காலமே வண்ணார்பண்ணையில் பணியாற்றினார். டானியல் பூவரோ யாழ்ப்பாண நகரப் பகுதியில் பெருமளவு காலம் பணியாற்றியவர். குறிப்பாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியர், பதில் அதிபர், உப அதிபர், தலைமை ஆசிரியர் எனப் பல்வேறு பதவிகளை வகித்தவர். அத்துடன் போதகராகவும் பணியாற்றியவர். நதானியேலை விடவும் நன்கறியப்பட்டவராகவும் மதிக்கப்பட்டவராகவும் டானியேல் பூவர் விளங்கினார்.

வட்டுக்கோட்டையில் 1836 ஏப்ரல் 30 ஆம் திகதி பிறந்த டானியல் பூவர் 1846 ஒக்ரோபரில் வட்டுக்கோட்டைச் செமினறியில் மாணவனாக இணைந்து 1854 இல் கல்வியை முடித்தார். 1855 ஜனவரி 24 இல் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் ஆண்கள் பாடசாலையில் ஆசிரியராக இணைந்தார். 1860 இல் பணியிலிருந்து விலகிய இவர் மெட்றாஸ் பல்கலைக்கழகத்தில் இணையத் திட்டமிட்டிருந்தபோது ஜோன் கில்னர், வெஸ்லியன் மிசனில் கற்பிக்க அழைத்தார். அவ்வகையில் ஓகஸ்ட் 1861இல் பருத்தித்துறையின் வெஸ்லியன் மிசன் பாடசாலையை டானியல் பூவர் பொறுப்பெடுத்தார். 1838 இல் பீற்றர் பேர்சிவல் பாதிரியாரால் தொடங்கப்பட்ட இந்தப் பாடாசாலையே இப்போதைய புகழ்பூத்த ஹாட்லிக் கல்லூரி ஆகும்.

சில ஆண்டுகளின் பின்னர் வெஸ்லியன் மிசனின் இன்னொரு பாடசாலையான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு டானியல் பூவர் மாற்றப்பட்டார். 1868 முதல் 1878 வரையான பத்து ஆண்டுகள் மத்திய கல்லூரியில் குறிப்பிடத்தக்க பணியாற்றிய டானியல் பூவர் 1870-72 காலத்தில் பதில் அதிபராகவும் 1869 முதல் 1878 வரை உப அதிபராகவும் பணியாற்றினார். பின்னர் மீண்டும் பருத்தித்துறையில் மதப் பணிகளிலும் கற்பித்தலிலும் ஈடுபட்டு வந்தார்.

1886 இல் மத்திய கல்லூரியின் தலைமையாசிரியரான நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை பெருமளவு மாணவர்களையும் ஆசிரியர்களையும் அழைத்துச் சென்று தனியான பாடசாலையினை (இந்தப்பாடசாலையே இன்றைய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகும்) அமைத்தமையால் மத்திய கல்லூரி மிகுந்த நெருக்குதலுக்குள்ளானது. நிலைமையைச் சீராக்குவதற்காக டானியல் பூவர் மீண்டும் மத்திய கல்லூரிக்கு அழைக்கப்பட்டார். 1886-1894 காலத்தில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி மத்திய கல்லூரியை வளர்ச்சிப் பாதைக்கு நகர்த்திய டானியல் பூவர் 1897 இல் அந்தக்கல்லூரியிலிருந்து ஓய்வுபெற்று வண்ணார்பண்ணையில் போதகர் பணிக்கு மாற்றலானார்.

டானியல் பூவர் 1864 இல் அந்தக்காலத்தின் பிரபல அங்லிக்கன் போதகரான ஜோன் ஹென்ஸ்மனின் மகளான எலிசபெத் என்பவரைத் திருமணம் செய்திருந்தார். எலிசபெத்துக்கு ஒரு மகனும் இரண்டு மகள்களும் பிறந்தனர். எலிசபெத் 1870 இல் காலமானதைத் தொடர்ந்து 1871இல் மேரி யோசுவா என்பவரை டானியல் பூவர் இரண்டாவதாகத் திருமணம் செய்தார். மேரிக்கு நான்கு ஆண்களும் மூன்றும் பெண்களும் பிறந்தனர்.

மேரிக்கும், டானியல் பூவருக்கும் இரண்டாவது மகளாகப் பிறந்தவரே இந்த வழக்கின் நாயகியான அழகம்மா!

(தொடரும்)

## வாசகர் கடிதம்

02.01.2022 சஞ்சீவி பத்திரிகையில் 'அழகம்மா கடத்தல் வழக்கு' படித்தேன். இதுபோல் எனது தகப்பனின் தம்பி (சேனாதிராசா) ஆனந்தகுமாரசூரியர் 1924 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டு, இரணைமடுக்காட்டில் , மரத்தில் கட்டித் தூக்கிய சம்பவம் நடந்தது. இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நடந்த பின், கண்டி நீதிமன்றுக்கு மாற்றி, 3 பேருக்கு மரண தண்டனையும் 4 பேருக்கு சீவிய மறியலும் தீர்க்கப்பட்டது. இந்த வழக்கை நடத்தியவர் நல்லூரில் இருந்த என் பாட்டனார் [illegible] குமாரசூரியர்.

எஸ்.கே.குமாரசூரியர்
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்.லயனல்

விளையாட்டு



# தடை அதை உடை!

இந்திய அணித் தெரிவுக் குழுவின் மீது வெளிப்படையாக அவ்வப்போது கொட்டித் தீர்க்கப்படும் அதிருப்தியைப் போல் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழுவின் மீது அதிருப்திகளும், கண்டனங்களும், விமர்சனங்களும் கொட்டித் தீர்க்கப்படுவதுண்டு. அவ்வாறு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை விமர்சனத்துக்கு உள்ளாகும் பல விடயங்களில் ஒன்றுதான் உஸ்மன் கவாஜா விவகாரம்.

ஆரம்ப வீரராகவும், மத்திய வரிசை வீரராகவும் தன்னை சிறந்த முறையில் நிலை நிறுத்தியவர்தான் கவாஜா. அணியின் தேவைக்கேற்ற இடத்தில் அவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தியாவுக்கு ஒரு கே.எல்.ராகுல், நியூஸிலாந்துக்கு ஒரு கிராண்ட்ஹோம், இங்கிலாந்துக்கு ஒரு பட்லர் போன்று அவுஸ்திரேலியாவுக்கு கவாஜா. இவ்வாறான வீரர்கள் கிடைப்பது வரம். காரணம், இவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட துடுப்பாட்ட நிலைகள் இல்லை. அணியின் தேவை என்னமோ அதுதான் அவர்களின் துடுப்பாட்ட வரிசை. ஆனால், கவாஜாவுக்கு உரிய கனதியை - மரியாதையை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை கொடுத்ததே இல்லை.

திறமையை விட கற்பனை பிம்பங்கள் அதிகமாக வைத்துக் கட்டப்பட்ட வீரர்களைக் கொண்டாடும் சாபக்கேடு இந்தியாவைப் போன்று அவுஸ்திரேலியாவிலும் ஆழ வேரூன்றியுள்ளது. இந்த நிலையால் அணியில் இருந்து ஒதுக்கப்பட்ட ஆகச் சிறந்த வீரர்களில் கவாஜாவும் ஒருவர். அணியில் ஏதாவது ஒரு வீரர் காயமடைந்தால் மாற்று வீரராகக் களமிறங்கி 'அதகளம்' புரிவதும் பின்னர் கவாஜா எவருக்காகக் களமிறங்கினாரோ அந்த வீரர் குணமடைந்த பின்னர் மீண்டும் ஓரமாக உட்கார வைக்கப்படுவதும் கவாஜாவுக்குப் புதிதல்ல.

நடைபெற்றுவரும் ஆஷஸ் தொடரிலும் அணித் தெரிவாளர்களின் முகத்தில் கரியை அள்ளிப் பூசியுள்ளார் கவாஜா. ஆஷஸின் முதல் மூன்று ஆட்டங்களிலும் ஓரம்கட்டப்பட்டிருந்த கவாஜா, மூன்றாவது ஆட்டத்தில் களமிறக்கப்பட்டார். இந்தக் களமிறக்கமும் ஒரு பதில் வீரரான களமிறக்கம்தான். ட்ராவிஸ் ஹெட் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நிலையில்தான் கவாஜா களமிறங்குவது சாத்தியமானது. அவ்வாறு களமிறங்கிய முதலாவது இன்னிங்ஸிலேயே அற்புதமான சதத்தைப் பதிவுசெய்துள்ளார். பசுமை போர்த்திய சிட்னி ஆடுகளத்தில், 'அண்டர்சன், ப்ரோட், வூட்' கூட்டணிக்கு எதிராக இந்தச் சதம் பதிவாகியமை கூடுதல் தகவல்.

கவாஜா ஏன் கொண்டாடப்பட வேண்டும்? என்ற கேள்வி உங்களில் பலருக்கும் எழலாம். கவாஜா வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமாக ஆடுகளத்தில் மட்டும் ஓட்டங்களைக் குவிக்கும் 'அவுஸ்திரேலிய மெட்டீரியல்' அல்ல. ஆசிய ஆடுகளத்திலும் அற்புதமாக திறனை வெளிப்படுத்தும் பக்குவம் கவாஜாவுக்கு உண்டு. ஆசிய ஆடுகளங்களில் அனைத்து வீரர்களாலும் சாதித்துவிட முடியாது.

'பக் புட் டிபன்ஸ்' என்று சொல்லப்படும் பின்னங்கால் நகர்த்தலை எந்த வீரர் சிறப்பாகக் கையாள்கின்றாரோ அந்த வீரர் சுழற்பந்து வீச்சை நல்லபடியாக எதிர்கொள்வார்.

அப்படியான வீரர்களை ஆசியாவுக்கே உரித்தான வீரர்களாக அடையாளப்படுத்தும் போக்கு இங்கிலாந்திலும், நியூசிலாந்திலும் இன்றளவும் உள்ளது. கவாஜாவும் மேற்குறிப்பிட்ட ரகத்தைச் சேர்ந்தவர்தான். ஆனால், அவர் இன்றளவும் மாற்று வீரராகவே உள்ளார். அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் முக்கிய துருப்புச் சீட்டாக கவாஜா பயன்படுத்தப்படவில்லை. அவருக்குரிய அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை.

அவுஸ்திரேலியர்கள் வெள்ளையின மனோபாவம் உள்ளவர்கள். நிறத்துவேசிகள். ஆசிய பின்புலத்தைக் கொண்டு கலப்பினத்தவனாக இருப்பதால்தான் தன்னைப் புறக்கணிப்பதன் காரணமா? என்று கவாஜா வெளிப்படையாகவே கலங்கியதுண்டு. அதில் நியாயம் இருக்கத்தான் செய்கின்றதா? என்ற கேள்வியை வலுவாக எழுப்பியுள்ளது நான்காவது ஆஷஸ் ஆட்டத்தில் பெறப்பட்ட சதம்.

அவுஸ்திரேலிய அணி கவாஜா போன்ற வீரரை வைத்துக்கொண்டு ஆசியாவில் படுகேவலமாக தொடரை இழப்பதெல்லாம், தனக்குத்தானே சவக்கிடங்கை வெட்டும் செயலே அன்றி வேறென்ன?

# இந்தியாவை கையாள்தலும் ஈழத்தமிழரின் எதிர்காலமும்



சாம் -ரமேஸ்குமார்

ஈழத்தின் மிக அருகில் இருக்கும் பிராந்திய அரசான இந்தியாவை புறந்தள்ளிவிட்டு, ஈழத் தமிழினம் வேறு எந்தவொரு மேற்குலகின் வல்லரசிடமும், தனக்கான ஒரு நிரந்தர அரசியல் தீர்வுத் திட்டத்தைப் பெற்றுவிட முடியாது. இதுவே காலம் காலமாக இருந்து வரும், ஈழத் தமிழினத்தின் புவிசார் அரசியலின் கள யதார்த்தமாகும். அதைப் புரிந்து கொண்டு ஈழத்தமிழ் அரசியல் தலைமைகள் தம் வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவை நோக்கி தம் அரசியல் நகர்வுகளை நகர்த்துவதே, தற்போதைய சூழ்நிலையில் ஈழத் தமிழருக்கு மிகச் சிறந்த அரசியல் உபாயமாகும்.

தற்போதைய தமிழ் அரசியல் தலைமைகளிடம் இலங்கை =இந்திய ஒப்பந்தத்தில் உதித்த '13'ஆவது திருத்தச் சட்டத்தைத் தவிர, வேறு எந்தவொரு அரசியல் தீர்வுத் திட்டங்களோ அல்லது திட்ட வரைவுகளோ அவர்கள் சிந்தனையிலோ அல்லது செயலிலோ இல்லை என்பதே பெரும் உண்மையாகும். வெறும் வாயினால் மட்டும் வடை சுடுபவர்கள்தான், எம் தமிழ் அரசியல் தலைமைகளே தவிர, செயலில் இறங்குபவர்கள் அல்லர்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான ஈழத்தமிழரசியல் பரப்பில் '13'ஆவது திருத்தச் சட்டம் என்பது அவ்வப்போது தமிழ் அரசியல் தலைமைகளால் விவாதிக்கப்பட்டு, அதன் காரண கர்த்தாவாக இருக்கும் இந்தியாவிடமும் அவ்வப்போது அதுப்பற்றி இடித்துரைக்கப்பட்ட ஒன்றுதான். ஆனால் இந்தியாவின் கவனத்துக்கு '13' ஆவது திருத்தச் சட்டம் அவ்வப்போது தமிழ் அரசியல் தலைமைகளால் கொண்டு வரப்பட்டாலும், தமிழ் அரசியல் தலைமைகள் அந்த '13'ஆவது திருத்தச் சட்டத்தை எப்போதும் உயிர்ப்புடன் வைத்திருக்கவோ, அல்லது அதை ஆரம்ப புள்ளியாக வைத்து ஒரு தீர்வுத் திட்டத்தை விஸ்தரிக்கவோ என்றும் இராஜதந்திர பலமற்றவர்களாகவே இருந்து வந்துள்ளார்கள்.

முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் அனைத்து பங்காளிக் கட்சிகளும் தம் கட்சி பேதங்களை மறந்து, மனதளவில் தாம் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்ற உறுதிப்பாட்டான நிலைக்கு வர வேண்டும். அப்போதுதான் அவர்கள் ஒரு ஒருமித்த அரசியல் தீர்வுத் திட்டத்துக்குள் தங்களை முழுமையாக உள்வாங்கிக் கொள்ள முடியும். தங்களுக்குள் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்த முடியாதவர்கள் ஈழத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக இருந்து கொண்டு ஈழத் தமிழினத்துக்கு எப்படி அமைதியையும் சமாதானத்தையும் பெற்றுத் தர முடியும்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் சில பங்காளிக் கட்சிகளால், இந்தியாவுடன் ஈழத் தமிழர் எதிர்காலத்தில் சேர்ந்து பயணிப்பதில் எதுவித அர்த்தமும் இல்லை என்ற வாதங்களும் முன்வைக்கப்படுகின்றன. ஏனெனில் இந்தியா-இலங்கை இடையே சில முரண்பாடுகள் எழுகின்ற வேளையில், இந்தியா தன்னுடைய நலன்களுக்காக ஈழத் தமிழரை சிறந்த இராஜதந்திரத்துடன் இலங்கைக்கு எதிராக எப்போதும் கையாளுகின்றதே தவிர, அதற்கு ஈழத் தமிழர்களின் நலன்கள் மீது எந்த கரிசனையும் கிடையாது என்பதை எவரும் மறுப்பதற்கு இல்லை. இந்தியா தன் நலன்களுக்காக, ஈழத் தமிழரை எப்படிக் கையாளுகின்றதோ, அதைப்போல் ஈழத் தமிழ் அரசியல் தலைமைகளும் தம் நலன்களுக்காக இந்தியாவை நிச்சயம் கையாள முடியும்.




ஆனால் துரதிஷ்டவசமாக, அதற்கான வெளியுறவுக் கொள்கைகளும், விவேகத்துடன் கூடிய இராஜதந்திர அரசியல் செயல் திட்டங்களும் பல கூறுகளாகப் பிரிந்திருக்கும் தமிழ் அரசியல் தலைமைகளிடமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் நிச்சயம் கிடையாது. சர்வதேச அரசியலில் புலம் பெயர்ந்த தமிழர்கள் எப்படி பலமாக இருக்கின்றார்களோ, அதற்கு நேர்மாறாக ஈழத் தமிழர்கள் தம் சொந்த அரசியல் பரப்பில் பலம் அற்றவர்களாகவே என்றும் காட்சியளிக்கின்றார்கள். அதற்கு காரணம் பிராந்திய அரசான இந்தியாவையும், அதன் ஒருமித்த பகுதியாக இருக்கும் தமிழ் நாட்டையும் ஈழத் தமிழ் அரசியல் தலைமைகளால் இராஜதந்திர ரீதியில் சரிவரக் கையாள முடியாததே.

'13' ஆவது திருத்தச் சட்டத்தை ஒரு பிள்ளையார் சுழியாக வைத்துக் கொண்டு எப்படி பிராந்திய அரசான இந்தியாவையும், அதன் ஒருமித்த பகுதியாக இருக்கும் தமிழ் நாட்டையும், ஈழத் தமிழருக்கு ஆதரவாக கையாளலாம் என்ற இராஜதந்திர திட்டத்தை வகுப்பதில்தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் அரசியல் சாணக்கியம் அடங்கியுள்ளது எனலாம்.

சம்பந்தனின் காலத்திலேயே, ஈழத் தமிழர் இந்தியாவின் பங்களிப்புடன் ஒரு நிரந்தர அரசியல் தீர்வுத் திட்டத்தை பெற்று விட வேண்டும் என்பதில், அவரது ஆதரவாளர்கள் மிகவும் உறுதியாக இருக்கின்றார்கள். மாறாக அவரது காலத்தில் ஈழத் தமிழர்கள் ஒரு நிரந்தர அரசியல் தீர்வுத் திட்டத்தை பெற முடியாமல் போனால், ஈழத் தமிழரின் எதிர்காலச் சரித்திரத்தில், ஈழத் தமிழருக்கும் சம்பந்தனின் இடம் மிகப்பெரிய கேலிக்குரியதாகவும் மாறக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி 65



விலைவாசி மலையாக குடும்ப
நிலையறிந்து மழை என்றும் பாராது
பள்ளி செல்லு முன் பலகாரம் விற்று
கிள்ளி வந்த சிறு பணம் கொண்டு
வீட்டின் சுமை குறைக்கும் எம்
நாட்டின் தலைமகன் நீயன்றோ

**எஸ்.அம்சன்**
ஏழாலையூர்

பாலகன் அவன், வீதியில்
கரங்களில் வறுமையை தாங்கி நிற்கின்றான்
நூல்களுக்குப் பதிலாக..
கொரோனாவின் விளைவோ...
நாட்டின் விலையேற்றமோ யாரறிவார்...
வயது மீறிய முதிர்ச்சி அவன் வதனம் தனில் தான்
அவன் விழிகளின் ஏக்கம் யாவும்
தனை தாண்டிச்செல்லும்
தன் போன்ற சிறார்களின் புத்தகப்பைகளிலேயே

**க.யசோதா**
சுழிபுரம் கிழக்கு ,சுழிபுரம்

உலகில் சிறுவர் தினம் கொண்டாடி
பெருமிதம் கொள்ளும் மனிதர்களே!
வாழ்வில் வாட்டும் வறுமையால்
பள்ளிப் படிப்பிலிருந்து விலகி வீதியில்
கிண்ணத்தில் பழங்கள் விற்கும் இந்த ஏழைச்
சிறுவர் தொழிலாளி உங்கள் கண்களில்
ஏன் இன்னும் படவில்லை

**சு.ஜெயரூபன்**, பருத்தித்துறை

விளைகின்ற முளை இங்கு
வீதியோரம் – கல்வி
பயில்கின்ற பருவத்தில்
பகுதிநேரம்– பாடாய்
கனிவிற்ற காசில் தானே
கஞ்சி வேகும்–எப்போ
விலைவாசிக்கு அஞ்சி வாழும்
காலம் மாறும்?

**வி.சகாமதி**, முல்லை

படபடக்கும் விழிகள்
பழம் சுமக்கும் கரங்கள்
பாலகன் பார்வையோ
பாதையில் செல்லும்
பாவனையாளர் மீது
பள்ளி செல்லும் வயதில்
பாலகன் படும்பாடு
பார்ப்பவள் கண் கசியுமே!

**சி.சிவரம்யா**
யாழ்ப்பாணம்

என் வறுமையில்
கல்வி கண்ணை மூடிக்கொண்டது
பணத்துக்காக இதை விற்கவில்லை
என் குடும்பம் வாழ்வதற்காக
விழி வைத்து காத்திருக்கின்றேன்
வழிப்போக்கர்களுக்காக.....

**யோ.கலுஷகரன்**
திருநெல்வேலி.

விலைவாசி உயர்வால் விதி வந்து விளையாட
பல கோடி துன்பம் பனி போல உனை மூட
உருகாமல் கரையாமல் உன் நெஞ்சம் நிலையாக
பள்ளி மறந்து பாதையோரம் நீ நின்று
தரமான விலைபேசி அவமானம் இல்லாமல்
சோற்றுக்காய் பல கோப்பை பழம் விற்று
வீட்டுச்சுமை தாங்கும் சுமை தாங்கி நீ அல்லவா

**கும்பவாழியான்**, உடுப்பிட்டி

அன்னையின்
அரவணைப்பில்
வாழ வேண்டிய பிஞ்சு
அரைச்சாண் வயிற்றுக்கு
ஆகாரம் தேட
கொட்டும் வெயிலில்
மருண்ட விழியோடு
யாருமற்ற வீதியில்
தட்டில் பழம் வைத்து
காத்திருக்கிறான்

**சி.வினோதினி**
யாழ்ப்பாணம்

கொரோனாவால் வாழ்வாதாரத்தை
இழந்த போதும் இங்கே
கைகளும் கால்களும் ஊனமாகவில்லை
இந்த சிறுவனுக்கு.....
வெயில் வாட்டிய போதும்
குடும்பத்தின் வயிற்றுப்பசி
தீர்ப்பது மட்டுமே அவனது
கொள்கை ஆகின்றது

**ஜெ.சரண்ஜா**, திருநெல்வேலி

நாட்டின் பொருளாதாரம்
நாளும் போகும் போக்கில்
ஒருவேளை உணவை உண்ண
சிறுவர் உழைப்பும் உதவுகின்றது
விலைவாசி சிகரம் தொட்டதால்
கலைந்து போனது கனவுகள்
வீதியோர வியாபாரமும் எதிர்பார்த்த
விடிவை வாரித் தரவில்லை

**க.நாகராசா**
நுணாவில், சாவகச்சேரி

புத்தகம் விரித்துப்
படிக்கும் பருவத்தில்
வீதியில் கடைவிரித்து
பழம்விற்றுப்பசியாறும்
நிலைகொண்ட
வளநாட்டின் வரலாறு
இவனோடு முடியட்டும்

**ரி.சுசிகலா**
மண்டான்

பிஞ்சு வயிறு காயும் பசியில்
விளையும் பயிரும் தெருவில்
விடியலை தேடி பழுத்த பழங்கள் விற்று
பஞ்சம் தீர்க்கும் கோலம்
கல்வி ஞானம் கூட
கரைந்து போகும் நிலைமை

**மதுசுதன்**,
வற்றாப்பளை.

**பரிசு பெறும் கவிதை**

கல்விச் சாலையில் கற்று விட்டு
காப்பெற் சாலையில் பழம் விற்கும் பையனிவன்
உழைத்தால் தான் உலை வைக்க முடியுமென
நிலையுணர்ந்த சிறுவனிவன்
எதிர்காலம், ஏக்கங்களை தொலைத்து
நிகழ்கால தாக்கங்களை நினைத்து
நிற்கும் சிறு மலரிவன்

**எஸ்.கோதீஷன்**, திருகோணமலை

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**

**14.01.2022**

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555




இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை[illegible] உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

# படலை

ஆதலால் திறந்த படலை தானாக பையவே (மெல்லவே) சென்று மூடத்தக்க வகையில் படலையின் திறக்கும் பக்கத்தின் மேல்நுனியில் கயிறு அல்லது சங்கிலி பிணைக்கப்பட்டு திறக்கும் பக்கத்தின் கப்பில் இணைக்கப்பட்ட வளையத்தினூடே அவற்றைச் செலுத்தி நுனியில் கல் / பாரமான மரத் துண்டு / இரும்பு கட்டப்படும். திறக்கப்பட்ட கதவு (கல்லின்) பாரம் கீழே போகப்போக தானே வந்து மூடும். இவ்வாறு அமையும் படலையே ஆரம்பத்தில் சங்கடப்படலையாகக் கூறப்பட்டது. சங்கடம் - அங்குமின்றி இங்குமின்றி நடுவில் நிற்றல், சங்கடப்பட்டு நிற்றல் எனக் கொள்ளப்பட்டு படலை உள்ளும் இன்றி வெளியிலும் இன்றி நிற்றலால் அது சங்கடப் படலையாயிற்று எனலாம்.

ஆரம்பத்தில் ஒற்றைப்படலையாக மூன்று நான் கடி அகலத்திலும் சராசரி நான்கடிக்கும் ஆறு அடிக்கும் இடைப்பட்டதாகவும் இருந்த படலை வண்டில் போதல், பின் வாகனம் போதல், எனும் வசதிவாய்ப்புக்கு ஏற்ப இரட்டைப்படலை, மூவலகுப் படலைகளாக மாறியது. அதேபோல படலையை உருவாக்கப் பயன்படும் பொருட்களின் அடிப்படையில் படல், மரப்படலை, மூங்கிற்படலை, கிடுகுப்படலை, கருக்குமட்டைப்படலை, சிலாகைப் படலை, தகரப்படலை, இரும்புப்படலை எனப்பலவாறு மாறியது. இரும்புப்படலைகள் பெரும்பாலும் மேற்பகுதியின் வேல் அமைப்பில் இருந்தமை சமயப் பாரம்பரியத்தின் வழியும் பாதுகாப்பின் வழியும் சிந்திக்கத்தக்கது. குறித்த வீட்டுக்காரரின் கலையியல் ஈடுபாடு, பொருளாதாரம் என்பவற்றுக்கேற்ப படலைகள் அமைக்கப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை எம்மிடம் "படலை" எனும் சொல் வழக்கில் இருந்தது. "Gate" எனும் ஆங்கிலச்சொல் பின்காலனியத்தின் வழி அதனைக் காவு கொண்டுவிட்டது. சமகால வாழ்வில் "நவீனம்"எனும் பெயரில் அழகியலும், தனித்த பராம்பரியமும், மற்றவர்க்கு உதவும் திண்ணையுடன் கூடிய படலைகளும் காணாமல் போயின. வந்தாரை வரவேற்கும் அடையாப் படலைகளும் வாசற்கோலமும் காணாமல் போய் "நாய் கடிக்கும் கவனம்" எனும் "வந்தவரை உள் நுழையாதே" என எச்சரிக்கும் பலகைகள் காட்சி தந்தன. இன்று அதற்கும் அப்பால் சென்று பின்காலனித்துவ ஒற்றைக் கலாசாரத்தின் வழி நீளத்திலும் அகலத்திலும் பெருத்த கருநிறகேற் (geat) வந்துவிட்டது. உள்ளே வீடுகளும் பெருத்து உயர்ந்துவிட்டன. நுழைவாயில் பெருந் தடுப்பாயிற்று.

வீட்டிலுள்ளவர் அழைப்பு மணியோசையின் வழி அழைக்கப்பட, உயர்வகை நாயின் ஒலி முதலில் வரும். கேற்றில் உள்ள சிறுதுளை வழி அல்லது கமரா வழி வந்தவர் யார் என அறியப்பட்ட சில நிமிடங்களின் பின் அடைக்கப்பட்ட அந்நெடுங்கதவு சிறிதே நெகிழ்ந்து வழிவிட்டால் உள்நுழையலாம். அன்றேல் வந்தவழி ஏகலாம். அதற்கு பெயர் "பாதுகாப்பு". படலை கேற்றாகி எம்மை அந்நியமாக்கிற்று. கேற்றுக்களைப் பூட்ட வேண்டியதில்லை ஏனெனில் அது திறந்திருப்பதில்லை. கேற்றினூடாகவோ அல்லது அதன் மேலாகவோ தகரப்பேணிகளை நீட்ட ஏலாது. 'விசர்'செல்வங்களும் காணாமல் போயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிச்சம் எம்முள்ளே தான்!

○ ம.மயூரபாலன்

கலியுகம் என்பது எல்லா யுகங்களிலும் மிகவும் இருண்ட காலம்எனக்கருதப்படுகின்றது. இந்தக் கலியுகம் எவ்வாறு ஆரம்பித்தது என்பதற்கு ஒரு கதை உள்ளது.

கலியுகம் எல்லா இடங்களிலும் பரவி வேரூன்றி இருந்தது. அது இறுதியாக பரீக்ஷித் என்னும் அரசனது நாட்டினுள் வர முயற்சி செய்தது. ஆனால் அந்த அரசன் அதற்கு அனுமதிக்கவில்லை. அப்பொழுது 'அடைக்கலம் கேட்பவர்களுக்கு தஞ்சம் கொடுக்க வேண்டியது ஒரு அரசனின் கடமை' என கலியுகம் வற்புறுத்திக்கூறியது. அதற்கு வேறு எங்காவது இருக்க இடம் கொடுத்தால் கலியுகம் தனது வேலையைக் காட்டிவிடும் என்ற காரணத்தினால் அதனைக் கண்காணிப்பதற்காக அரசன் தனது புத்தியில் அதற்கு இடம்கொடுத்தான். அந்தக் கணத்தில் இருந்து அரசனின் வீழ்ச்சி ஆரம்பித்தது. அவன் தவறான தீர்மானங்களை எடுக்க ஆரம்பித்தான். பின்னர் அவை அவனது அழிவுக்கு வழிவகுத்தன.


ஆயிரம் ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற இந்தக் கதையை கேட்ட பொழுது அதற்கும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நவீன யுகத்துக்கும் என்ன தொடர்பு உள்ளது என எண்ணிப் பார்க்கவேண்டியுள்ளது. அதனை சிறிது ஆழமாகச் சென்று அலசிப் பார்த்தோமென்றால் இன்றைய கலியுகத்தின் உண்மையான தன்மை என்ன என்பதனை எங்களால் காணக்கூடியதாக இருக்கும். இன்று உலகத்தின் ஒரு புறம் பலகோடி தொன்கள் எடையுள்ள உணவுப் பொருட்கள் விரயமாக்கப்படும் அதே நேரத்தில் உலகின் மறு புறத்தில் பல கோடி மக்கள் பட்டினியால் இறந்து கொண்டிருக்கிறார்கள். செல்வந்த நாடுகளில் வாழும் மக்களின் ஆடம்பர வாழ்க்கையை உறுதி செய்வதற்காக பல ஏழை நாடுகளில் மக்கள் தமது உயிரைப் பணயம் வைத்து வேலை செய்ய வேண்டியுள்ளது. அதற்கு எடுத்துக்காட்டாக 2013ஆம் ஆண்டு பங்களாதேஷில் ஆடைகள் தயாரிக்கும் நிறுவனத்தின் கட்டடம் இடிந்து விழுந்ததில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மரணமாகி இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றதை காணலாம்.

மனிதனின் அத்தியாவசிய தேவைகளான உணவு, நீர் என்பவற்றுக்கான உரிமைகள் கூட பெரிய பெரிய நிறுவனங்களுக்கு விற்கப்பட்டுள்ளன. அதன் விளைவாக ஒரு சில நிறுவனங்கள் அதிக இலாபம் அடைகிறார்கள். ஆனால் தனது மிகவும் கடினமான உழைப்பினால் அந்த உணவை மக்களுக்கு வழங்கும் ஏழை விவசாயி தற்கொலை செய்கிறான். அது மட்டுமன்றி அளப்பெரும் கருணையினால் மனிதகுலம் ஆனந்தமாக வாழவேண்டும் எனும் காரணத்துக்காக தமது வாழ்வை அர்ப்பணித்த மகான்களின் வார்த்தைகள் கூட இன்று பதிப்புரிமை எனும் வளையத்தினுள் முடக்கப்பட்டு விடுகின்றன. உதாரணத்துக்கு 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்று முழங்கிய பாரதியாரின் பாடல்களை பதிப்புரிமை எனும் சிறையினுள் அடக்கி பணம் தேடும் பொருளாக மாற்றுவதற்கு எவ்வளவோ முயற்சிகள் நடைபெறுகின்றன.

இவ்வாறு கலியுகத்தின் அறியாமையின் இருள் கடுமையாக இருக்கும் இந்தக் காலத்திலே, பொய்கள் நிறைந்த இந்த உலகத்திலே எங்களது வாழ்க்கையை அமைதியை நோக்கி எடுத்துச் செல்வது மிகவும் கடினமாக உள்ளது. காசே தான் கடவுள் ஆக இருக்கும் இந்தக் காலத்திலே மக்களின் நலத்தை யாரும் கவனத்தில் எடுப்பதாக தெரியவில்லை. நாம் அருந்தும் சிறிய குளிர்பான போத்தல்களில் பத்து பதினைந்து கரண்டி சீனி உள்ளது என்பதனை யாரும் நமக்கு கூறுவதில்லை. நாம் விரும்பி உண்ணும் உணவுகளை அழகாக காட்சிப்படுத்துவதற்காக உபயோகிக்கும் இரசாயனப் பொருள்கள் எமக்கு புற்றுநோய் போன்ற கொடிய வியாதிகளை எடுத்து வருகின்றன என்று யாரும் எங்களுக்குச் சொல்லுவதில்லை. பிரபல்யமான விஞ்ஞானிகள் கூட பணத்துக்காக உண்மையை பொய்யாக மாற்றி கூறும்பொழுது எது உண்மை?, எது பொய்? என்பது ஒரு தெளிவில்லாத விடயமாக கலங்கிப்போய் உள்ளது.

இன்று நாங்கள் தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும் எனும் நிலைக்கு தள்ளப்பட்டு விட்டோம். இதுவரை எவை எல்லாம் நம்மைக் காப்பாற்றும் நமது வாழ்வில் ஆனந்தத்தை எடுத்து வரும் என நம்பி இருந்தோமோ அவைகள் ஒன்றும் வேலை செய்வது போல தெரியவில்லை. வயது செல்லச் செல்ல எங்களால் இதனைத் தெளிவாக காணக்கூடியதாக உள்ளது. நாம் இதுவரை எதனைச் செய்து வந்தோமோ அதனை அவ்வாறே தொடர்ந்து செய்யப்போகிறோமா அல்லது வேறு ஏதாவது ஒன்றை முயற்சி செய்து பார்க்கப் போகிறோமா என்பது எங்களில் தான் தங்கியுள்ளது. இப்பொழுது நாம் தெரிவு செய்யவேண்டிய நேரம் எம் முன்னே உள்ளது.

நாம் இதுவரை முயற்சி செய்யாத ஒரு வழி உள்ளது. அந்த வழியைப் பற்றி திருமூலர் மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார். 'மாலை விளக்கும் மதியமும் ஞாயிறும் சாலவிளக்கும் தனிச்சுடர் அண்ணலுள் ஞாலம் விளக்கிய நாதன் என் உள்புகுந்து ஊனை விளக்கி உடனிருந் தானே' என கூறுகின்றார். அதாவது சந்திரனுக்கும் சூரியனுக்கும் ஒளி கொடுக்கின்ற அந்த சக்தி தான் உண்மை ஞானத்தின் தலைவன். அவன் எனது உள்ளத்தில் புகுந்து ஊனுடலை ஒளி மயமாக்கினான். என் உயிருடன் பொருந்தி நின்றான் எனக் கூறுகின்றார். கலியுகத்தின் அறியாமை இருளை அகற்றக் கூடிய அந்த வெளிச்சம் எம் உள்ளே உள்ளது.



இதுவரை நாம் எமது கேள்விகளுக்கான விடைகளை வெளியே தேடினோம். இப்பொழுது அதற்கான விடைகளை நம் உள்ளே தேடுவதற்கான நேரம் வந்துவிட்டது. இதுவரை மற்றவர்கள் எங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என எண்ணி வாழ்ந்து வந்தோம். இப்பொழுது படைத்தவன் எங்களைப்பற்றி என்ன நினைப்பான் என யோசித்து வாழ வேண்டிய நேரம் வந்துவிட்டது. வாழ்க்கை எனும் இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் முற்றும் முழுதாக அதன் பயனைப் பெற்றுக்கொள்வது எங்கள் கையில் உள்ளது.



# ஊர்ப்புதினம்

○ இராகவன்

அம்மா இப்படிச் சொன்னாப் போல ஒரு பருப்பமான முள்முருக்கங்கதியாலை வெட்டி, ஒரு கார்ட்போட் மட்டையை எடுத்து, வெட்டி அளவு பாத்து, டபிளா மடிச்சு,வேப்பம் பிசினால ஒட்டினார். அது நல்ல மிதப்பாய் வந்திச்சுது. இப்ப ஏற்கனவே வெட்டிச் சீவி வைச்சிருந்த முள்முருக்கங்கதியால அந்த கார்ட்போட்டில வைச்சு, பென்சிலால ஒரு வட்டங்கீறிப் போட்டு, அந்த வட்டத்தை வெட்டியெடுத்திட்டு அதை முள்முருக்கங்கதியாலுக்குள்ள நுழைச்சு, பேந்து கீழுக்கு உருவிக் கொண்டு வந்துவிட்டுட்டு சில பொருத்து வேலையளைச் செய்தார். எல்லாம் முடிஞ்சு பாத்தால் அது ஒரு புது மண்வெட்டியாய் மாறியிருந்தது. எனக்கு அதைப் பாக்க வலு புளுகமாயிருந்திச்சுது.

"வாடா மருமகா! என் அழகு மன்மதா! இந்த மம்பெட்டியை வைச்சு நீயும் தோட்டஞ்செய்யடா! மரக்கறித் தோட்டஞ் செய்யடா!" எண்டு பாடிக் கொண்டு அந்த மண்வெட்டியை என்னிட்டந் தந்தார். நான் அதைத் தூக்கித் தோளில வைச்சன். "அவன் தானக்கை அசல் கமக்காரன்" எண்டு குலமக்கா கையைத் தட்டிச் சிரிச்சுப் போட்டு எனக்கு சொக்கில கொஞ்சிவிட்டா. ஒரே வெக்கமாய்ப் போச்சு. அந்த மண்வெட்டியோட வீட்டை வந்தாப்போல அப்பா, மூத்தண்ணா, இளையண்ணா எண்டு எல்லாரும் அந்த மண்வெட்டியை எடுத்துத் திருப்பித் திருப்பிப் புதினமாப் பாத்திச்சினம். பவுத்திரம்! இவன் நிகழ்ச்சி முடிக்கிற வரைக்கும் மம்பெட்டி மம்பெட்டியாயிருக்கோணும்" எண்டு அவையளுக்கு அம்மா சொன்னா. நேசறிக் கலைவிழாவிலயும் அந்த மண்வெட்டி தான் கதாநாயகனாயிருந்திச்சுது. பேபியக்கா அதை வாங்கி வடிவாப் பாத்திட்டு 'சுப்பர்! சுப்பர்!!



ஆர் செய்தது?" எண்டு கேட்டா. "இவன்ர மாமன்காறன்தான் மினக்கெட்டுச் செய்து குடுத்தவன்" எண்டு அம்மா சொன்னா. "இந்தப் பார்மர் ரோல் (Farmer Role) உமக்கெண்டே வந்தாமஞ்சிருக்குப் பாத்தீரா?" எண்டு பேபியக்கா என்ர முதுகில தட்டிக் கொண்டே சொன்னா. எனக்குச் சரியான கூச்சமாயிருந்திச்சுது. நேசறியில என்னோட கூடப் படிச்சாக்களெல்லாம் மண்வெட்டியை வாங்கி மேலுங் கீழுந் தடவிப் பாத்திச்சினம்.


"ஏய்! என்ன புதினம் வேண்டிக்கிடக்கு? எல்லோரும் உங்கடையுங்கடை இடங்களுக்குப் போங்கோ! போய் நிகழ்ச்சியளுக்கு வெளிக்கிடுற ஒழுங்குகளைக் கவனியுங்கோ" எண்டு பேபியக்கா ஒரு வெருட்டில போட்டாப்போல எல்லாருங் கலைஞ்சு போச்சினம்.

மண்வெட்டி என்ர கைக்கு வந்திச்சுது. ஒரு மகாராசாவின்ர கையிலயிருக்கிற வீரவாள் மாதிரி அந்த மண்வெட்டி என்ர கையிலயிருந்திச்சுது. "ம்... கெதியா வா! உன்னை வெளிக்கிடுத்த வேணும்" எண்டு அம்மா என்னை மறைவாய்க் கூட்டிக் கொண்டு போய் நெற்றியில திருநீறு பூசிப்போட்டு சேட்டைக் கழட்டிக் காற்சட்டைக்கு மேல ஒரு சின்ன நாலுமுழத்தை வடிவாச் சுத்திக் கட்டிவிட்டா. நான் மண்வெட்டியைத் தூக்கித் தோளில வைச்சன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மோடிக்கு வந்த சோதனை

மயூ

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பஞ்சாப் மாகாணப் பயணம் பெரும் சர்ச்சையாகியிருக்கின்றது. அங்குநிகழ்வொன்றுக்குச் சென்ற மோடியின் வாகனத் தொடரணி வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளால் வழிமறிக்கப்பட்டமையே இந்தச் சர்ச்சையின் மையப் புள்ளி.

இப்போது காங்கிரஸ் கட்சியின் பிடியில் இருக்கும் பஞ்சாப் மாநிலம், விரைவில் சட்ட மன்றத் தேர்தலை எதிர்நோக்கியிருக்கின்றது. ஆட்சியைத் தக்க வைக்கும் முயற்சிகளில் காங்கிரஸ் தீவிரம் காட்டும் அதேநேரத்தில், ஆட்சியைப் பிடிப்பதற்கான நடவடிக்கைகளில் ஏனைய கட்சிகளும் இறங்கியிருக்கின்றன.

பாரதிய ஜனதாக் கட்சியும் தேர்தலை இலக்கு வைத்து பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. பிரதமர் நரேந்திர மோடி பெரும் திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நோக்குடன் கடந்த புதன்கிழமை பஞ்சாப் மாநிலம் சென்றிருந்தார். இந்திய நாணய மதிப்பில் 42 ஆயிரத்து 750 கோடி ரூபா மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவது, கட்சி சார்ந்த நிகழ்களில் கலந்து கொள்வது என்று பல நிகழ்ச்சி நிரல்களுடன் அவர் பஞ்சாப் பறந்திருந்தார்




பிரதமர் நரேந்திர மோடி புதன்கிழமை காலை விமானம் மூலம், பஞ்சாப்பின் பதிண்டாவில் வந்திறங்கினார். அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் ஹுசைனிவாலாவில் உள்ள தேசிய தியாகிகள் நினைவிடத்துக்குச் செல்வது அவரது அடுத்த திட்டம். ஆனால் மழை மற்றும் மோசமான வானிலையால் ஹெலிகொப்டர் பயணத்தைத் தொடர முடியவில்லை. 20 நிமிடங்கள்வரை மோடி காத்திருந்தபோதும் வானிலை சீராவதாகக் காணவில்லை.

பயணத் திட்டம் மாற்றப்பட்டு மோடி, வீதி வழியாக நினைவிடத்துக்குச் செல்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. பாதுகாப்பு அதிகாரிகளின் ஆலோசனை பெற்று மோடி வீதி வழியாகப் பயணத்தை ஆரம்பித்தார்.

தேசிய தியாகிகள் நினைவிடத்திலிருந்து சுமார் 30 கிலோமீற்றர் தொலைவில்தான் அந்த சர்ச்சைக்குரிய சம்பவம் நடந்தது.

பிரதமரின் வாகனத் தொடரணி மேம்பாலம் ஒன்றை அடைந்தபோது, போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் வீதியை மறித்துப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். அதனால் மோடியின் வாகனத் தொடரணி பாலத்தில் சுமார் 20 நிமிடங்கள் வரை பயணத்தைத் தொடர முடியாது தவித்தது. மோடி வாகனத்தில் காத்திருந்தார். அதன்பின்னர் அவர் பயணத்தை இரத்துச் செய்து அங்கிருந்து பதிண்டா விமான நிலையத்துக்குத் திரும்பிச் சென்றார். இந்தியப் பிரதமர் வீதியில் வழிமறிக்கப்பட்டு 20 நிமிடங்கள் காக்க வைக்கப்பட்டமை பெரும் பாதுகாப்புக் குறைபாடாக நோக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருக்கும் பஞ்சாப் முதல்வர் சரண்ஜித் சிங் சன்னி, "பிரதமரின் பாதுகாப்பில் குளறுபடி எதுவும் இல்லை. பிரதமர் கலந்து கொள்ளும் கூட்டத்துக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை நான் மேற்பார்வையிட்டேன். நிகழ்ச்சி நடக்கும் இடத்துக்கு பிரதமர் ஹெலிகொப்டரில் செல்லும் திட்டம்தான் முதலில் இருந்தது. ஆனால், கடைசி நிமிடத்தில் அவர் சாலை வழியாக செல்ல இருப்பதாக திட்டம் மாற்றியமைக்கப்பட்டது." என்று விளக்கமளித்திருக்கின்றார். பா.ஜ.க மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி, "காங்கிரஸ் மோடியை வெறுக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் இப்போது அவர்கள் நாட்டின் பிரதமருக்கு தீங்கு விளைவிக்க முயற்சித்தி ருக்கின்றனர். பிரதமர் செல்லும் வழியில் போராட்டக்காரர்கள் எப்படி வந்தார்கள்? பிரதமரின் பாதை பற்றிய தகவலை வழங்கியவர் யார்? இது வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல. இது ஒரு சதி "என்று தெரிவித்திருக்கிறார்.

ஆனால், பா.ஜ.கவினரின் கூற்றுக்களை மறுத்துள்ள பஞ்சாப் முதலமைச்சர், "பிரதமர் கலந்து கொள்ளும் பொதுக்கூட்டத்தில் 70 ஆயிரம் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஆனால், வெறும் 700 பேர் மட்டுமே கூட்டத்தில் இருந்தனர். எனவே, அதிருப்தி அடைந்த பிரதமர் பயணத்தை ரத்துச் செய்துவிட்டாரெனத் தெரிகிறது. பிரதமரைக் காக்க எனது உயிரையும் கொடுத்திருப்பேன். ஆனால், அவருக்கு அப்படி எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை. பா.ஜ.கவினர் இதை வைத்து அரசியல் செய்யக் கூடாது "என்று கூறியிருக்கிறார்.

அரசியலுக்கு அப்பால் 15 முதல் 20 நிமிடங்கள் வரை இந்தியாவின் பிரதமர் மேம்பாலத்தில், போராட்டம் நடத்தியவர்களுக்கு இடையே சிக்கியிருந்தமை பாரதூரமாகவே நோக்கப்படுகின்றது. அதுவும் அந்தப் பகுதி பாகிஸ்தான் எல்லையில் இருந்து வெறும் பத்து கிலோமீற்றர் தூரத்தில் உள்ளமை ஆபத்தின் தன்மை எத்தகையதென்பதைக் காட்டியுள்ளது. இந்தியப் பிரதமரின் பயணங்களின்போது பாதுகாப்பைப் பொறுத்தவரை சிறப்புப் பாதுகாப்புக் குழுவினர், பிரதமரின் தனிப் பாதுகாப்பை அவரது அருகே இருந்து கவனித்துக் கொள்வார்கள். மீதமுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை மாநில அரசு கவனித்துக்கொள்கிறது.

இந்திய மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய உளவுத்துறை அதிகாரிகளின் கூற்றுப்படி, பிரதமரின் பாதுகாப்பு ஏற்பாடுகள், மாற்று ஏற்பாடுகள் தொடர்பாக பஞ்சாப் மாநில பொலிஸாருடன் இடைவிடாது தொடர்பைப் பேணியதாகவும், போராட்டக்காரர்களின் நடமாட்டம் குறித்து அவர்களை எச்சரித்தபோது, பிரதமருக்கு முழுப் பாதுகாப்புத் தருவதாக மாநில பொலிஸ் அதிகாரிகள் உறுதியளித்திருந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

ஜனநாயக நாட்டில் போராட்டம் நடத்த எல்லோருக்கும் உரிமை உண்டு. ஆனால், அது பிரதமர் செல்லும் வழியில் சாலை மறியல் செய்துதான் வெளிப்படுத்தப்படும் என்றால் அதை தேச பாதுகாப்புடன் இணைத்துப் பார்க்க வேண்டிய கட்டாயம் எழும். அது பாரதிய ஜனதாக் கட்சி ஆளும் அரசின் பிரதமரானாலும் சரி, வேறு கட்சி ஆளும் அரசின் பிரதமரானாலும் சரி இதில் அரசியலுக்கு அப்பாற்பட்டு பிரதமரின் பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலாக மட்டுமே கருத வேண்டும் என்று தமிழகத்தின் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பஞ்சாப் பயண ஏற்பாடு குளறுபடி விவகாரத்தில் மாநில அரசு ஏற்கனவே உயர்நிலைக் குழு விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறது. இந்திய மத்திய உள்துறையும் ஒரு விசாரணைக் குழுவை அமைத்து எங்கு பிரச்சினை நடந்தது என்பதைக் கண்டறிந்து அறிக்கை தர உத்தரவிட்டிருக்கிறது.


விவசாயச் சட்டங்களை மத்திய அரசு திரும்பப் பெற்றுக்கொண்டதையடுத்து , விவசாயிகள் போராட்டத்தை கைவிட்டுள்ளனர். ஆயினும் விவசாயிகளின் ஏனைய கோரிக்கைகள் இன்னமும் மத்திய அரசால் நிறைவேற்றப்படவில்லை. போராட்டத்தில் 700க்கும் மேற்பட்ட விவசாயிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டமை, உத்தரப்பிரதேசம் லக்கிம்பூர் விவசாயிகள் பேரணியில் பா.ஜ.க. மத்திய இணை அமைச்சர் மகன் அஜய் மிஸ்ராவின் கார்மோதி விவசாயிகள் கொல்லப்பட்ட சம்பவம், கண்ணீர்ப் புகைக்குண்டுகள், தடியடிகள், டிராக்டர்கள் வராதபடி சாலைகளில் இரும்புக் கம்பிகள் பதித்தது. முள்கம்பி வேலிகள் சுற்றப்பட்ட பேரிகாட் என ஓராண்டுகளில் மத்திய அரசால் எதிர்கொண்ட அழுத்தங்கள் அவ்வளவு எளிதில் விவசாயிகள் மனதிலிருந்து அகன்றுவிடவில்லை.

அதன் வெளிப்பாடே பதிண்டா விமான நிலையத்தில் மோடி-இந்தியாவின் பிரதமர்-"நான் பதிண்டா விமானம் நிலையம் வரை உயிருடன் திரும்பியதற்கு உங்கள் முதல்வருக்கு நன்றி சொன்னேன் என்று கூறுங்கள்" என ஆத்திரமாக கூறிவிட்டு புறப்பட்டுச் செல்லுமளவுக்குக் கொண்டு வந்திருக்கின்றது. தமிழகத்துக்கு 12ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வரவிருந்தார். பஞ்சாப் சம்பவத்தின் பின்னர் அவரது பயணம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. கொரோனாத் தொற்றுப்பரவல் காரணமாக அவரது வருகை பிற்போடப்பட்டுள்ளது என்று கூறப்பட்டாலும், தமிழகத்திலும் இவ்வாறு எதிர்ப்புகள் கிளம்பலாம் என்ற அச்சமும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. ■

# அடேயப்பா, இவ்வளவு பெரிதா?

உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகம் எங்குள்ளது எனத் தெரியுமா? சந்தேகமேயில்லை, எகிப்தில்தான் அந்த மிகப்பெரிய அருங்காட்சியகம் உள்ளது. சுமார் 4 லட்சத்து 91 ஆயிரம் சதுரமீற்றர் பரப்பளவைக் கொண்ட இந்த அருங்காட்சியகத்தை, ஒரே சமயத்தில் 1200 பேர் பார்வையிட முடியும்.

அந்தளவுக்கு விசாலமானது. கூடவே பார்வையாளர்களுக்காக 8 உணவகங்கள், ஒரு நவீன ஹொட்டல் என்பனவும் இந்த அருங்காட்சியகத்தில் உண்டு. பண்டைய எகிப்திய மன்னர்களின் வாழ்க்கைமுறையை விவரிக்கும் வகையிலான ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தொல்லியல் பொருள்கள் இங்குண்டு. 2020 ஜனவரி இந்த அருங்காட்சியகம் திறந்துவைக்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மின்னல் முரளி

## எளிமையில் ஒரு பிரமாண்டம்

○ கானா பிரபா

இந்தப் படத்தைப் பாதி கடக்கும் போது ஒருவர் மீது பெரும் எரிச்சல் வந்தது.

அவர் வேறு யாருமல்ல குரு சோமசுந்தரம் தான்.

அந்தக் கடுப்பு குரு சோமசுந்தரம் என்ற நடிகன் மீதல்ல, அவர் ஏற்றிருந்தது "சிபு" என்ற அந்தப் பாத்திரம் மீது. அந்த அளவுக்கு பார்வையாளனுக்கு வெறுப்பை அள்ளி விதைக்கக் கூடிய. போகிற போக்கில் அள்ளிவீசி விட்டுப்போகும் யதார்த்த நாயகனாக மிளிர்ந்தார்.

அதே சமயம், அந்த சுய நிலை பிறழ்ந்த சிபுவுக்குள் இருக்கும் ஒரு காதல், அதை அப்படியே மெல்ல மெல்ல விரித்துக் காட்டும் பாங்கு என்று சினிமாத்தனமே இல்லாத உணர்வோட்டம்.

அதுவும் ஒரு பக்கம் ஊரே திரண்டு வந்து சிபுவை அழிக்க நினைக்கும் போது, தன் காதலி இப்போதாவது தன் தூய அன்பைக் கண்டுணர்ந்தாளே என்ற பெருமிதத்தில் அவளின் கையை வாஞ்சையோடு அள்ளி முகத்தில் ஒற்றிக் கொஞ்சி உடைந்துருகும் கணத்தில் அப்படியே தூக்கிச் சாப்பிட்டு விடுகிறார் படத்தின் எல்லாக் கதாபாத்திரங்களையும். இந்தப் படத்தின் நிஜ நாயகன் இவரே.

ஏமாற்றம் எழும் போது தன் உதட்டைப் பிரித்து வெற்றுச் சிரிப்பால் காட்டி விட்டு நடத்தும் ஊழித் தாண்டவம் இருக்கின்றதே. அப்பப்பா....!

இயக்குநர் ராஜ் முருகன் "ஜோக்கர்" படத்தின் கதையை குரு சோமசுந்தரத்திடம் போகிற போக்கில் சொன்ன போது."ஏன் என்னையே நாயகனாக்கி விடுங்களேன்" என்று கேட்டாராம். அவ்வளவு தன்னம்பிக்கை கொண்ட ஒரு நடிகன்.

இந்த "மின்னல் முரளி"யில் அவர் ஏற்ற வேடம் கூட ஹாலிவூட் "ஜோக்கர்" கதாபாத்திரத்தின் இந்திய வார்ப்புத்தான்.

தலைவாசல் விஜய், பசுபதி என்று நம் சமகாலத்துக் குணச்சித்திரங்களை மலையாள உலகம் சுவீகரித்து வெகு அழகான பாத்திரங்களை எல்லாம் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த வரவுகளில் சமீபத்தில் குரு சோமசுந்தரத்தை அள்ளிக் கொண்டு போய் விட்டார்கள். அந்த வகையில் தமிழர்கள் ஏமாளிகள் தான்.

"மின்னல் முரளி" படம் ஒரு அமானுஷ்ய சக்தியை மையப்படுத்திய சாகச நாயகன், வில்லன் என்ற கதைக் கோட்டில் இருந்தாலும், இதனை இந்தியச் சூழலுக்கு குறிப்பாக தென்னிந்தியச் சூழலுக்கான ஒரு எளிமையான கதையோட்டத்தில் கொடுத்த விதத்திலும் ஒரு அற்புதத்தை திரையில் நிகழ்த்தியிருக்கின்றது.

இன்று கனவு நாயகனாக நவநாகரிகத்தில் மிளிரும் டோவினோ தாமஸைக் கூட ஒரு சாதாரணனாக்கி, அவர் பின்னால் சுற்றும் காதலி. கைகொடுக்கும் கராத்தே பெண் மணி என்று யாருக்குமே சினிமாத்தனம் பொருந்திய அழகில்லை. எல்லோருமே இயல்பான கிராமத்தான்கள்.

ஏன் சுசின் ஷியாமின் இசை கூட ஒரு தளர்ந்த கிட்டாரிசையும், மெல்லிய ஆவர்த்தனங்களுமாகத் தான் பல இடங்களில். முக்கிய காட்சிகளில் கூட இசையில் பிரமாண்டம் அதி உச்சமாகத் தொனிக்கவில்லை.

ஆனால் அதுதான் இந்த எளிய சினிமாவின் அணிகலனாக அமைந்திருக்கின்றது.

படத்தின் எல்லாப் பாத்திரங்களுமே அஞ்சு வர்க்கீஸ் உட்பட, அவரவர் எல்லையில் இருந்து சிறப்பாகப் பண்ணியிருந்தாலும் அந்த சகோதரி மகன் குண்டுக் கண்ணாடி சகிதம் தன் மாமனின் அமானுஷ்ய சக்தியை அறிந்த ஒரேயொருவனாகக் கொடுப்புக்குள் சிரிப்பும், திகில் காட்டும் முகமுமாக நவரசத்தில் கலக்குகின்றான். "ஆண்டவர் நம்மை நோக்கி வருவார்" என்று போதனை செய்யும்



அந்த செபக் கூட்டத்தின் சுவரை உடைத்துக் கொண்டு பாயும் மின்னல் முரளி. "என் மூஞ்சில குத்திய அவன் மூஞ்சியைப் பதம் பார்க்காம விடமாட்டேன்" என்ற சபதம் வைக்கும் கராத்தேப் பெண்மணி "ப்ரூஸ்லீ பிஜி" மின்னல் முரளியை அடையாளம் கண்டு அவனுக்குக் குத்து விட்டுத் தன் சபதத்தை நிறைவேற்றிய பின்னர் [illegible] என்று சின் [illegible] படம் முழுக்க. தொண்ணூறுகளில் மலையாள சினிமா உலகின் ஜனகராஜ் தனமான ஹாஸ்ய நாயகன் ஹரிரீ அசோகன் இங்கே ஒரு அனுதாபத்தை அள்ளிப் போகும் வறிய அண்ணனாக. அந்தத் தொங்கும் கண்களின் பரிதவிப்பிலேயே மனுஷன் ஒரு தேசிய விருதுக்கான உச்சத்தைத் தொட்டு நிற்கிறாரே?

தம் பழைய காதலர்களின் திருமணத்துக்குப் போகாவிட்டால் நமக்குப் பொறாமை என்று ஊர் சொல்லும் என்று கல்யாணத்துக்குக் கிளம்புவது, அந்தப் புறக் கிராமத்தின் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் எளிமை, ஒரு சூப்பர் ஹீரோ கதையிலும் கையில் கிடைத்த லுங்கியையோ, வேட்டியையோ முகத்தில் புதைத்து விட்டு உருமாற்றிப் பயணிக்கும் மின்னல் "முரளிகள்" என்று செதுக்கியிருக்கிறார்கள்.

படத்தின் தொடக்கத்தையும், முடிவையும் தீயோடு முடிச்சுப் போட்டு அலுப்புத்தட்டாது பயணிக்கும் விறுவிறு திரைக்கதை வேறு.

ஒரு சூப்பர் ஹீரோ பின்னணியில் உணர்ச்சிபூர்வமான காதல் கதையையும், வாழத் துடிக்கும் இளைஞனின் போராட்டத்தையும் அழகாக முடிச்சுப் போட்டு மோத விட்ட விதத்தில் "மின்னல் முரளி"களுக்கு ஏராளம் நட்சத்திரங்களை அள்ளி வீசலாம்.

---

அரிமாநேத்ரன்

# துப்பறியும் AK67

'காமிக்ஸ்' தொடர் 08

சித்திரம் – எஸ்.வினோபா

கதை – இ.சு.முரளிதரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org